எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்ணினம்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 07 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | மார்ச் 2026

மகளிர் தினச் சிறப்பிதழ்

முனைவர் ராஜேஷ்வரி

எங்கெங்கு காணினும் சக்தி
சக்தி பெண்ணிதழ்

மலர் -2 இதழ் - 07 மார்ச 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

உள்ளடக்கம்

1. **மகளிர் நாள் எதற்கு?** 2
மு.செந்தாமரை

2. **புராணங்களும் சாஸ்திரங்களும் விளக்கும் பெண்களின் இயல்பு** 3
சோஃபியா சாக்ரட்டிஸ்

3. **கவிதை** 12
அர்ஷா

4. **தாக்ஷாயிணி வேலாயுதன்.** 13

5. **எழுத்தாளர் ஜெயா மாறன்** 16
மேனகா நரேஷ்,

6. **கவிதை** 25
- வர்த்தினி பர்வதா.

7. **பண்டித ரமாபாய் சரஸ்வதி: சமூகப் புரட்சியின் விடிவெள்ளி** 26
லயன் MJF வெங்கடேசன்

8. **வண்ண விளக்குகள்- மரபுக் கவிதைகள் - பூங்கொடி பராங்குசம் - ஒரு பார்வை** 29
பொன். குமார்

9. **கவிதை** 35
டாக்டர் ஜலீலா முசாமில்

10. **அனைத்துமாக விளங்கும் இறைநிலையை உணர்ந்து வாழ்க!** 36
முனைவர். இல.ஜெயந்தி

11. **"உண்மையில் நாம் யார்?"** 42
தேமொழி

12. **தண்டவாளப் பறவை** 44
இரம்யா நடராஜன்

13. **ஆயிஷா அம்மையார்** 50
சம்சுல் ஹுதா பானு

14. **கவிதை** 52
ஸ்ரீவாரி மஞ்சு

15. **ஆள்வோர் யாராயினும் நாட்டைத் தாய்போல் காத்திடுக!** 53
இலக்குவனார் திருவள்ளுவன்

16. **தமிழ் இலக்கிய ஆளுமை - முனைவர் செ.ராஜேஸ்வரி** 55
மேனகா நரேஷ்

17. **ஹைக்கூ கவிதைகள்** 65
Dr ஜலீலா முசாம்மில்

18. **பேமஸ் சர்க்கஸ்.** 66
சம்சுல் ஹுதா பானு

19. **இல்லாமை அறியா இல்லாள்** 75
சசிகலா விஸ்வநாதன்

20. **கவிதை** 79
ரிஸ்கா முக்தார்

21. **ARANYANI** 80
VIJENI

22. **மார்கரெட் நைட்** 89

23. **ராஜ்குமாரி அம்ரித் கவுர்** 91
லயன் MJF வெங்கடேசன்

Shakthi Pennithazh
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

மகளிர் நாள் எதற்கு?

மங்கையராய்ப் பிறந்திடவே
மாதவம்
செய்திடல் வேண்டுமாம்!

அடுப்பூதும் பெண்ணிற்குப் படிப்பெதற்கு
என்பதையொழித்தோமாம்!

பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள்
நாம் நடத்த வந்தோமாம்!

வானில் பறந்தோம்!
விண்ணில் கால் பதித்தோம்!

அச்சம் துறந்தோம்!
உச்சம் தொட்டோம்!

சிதையாத நெஞ்சமும்
கொண்டோம்!

பெண்ணவளை
பேதை முதல் பெதும்பை வரை
போதையில் கொல்லும் மிருகங்களை வதைத்தோமா?

பசுந்தோல் போர்த்திய
புலிகளே

தன் குழந்தை
பேத்தி மகள் போல்
தான் மற்ற பெண்களும்
என்று...
என்று உணர்வீர்கள்?

கல்விச் சாலை முதல்
இல்லம் வரை எங்குமில்லை
பாதுகாப்பு!

தாயாக நாங்கள்
அச்சமற்று
இருப்பது எப்போது?

பிறந்த பச்சிளம் குழந்தை
முதல் மூதாட்டி வரை
இடுகாட்டிற்குச் செல்லும்
போதுதான்
விடுதலையா?

என்று விடியும்?
என்று இக்கொடுமை ஒழியும்?

பெண் பிறப்பு இருக்கும் வரையா???

சிந்தித்தோமா?

ஆண் குழந்தையைப் பண்புகளோடு வளர்ப்போம்!

பெண்ணின் மகத்துவம் அறிய
வைப்போம்!

மு.செந்தாமரை
எழுத்தாளர்
கவிஞர்

பெண் என்பவள் வெறும் உடலா தொடர் 5

புராணங்களும் சாஸ்திரங்களும் விளக்கும் பெண்களின் இயல்பு

சோஃபியா சாக்ரட்டிஸ்
சென்னை

பெண்ணை மனித சமுதாயம் ஒரு உடலாக மட்டுமே மதிக்கின்றது. மனம் உள்ள மனுஷியாக மதிப்பது கிடையாது என்பதைப் புராணங்களும் சாஸ்திரங்களும் உறுதி செய்கின்றன.

சிவபுராணத்தில் திரிலோக சஞ்சாரியான நாரதர் பிரமனிடம் பிறந்த பெண்ணான பஞ்சசூடையிடம் பெண்களின் இயல்பு பற்றி வினவுகிறார். அதற்கு அவள் பெண்களின் இயல்புகள் இழிந்தவை. அதை எப்படி ஒரு பெண்ணான நானே உங்களிடம் எடுத்துரைப்பேன் என்று தயங்கினாள். நாரதர் வற்புறுத்திக் கேட்டதும் பெண்ணின் இயல்புகளை எடுத்துரைக்கிறாள். சிவ புராணத்தில் காணப்படும் இப்பகுதியைப். படிக்கும்போது ஆண்கள் பெண்ணின் இயல்பு பற்றி கொண்டிருந்த மோசமான அபிப்பிராயத்தை ஒரு பெண்ணின் வாயிலாக விளக்கியிருப்பதை உணரலாம்.

சிவபுராணக் கருத்துகள்



பஞ்சசூடை, "நாரதரே! நற்குலத்தில் பிறந்தவர்களும் அழகிகளும் கணவர்களுடன் கூடியவர்களாக இருந்தாலுங்கூட உள்ளூற மனதளவில் கட்டுப்பாடுடன் இருக்கமாட்டார்கள். இவ்வுலகத்தில் மங்கையரைக் காட்டிலும் பாவம் செய்யும் ஜன்மங்கள் வேறு கிடையாது. கணவன்வேதசாஸ்திரங்களைஉணர்ந்துசெல்வந்தனாகவும் அழகியொருத்திக்கு சுவாதீனனாக இருந்தாலும் மங்கையர்கள் அவனை அன்பு பாராட்டி அணைக்காமல் சந்தர்ப்பம் வாய்க்கும்போது வேறு ஆண்களை விரும்பிக் கூடுவார்கள்.

பெண்களான எங்களுக்கு, கணவனாக வாய்த்தவன் பேரழகனாக இருந்தாலும், வெட்கமின்றிப் பிற ஆடவரைக் கள்ளத்தனமாக கூடி மகிழ விரும்பும் பெருந்துர்க்குணம் எங்களுக்கு உண்டு.

கணவன் அருகில் இருந்தாலும் அன்போடு நடத்தினாலும் அவனை விட்டுவிட்டுத் தான் விரும்பியவன் தொலைவில் இருந்தாலும் அவன் தன்மீது சிறிதும் அன்பு பாராட்டாமல் இருந்தாலும் அந்த அயலான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தி மங்கையர்கள் மகிழ்வார்கள்.

பெண்கள் ஒருபோதும் பதிபக்தியுடன் இருப்பது இல்லை. ஆனால் தங்களை நாடிக்கெஞ்சும் ஆடவர் கிடைக்காமையாலும் பலர் கண்டு அவமதிப்பார்களே என்னும் பயத்தாலும் சந்தர்ப்பம் வாய்க்காததாலும் கணவன் மீது பக்தி கொண்டவர்களாகத் தோற்றம் அளிப்பார்கள்!

தக்கவன் என்றும், தகாதவன் என்றும், கிழவன் என்றும், வாலிபன் என்றும், அழகன் என்றும், அவலட்சணமானவன் என்றும் மங்கையர்கள் பார்க்க மாட்டார்கள். பயம், தயை, செல்வம், உணவு, தாய், தந்தையர், கணவன் இவர்களுக்குப் பயந்தும் கணவனுக்கு கட்டுப்படுவார்கள்.. நல்ல குலமங்கையரும் ஆடை அணிமணிகளை அணிந்து தங்கள் விருப்பப்படியே திரியும் தாழ்ந்த குலப்பெண்களுக்குச் சமமாகவே நடக்க விரும்புகிறார்கள்.

கணவன், அதிக அன்போடு நடத்தி வருவானாயினும் கூனன், குருடன், நொண்டி, குரூபி முதலிய அன்னிய ஆடவரையே பெண்கள் தம் மனதுக்குள் விரும்புவதும் உண்டு. பெண்கள் மனம் விரும்பாத ஆடவனே உலகத்தில் இல்லை. பெண்கள் தங்களுக்கு ஆடவர்கள் நெருங்கிவராவிட்டால் தங்கள் சிருங்கார சேஷ்டைகளால் அவர்களை தன் வசப்படுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள். தங்கள் மோக விருப்பத்திற்கேற்ற பிற ஆடவர் கிடைக்காததாலும் உற்றார் உறவினர்கள் உணர்ந்தால் தண்டிப்பார்களே என்ற பயத்தாலுமே அவர்கள் பயந்தவர்களாக இருப்பார்களேயன்றிச் சத்தியத்திற்குப் பயந்து நடப்பதில்லை.

மங்கையர்கள் மரத்தின் இலைகளைப் போலவும் கடலின் அலைகளைப் போலவும் அலைகிற மனமும், கடலின் ஆழத்தைப் போல கண்டறியப் படாத மன ஆழமும் கொண்டவர்கள்.

எத்தனை விறகுகளாலும் திருப்தியடையாத நெருப்பைப் போலவும், எத்தனை ஆற்று நீர்களாலும் திருப்தி யடையாத பெருங்கடலைப் போலவும், எத்தனை உயிர்களாலும் பூர்த்தி அடையாத எமனின் ஊரான எமபுரம் போலவும், எத்தனை ஆடவரை அடைந்தும் அவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள்.

தேவ முனிவரே! மற்றொரு இரகசியமும் உண்டு. அதையும் உமக்குச் சொல்லுகிறேன். தாம் ஆசைப்பட்ட பொருள்களை எல்லாம் வாங்கிக் கொடுப்பவனாக இருந்தாலும் தன் கணவனிடம் மனம் விரும்பி நிலைத்து நிற்க மாட்டார்கள். விலை உயர்ந்த ஆடை, நகைகள், மலர் மணம், வாசனைத் திரவியம் முதலியவற்றை அளவின்றி அவர்களின் ஆசை அடங்கக் கொடுத்தாலும் காமத்தில் திருப்தி அடையாததைப் போல, அவர்கள் அவற்றை ஏற்பதில் திருப்தி அடைய மாட்டார்கள்.

அந்தகன், சமனன், மிருத்யு, பாதாளம், வடவாக்கினி, வாளின் முனை, விஷம், கிருஷ்ண சர்ப்பம், பிரளயாக்கினி இவற்றின் குரூரம் எல்லாம் மங்கையரின் குரூரத்திற்கு ஈடாகமாட்டா. பிரமதேவர் ஐம்பெரும் பூதங்களைப் படைத்தபோது பாவங்கள் யாவையும் சேர்த்தே பெண்களைப் படைத்திருக்கிறார்!" என்று பஞ்சசூடை நாரதருக்குச் சொன்னாள். இதே கருத்துடைய ஓர் உரையாடல் பகுதி மகாபாரதத்திலும் உண்டு.

காம சாஸ்திரத்தின் சாமுத்ரிகா லட்சணம்

சாஸ்திரங்களில் இருந்து ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம். காம சாஸ்திரம் என்ற நூலின் ஒரு பகுதியாக சாமுத்திரிகா லட்சணம் விளங்குகின்றது. இப்பகுதி தனி நூலாகவே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு எல்லா காலத்திலும் லாபகரமாக விற்றுக் கொண்டிருக்கின்றது. சாமுத்திரிகா லட்சணம் ஆண், பெண்களின் உடல் உறுப்புக்களை வர்ணித்து வகைப்படுத்தி இன்ன வகையான வடிவம் வண்ணம் வளப்பம் கொண்ட உறுப்பு இருப்பவர்களின் குணங்கள் இன்னுன்ன வகையாக இருக்கும் என்று உடம்பை வைத்து குணத்தை வரையறுத்துள்ளது.

அன்றாடம் சந்திக்கும் பெண்களை சாமுத்ரிகா லட்சணப்படி மதிப்பீடு செய்தால் உண்மை வரையறைக்குள் அது பொருந்தி வராது. எனினும் நெடுங்காலமாகவே பெண்களின் உறுப்புகளை வைத்தே சமூகம் அவர்களின் நடத்தையை எடை போடுகின்றனது. இந்த தவறான மதிப்பீட்டு முறை ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக தொடர்கின்றது. ஒரு சில பொருளற்ற நம்பிக்கைகளையும் விளக்கங்களையும் மட்டும் இங்கு நடைமுறையோடு பொருத்திப் பார்க்கலாம்.

சான்றாக, சாமுத்ரிகா இலட்சணப்படி நீண்ட விரல்கள் இருப்பவள் அறிவாளியாகவும் சமயோசித புத்தி உள்ளவளாகவும் இருப்பாள். நீண்ட விரல்களும் நீண்ட கைகளும் கொண்டவள் ராஜ யோகம் பெற்றவள். இவளுக்கு நாடாளும் யோகம் உண்டு. தமிழகத்தை 15 ஆண்டுகளாக ஆட்சி செய்த முன்னாள்

முதல்வர் ஜெயலலிதாவின் விரல்கள் குட்டையானவை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

கால் கட்டை விரலை விட இரண்டாவது விரல்

நீளமாக இருந்தால் அவள் கணவனை மதிக்க மாட்டாள். தன் மனம் போன போக்கில் நடந்து கொள்வாள் என்கிறது சாஸ்திரம். இந் நம்பிக்கையை வைத்து தனுஷ் மற்றும் சாயாசிங் நடித்த ஒரு படம் தயாரிக்கப்பட்டு வெற்றி நடை போட்டது.

கால் சுண்டு விரல் தரையில் படாமல் உயர்ந்து நின்றால் அந்தப் பெண் குடும்ப வாழ்க்கைக்கு ஒத்து வர மாட்டாள். கணவரை ஏழையாக்கி விடுவாள். ஒரு கால் கட்டை விரல் வளைந்தும் மறு கால் கட்டைவிரல் வளையாமலும் இருந்தால் அந்தப் பெண்ணுக்கு இரண்டு கணவர்கள் இருப்பார்கள். அது அங்கீகாரத்துடனும் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம்.

மூக்கு நுனி கூர்மையாக இருந்தால் அவள் புத்திசாலியாகவும் அரசாளும் யோகம் கொண்டவளாகவும் இருப்பாள் என்ற கருத்து முற்றிலும் பொருந்தாத கருத்தாகும். இந்த லட்சணம் தென்னாட்டுப் பெண்களுக்கு ஒத்து வராது. ஏனென்றால் தென்னாட்டுப் பெண்கள் திராவிட முகச்சாயலும் உடல் அமைப்பும் கொண்டவர்கள் . இவர்களின் மூக்கு உருண்டும் சதைப் பிடிப்பாகவும் இருக்கும். சாமுத்ரிகா இலட்சணப்படி திராவிடப் பெண்கள் புத்திசாலிகள் இல்லையா என்ற வினா எழுகின்றது. சாஸ்திரங்கள் வடநாட்டு அசிரியர்களால் எழுதப்பட்டதனால் அவை வடநாட்டுப் பெண்கள் அறிவாளிகள் அமைதியானவர்கள் ஒழுக்கமுடையவர்கள் என்றும் தென்னாட்டுப் பெண்கள் மோசமானவர்கள் என்ற கருத்திலும் எழுதப்பட்டுள்ளது.

சாமுத்ரிகா லட்சணத்தில் ஆரிய பெண்களை உயர்த்தியே உருவ வர்ணனையும் அதன் பொருளும் அமைந்திருக்கும். மூக்கு நுனி லேசாகத் தூக்கி எப்படி இருந்தால் அவளுக்கு காம உணர்வு அதிகம் இருக்கும். மூக்கின் நுனிப்பகுதி உருண்டு காணப்பட்டால் அவர்கள் புத்திசாலிகள். ஆனால் மனிதர்களை பயன்படுத்திவிட்டு தூக்கி எறிந்து விடுவார்கள். பொருட்களை பேரம் பேசி விற்பதில் கெட்டிக்காரர்கள். குடமிளகாய் போல் உருண்ட மூக்கு உடையவர்கள் மற்றவர்களை அடக்கி ஆள்வார்கள். இக்கருத்து உருண்டை மூக்குடைய தென்னாட்டுப் பெண்கள் பற்றிய தவறான் கணிப்பை இந்த சாமுத்ரிகா லட்சணம் அளிக்கின்றது.

கண்கள் பற்றி மட்டுமே நூற்றுக்கும் மேற்பட்ட குறிப்புகள் உள்ளன. உருண்டை விழியும் வெள்ளை விழித்திரையும் இருந்தால் அவர்கள் திருட்டுத்தனம் செய்பவர்கள். தென்னாட்டு முக அமைப்பு உடையவர்களுக்கு விழிகள் உருண்டு காணப்படுவது இயற்கை. நோயற்றவர்களுக்கு விழித்திரை வெண்மையாக இருக்கும். அவ்வாறெனில் இவர்கள் அடக்கி ஆளும் அதிகார குணம் படைத்தவர்களா என்றால் இல்லை சாமுத்திரிகா லட்சணத்தின் கருத்துப்படி திராவிட முகச்சாயல் உடையவர்கள் அசுர வழிப் பெண்கள்

என்றும் ஆரிய உடல் அமைப்பு கொண்டவர்கள் தேவர் குலப் பெண்கள் என்றும் நம்புவதற்கிணங்க வகைப்பாடுகள் உள்ளன.

பற்களின் இடையே இடைவெளி இருந்தால் அவர்கள் காம உணர்ச்சி மிக்கவர்கள் என்கிறது காம சாஸ்திரத்தின் சாமுத்ரிகா லட்சணம். கலைத்துறையைச் சார்ந்த கர்நாடக சங்கீதப் பாடகி எம் எஸ் சுப்புலட்சுமி, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, திரைப்பட நடிகை தேவிகா போன்றவர்களுக்கு முன் இரு பற்களின் இடையே இடைவெளி உண்டு. பற்களுக்கு இடையே இடைவெளி இருந்தால் அவர்கள் காம உணர்ச்சி மிகுந்தவர்கள் என்று முத்திரை குத்துவது நியாயமற்ற செயலாகும். வடவர்களின் சாஸ்திரம் பெண்களைப் பகுத்தறிவற்ற முறையில் வகைப்படுத்தி உள்ளது.

பெண்களின் தலை மயிர் மென்மையானதாக இருந்தால் அவர்கள் வாழ்க்கை சுகமாக இருக்கும். ரொம்ப கஷ்டப்படாமல் அமைதியாக வீட்டில் இருந்தபடியே வாழ்க்கையே நடத்துவார்கள். முடி சற்று மொரமொரப்பாக உறுதியாக இருந்தால் அவர்கள் வாழ்க்கை உழைத்துச் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கும் என்ற வகைப்பாடு வடநாட்டுப் பெண்கள் தென்னாட்டு பெண்கள் என்ற பிரிவினைக்குள் அடங்கும். மேலும் தலைமுடிக்கும் வாழ்க்கையின் சொகுசுக்கம் தொடர்பு படுத்துவது பொருத்தமற்றதாகும். வடக்கேயும் இதே மென்மையான தலைமுடி கொண்ட உழைக்கும் வர்க்கத்துப் பெண் கள்உள்ளனர். உழைத்து சாப்பிடும் பெண்களின் தலை முடி வெயிலில் காய்ந்து உலர்ந்து மொர மொரப்பாக்க இருப்பது இயற்கை. வெயிலில் உழைப்பதால் முடி காய்ந்து போகிறது. முடி உலர்ந்து போய் இருப்பதால் இவர்கள் ஏழைகளாக இருக்கவில்லை.

ஆண்களுக்கான சாமுத்திரி லட்சணமும் வரையறுக்கப்பட்டுள்ளது. அதுவும் ஆரியர்களின் உடல் அமைப்பு கொண்டவர்கள் சிறந்தவர்கள் என்றும் திராவிடர்களின் உடல் அமைப்பு கொண்டவர்கள் சரித்திரர்கள் முரடர்கள் இரக்கமற்றவர்கள் என்றும் பாகுபாடு ப்செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆண்களால் புராணங்களும் சாஸ்திரங்களும் பெண்களை உடலமைப்பை கவனித்து அவர்களின் உள் இயல்புகளை தாமாகவே தவறாக மதிப்பிட்டு இருப்பதை வரலாறு நெடுகிலும் காண்கிறோம்.

ஜோதிட சாஸ்திரம்

ஜோதிட சாஸ்திரம் ராசி நட்சத்திரங்களையே ஆண் பெண் என்று வகைப்படுத்தி உள்ளது. மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவை ஆண் ராசிகள். இவை நெருப்பு மற்றும் காற்று ராசிகள் ஆகும். மண் மற்றும் நீர் ராசிகளான

ரிஷபம் கடகம் தண்ணீர் விருச்சிகம் மகரம் மீனம் ஆகியவை பெண் ராசிகள் ஆகும். பெண் ராசிக்காரர்கள் மென்மையானவர்கள் என்பதால் அடங்கிப் போவார்கள்.

நட்சத்திரங்களில் பரணி ரோகிணி திருவாதிரை ஆயில்யம் மகம் பூரம் உத்திரம் சித்திரை சுவாதி விசாகம் கேட்டை பூராடம் உத்திராடம் அவிட்டம் ரேவதி ஆகிய 16 நட்சத்திரங்களும் பெண் நட்சத்திரங்களாகும் மிருகசீரிஷம் மூலம் சதயம் ஆகிய மூன்றும் ஆணும் பெண்ணும் அல்லாத அலி நட்சத்திரங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன மற்றவை ஆண் நட்சத்திரங்கள் ஆகும்.

பரத சாஸ்திரம்

பரத சாஸ்திரம் நாட்டியத்தில் வரும் பெண் கதாபாத்திரங்களை எட்டாக வகைபப்டுத்தி உள்ளது. எட்டும் ஆணுடன் வாழும் பெண்ணின் இயல்பு பற்றியது.

1. வாசக லஜ்ஜா - இவள் காதலனுடன் குலாவ தயாரான உடையில் இருப்பவள்.
2. காதலனை பிரிந்த ஏக்கத்தால் விரக தாபத்தால் வருந்தும் பெண் விரகோத் கண்டிதா
3. கணவனைத் (தன் பர்த்தாவை) தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவள் -சுவாதீன பர்த்ருகா
4. கணவனோடு அல்லது காதலனோடு கலகம் செய்பவள் *கலஹாந்திரிதா
5. காதலனை கண்டித்துப் பேசுபவள்- கண்டிதா
6. காதல் தோல்வியால் கலங்குபவள் - விப்ரலப்தா
7. கணவனுடன் எப்போதும் கூடிக் கலந்து சுகமாக வசிப்பவள் ப்ரோஷித பர்த்ருகா
8. கணவனை /காதலனை/ காமுகனை தேடி அலைபவள் -அபிசாரிகா. இச்சொல் மருவி அவிசாரி என்ற வசைச் சொல் தமிழில் புழக்கத்திற்கு வந்தது.

இவை எழும் பரதர் வகுத்துள்ள நாட்டிய சாஸ்திரத்தில் பெண்கள் ஏற்றுக் கொள்ளும் கதாபாத்திரங்கள் ஆகும். ஒரு கலைப்படைப்பில் பெண் என்பவள் ஒரு ஆணைச் சார்ந்து இருக்கின்ற நிலை மட்டுமே காட்சியாக காட்டப்படுகின்றது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

பெண்ணும் பூப்பும்

சமஸ்கிருதத்தில் ஒரு பழம்பெறும் பாடல் பெண்களுக்கும் மரத்துக்கும் உள்ள தொடர்பைக் காலங்காலமாகக் கூறி வருகின்றது. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் நாட்டில் மரம் செடிகொடிகளின் வளர்ச்சி பெண்களோடு தொடர்பு கொண்டுள்ளதாக மக்கள்

நம்பினர். பெண்களை பூவோடு ம் காய் கனியோடும் சாப்பிட்டனர். பெண் பருவம் எய்தினால் பூப்படைந்தாள் என்பர். கருச்சிதைவு ஏற்பட்டால் காய் விழுந்தது என்பர். பெண்ணையும் வளமையையும் இணைத்து பார்க்கும் நோக்கத்தில் இப் பாடல் கூறும் நம்பிக்கைகள் தோன்றியிருக்க வேண்டும்.

1. பெண்கள் காலால் உதைத்தால் அசோக மரம் பூ பூக்கும்
2. பெண்கள் சிரித்தால் செண்பகம் பூ பூக்கும்.
3. பெண்கள் பேசினால் நமேரு மரம் பூப் பூக்கும்
4. பெண்கள் தழுவினால் குரா மரம் பூப் பூக்கும்.
5. பெண்களைப் பார்த்தாலே திலகமரம் பூ பூக்கும்.

அகத்தியர் பாடலில் நால்வகைப் பெண்கள்

அத்தினி சித்தினி, சங்கினி பத்மினி என்றும் பெண்களை நான்காக வகைப்படுத்திய சித்தர் பாடல்கள் அகத்தியர் பெயரில் காணப்படுகின்றன..

பெருகுவதற்கு பெண்ணிடச் சாதி நாலும்
பிரித்து நாம் ஒவ்வொன்றாய்ப் பேசக் கேளு
வருவதற்கு வத்தினி தான் பிற்குலம் ஆகும்
யடவாணி சங்கினி தான் சத்திரிய குலமாகும்
வருவதற்கு வசியாளே சித்தினி தான் ஆகும்
வசனித்தோம் பத்மினி தான் சூத்திர குலமாகும்
நறுவதற்கு நாலு சாதி குலமே சொன்னோம்

காணப்பா புலத்தியனே பெண் சாதி நாலும்
கருவறிந்து சொல்லுகிறோம் வர்ணம் கேளிர்
பேணப்பா அத்தினி ஸ்தான்கேறும் பேணிப் பார் வெளுமை வர்ணம் பேதம் இல்லை
நாணப்பா சங்கினி தான் மஞ்சள் நிறமாகும்
நலமான சித்தினி தான் செழுமை நிறமாகும்
ஆணப்பா பத்மினி தான் கருப்பு வர்ணமாகும்
அருளினோம் நால்சாதி வர்ணம் இதுவாமே

அகத்தியர் என்ற பெயரில் தமிழக வரலாற்றில் பல புலவர்கள் இருந்திருக்கின்றனர் என்பதால் இவர் ஓர் அகத்தியர் என்று கொள்ளலாம். இவர் நான்கு வகை பெண்களில் வர்ணம் -சாதி பிரித்து நிறம் பிரித்து விளக்குகின்றார்.

பத்மினி என்ற பெண் நான்கு வகை பெண்களிலும் மிக உயர்ந்தவள். இவளை காணக் கிடைப்பதே அரிது. இவள் மிகுந்த அழகும் மென்மையும் வட்ட வடிவ முகமும் திரண்டு உருண்ட உடலும் உடையவள். இவள் சுகாசினி சுபாஷினி சாருஹாசினி என்ற மூவகைப் பண்பும் உடையவள். அதாவது மலர்ச்சியான முகம், இனிமையான சொற்கள், புன் சிரிப்புடன் கூடிய நடத்தை கொண்டவள். இவளைப் பார்த்தால் எதிரிகளும் தேவர்களும் வசியப்படுவார்கள். இவள் கருப்பு நிறத்தவள். செழிப்பான உதடுகளை கொண்டவள். இவளுக்கு உதட்டுக்கு மேலே பூனை முடி இருக்கும்

சங்கினி என்ற வகையைச் சேர்ந்த பெண்கள் பத்மினியை விட ஒரு படி குறைந்தவர்கள். இவர்களும் அழகானவர்கள் புத்திசாலிகள் சுறுசுறுப்பானவர்கள் ஆனால் சுதந்திரமாக செயல்படக்கூடிய கூடியவர்கள். எனவே அதிக சக்தி படைத்தவர்கள். மஞ்சள் நிறம் உடையவர்கள்

மூன்றாவது அஸ்திணி வகைப் பெண்கள், இவர்கள் பார்ப்பதற்கு இனிமையாகத் தோன்றினாலும் ஹஸ்தம் - யானையைப் போல் பருமன் ஆனவர்கள். தூங்கு மூஞ்சிகள். எப்போதும் தூங்கிக் கொண்டே இருப்பார்கள், அல்லது கேளிக்கைகளில் ஈடுபடுவார்கள். கணவன்மார்களின் முடிவுகளுக்கு கட்டுப்பட மாட்டார்கள். இவர்கள் பிரபுக்கள் வம்சத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எப்போதும் ஆடல் பாடல் கொண்டாட்டங்களிலும் உண்டு உடுத்து மகிழ்வதிலும் ஆர்வம் காட்டுவர்.

சித்தினி என்ற பெண் என்ற வகையினர் நீ ஒல்லிக்குச்சி உடம்புக்காரிகள். சித்தினி தன்னை அழகு படுத்திக் கொள்வதிலும் கலைகளிலும் மிகுந்த ஈடுபாடு உடையவள். ஏராளமான ஆடை ஆபரணங்களைச் சேர்த்து வைப்பாள். தூங்கும்போதும் தூங்கி எழும்போதும் மேக்கப்புடன் தான் இருப்பாள். இவளை அலங்காரி சிங்காரி ஒய்யாரி எனலாம். நரம்புகள் புடைத்துத் தெரிவதால் இவள் பச்சை நிறத்தவள். இவள் உடம்பு எப்பதும் சூடாக இருக்கும்.

கொக்கோகம் காட்டும் நால்வகைப் பெண்கள்

விஜயநகரப் பேரரசர் காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் தங்களுடைய ஆட்சி மொழியாக தெலுங்கு மற்றும் சமஸ்கிருதத்தைப் போற்றியதால் இக்காலத்தில் இருந்த அரசவைப் புலவர்களும் அரண்மனை மற்றும் கோயில் நிர்வாகிகளும் தெலுங்கும் சமஸ்கிருதமும் தெரிந்தவர்களாக இருந்தனர். இவ் இருமொழிகளிலும் இலக்கியங்களை படைத்தனர். ஸ்கந்த புராணம், மகாலாஸ்ய புராணம் (திருவிளையாடல்) போன்ற பல புராணங்களும் காம் சாஸ்திரம், கொக்கோகம் போன்ற நூல்களும் தமிழுக்கு மொழிமாற்றமும் செய்யப்பட்டன.

16ஆம் நூற்றாண்டில் தென்காசிப் பகுதியை ஆட்சி செய்த அதிவீரராம பாண்டியன் என்ற மன்னன் கொக்கோகம் என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தான். இந்நூலில் பெண்கள் நான்கு வகைகளை விளக்கும்போது வேறு வகையான காரணங்களை இம்மன்னன் எடுத்துரைத்தான்.

அத்தினி என்பவள் காண்பதற்கு இனிமையானவள். பத்தினி என்பவள் கரம் பற்றி திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்த ஏற்றவள். சித்தினி என்பவள் நினைத்தாலே இனிக்கும் கற்பனை சுகத்துக்கு ஏற்றவள். சங்கினி என்பவள் புணர்ந்தால் மட்டுமே இனிமை தருபவள் என்று நால்வகைப் பெண்களுக்கு இந்நூல் புதிய விளக்கம் அளித்தது. எத்தனை பேர் எத்தனை விளக்கங்கள் அளித்தாலும் அத்தனையும் உடல் உறுப்புகள் மற்றும் உடலுறவு சார்ந்த விளக்கங்களே ஆகும். பெண்ணின் ஒரே சமூகப் பயன் ஆணை மகிழ்விப்பதும் அவனுக்குப் பணிவிடைகள் செய்வதும் அவன் பரம்பரையை விளங்கச் செய்வதும் ஆகும். உடல் கவர்ச்சி, உடல் இன்பம், பிள்ளைப்பேறு தவிர்த்து இச்சமுகம் வேறு கதவுகளை பெண்களுக்கு திறந்து வைக்கவில்லை.

தமிழ் இலக்கியம் காட்டும் அவ்வையார் அதியமனின் நண்பராகவும் போர் தவிர்க்க இரு தரப்பினரிடமும் போய்ப் பேச்சு வார்த்தை நடத்தும் சமாதான தூதுவராகவும் தந்தையை இழந்த பாரி மகளிருக்கு மன வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்த நல விரும்பியகவும் திகழ்கிறார். ஆனால் அவரையும் பிற்காலத்தில் தோன்றிய கதை இளமை தவிர்த்து முதுமையை ஏற்றதாகவே புனைந்துரைக்கிறது. காரம் இளம்பெண்ணாக ஒருத்தியால் மேற்குறிப்பிட்ட செயல்களை செய்ய இந்த சமூகத்தில் வாய்ப்பில்லை. இளம்பெண் என்றால் ஆணின் துய்ப்புக்கு உரியவன் என்பதே சமூகத்தின் கட்டாயமாக இருந்தது. கலந்துபோன காதல் - அது

களைந்து போக மறுக்கும்
காலத்தின் தீராத சாபம்!

மனமெனும் மாயக் கிடங்கின்
ஏழு கடல்கள் தாண்டி...
யாரும் நுழையா அடவிக்குள்
பத்திரமாய் நான் புதைத்த காதல்
– அத்தனை எளிதில்
இடம்பெயரச் சம்மதிக்கவில்லை!

ஒருபுறம்...
நினைவுகளின் கருணையற்ற விரல்கள்
என் சுவாசக் குழாயை நசுக்க...
மறுபுறம்...
மரணத்தின் விளிம்பிலும் ஏனோ – உன்
பெயர் சொல்லித் தப்பிக்க
துளி காற்று மட்டும்
நுரையீரலுக்குள் யாசகம் கேட்டு நுழைகிறது!

அர்ஷா

தாக்ஷாயிணி வேலாயுதன்.

அரசியல் சட்டத்தை உருவாக்கிய 299பேரில், இருந்த #முதல் #தலித் பெண்மணி:ஒரே #தலித் #பெண்மணி..

பொதுவாக, வரலாற்றில், அன்றாட அரசியல் நிகழ்வுகளில் பெண்களின் பங்களிப்பு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் பங்களிப்பு வரலாற்று வெளிச்சத்தில் காணப்படுவதில்லை..

அப்படி, வரலாற்று வெளிச்சம் படராமல் மறக்கடிக்கப்பட்ட ஒரு ஆளுமை தான் தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்கள்..

1912ம் ஆண்டு,,ஜூலை மாதம்4ம் தேதி எர்ணாகுளம் மாவட்டம், முளவுக்காடு என்ற சிறு கிராமத்தில் பிறந்தவர் தான் தாக்ஷாயிணி அவர்கள்..

நீண்ட நெடிய போராட்டத்திற்கு பிறகு,1859ம் ஆண்டு, திருவாங்கூர் சமஸ்தானத்தில், பெண்களுக்கு தங்களது மார்புகளை மறைத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவு அப்போதைய மன்னர் உத்தரவிட்டடாலும் கூட, கொச்சி சமஸ்தானத்தில் நிலைமை அப்படி அல்ல..

தாக்ஷாயிணி அவர்கள் பள்ளிப்பருவத்தில் பள்ளிக்கு செல்லும் போது மார்பை மறைத்துச் சென்ற முதல் தலித் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது....

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்கு சென்று பட்டம் பெற்றவர், ஒரு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார்...

ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களை துடைத்தெறிய களமிறங்கினார் தாக்ஷாயிணி அவர்கள்....

அண்ணல் பாபாசாகிப் அம்பேத்கர், அண்ணல் காந்தியடிகள் ஆகியோரோடு தொடர்பு ஏற்பட்டது..

1940ம் ஆண்டு, காந்தியடிகளின் வார்தா ஆஸ்ரமத்தில் வைத்து, வேலாயுதன் அவர்களோடு திருமணம்.. காந்தியடிகளும், அன்னை கஸ்தூர்பா அவர்களும் சாட்சியாக, ஒரு தொழு நோயாளியான ஆஸ்ரமவாசி திருமணத்தை நடத்தி வைத்தார்...வேலாயுதன் அவர்கள், முன்னாள் ஜனாதிபதி K.R.நாராயணன் அவர்களின் சித்தப்பா தான்..

1945ம் ஆண்டு கொச்சி சட்டப்பேரவை உறுப்பினர்...

1946ம் ஆண்டு,டிசம்பர் மாதம்6ம் தேதி, நமது நாட்டின் அரசியல் சட்டத்தை உருவாக்க அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்..

அரசியல் நிர்ணய சபையில்,1948ம் ஆண்டு, நவம்பர் மாதம்,29ம் தேதி,தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்கள் நிகழ்த்திய வரலாற்று சிறப்பு மிக்க உரை மிகவும் புகழ்பெற்றது.

தீண்டாமை தொடர்பான அரசியல் சட்டத்தின் பிரிவு 17உருவானதில் தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்கள் பங்களிப்பு மிகவும் முக்கியமானது....

தீண்டாமை ஒழிப்பு குறித்த தாக்ஷாயிணி அவர்களின் உரையின் போது குறுக்கிட்ட சபையின் உதவி தலைவரான H.C.முகர்ஜி,"நீங்கள் ஒரு பெண் என்பதால் மட்டுமே இவ்வளவு நேரம் பேச அனுமதியளிக்கிறேன்"என்று கூறியுள்ளார்....

அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்கள் மொத்தம் 299பேரில்,15பேர் மட்டுமே பெண்கள்...; இவர்களில் ஒரே தலித் பெண்மணி தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்கள் மட்டுமே...

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக, அரசியல் சட்டத்தை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவராக, சுதந்திர போராட்ட வீராங்கனையாக, பெருவாழ்வு வாழ்ந்த தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்கள்,1978ம் ஆண்டு ஜூலை மாதம்20ம் தேதி காலமானார்...

வரலாற்று வெளிச்சம் படாமல் இருக்கும் தாக்ஷாயிணி வேலாயுதன் அவர்களை எப்போதும் நினைவு கொள்ளும் வகையில், கேரள இடதுமுன்னணி அரசு, இந்த ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும், பெண்கள் மேம்பாட்டுக்கு போராடும் ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கத்தொகையும் விருதும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.. கேரள, பெண்கள் மேம்பாடு/சுகாதாரத்துறை அமைச்சர் கே.கே. ஷைலஜா அவர்கள் இந்த அறிவிப்பை கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்தார்...

அமெரிக்கத் தமிழ் பெண் ஆளுமைகள்

எழுத்தாளர் ஜெயா மாறன்

அட்லாண்டா, வடஅமெரிக்கா

மேனகா நரேஷ்,
நியூஜெர்சி

அயலகத்தில் வாழ்ந்தாலும் தமிழைத் தன் மூச்சாகவும், தமிழ்ச் சிந்தனையைத் தன் செயலாகவும் கொண்டு இயங்கி வரும் ஆளுமைகளில் ஒருவர் ஜெயா மாறன். மதுரையில் பிறந்து வளர்ந்து, இன்று அமெரிக்காவில் வாழ்ந்துவரும் இவர், தொழில்முறை வாழ்க்கையில் நிதித்துறையில் உயர்ந்த பதவியில் பணியாற்றிக் கொண்டே, தமிழ்ச் சேவையையும் இலக்கியப் பணியையும் தன்னார்வத் துடிப்புடன் தொடர்ந்து வருபவர். மேடைப்பேச்சாளர், எழுத்தாளர், நாடக நடிகை, ஆய்வாளர் எனப் பல பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ஜெயா மாறன், சங்க இலக்கியம் முதல் திருக்குறள் வரை, குழந்தைகள் இலக்கியம் முதல் புலம்பெயர் தமிழர் வாழ்வியல் வரை, தமிழின் பல தளங்களில் தன் பங்களிப்பை வழங்கி வருகிறார். அவரது நேர்காணல் இதோ உங்களுக்காக!

வணக்கம் ஜெயா மாறன்!

1.உங்களைப் பற்றிய அறிமுகத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

என் பெயர் ஜெயா மாறன். நான் பிறந்தது,வளர்ந்தது ,படித்தது எல்லாமே மதுரையில். 1995 இல் திருமணமான பிறகு நான் அமெரிக்காவிற்கு வந்தேன் . கடந்த 15 ஆண்டுகளாக , ஜார்ஜியா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி என்னும் பல்கலைக்கழகத்தில், நிதித்துறையில் ,அஸோஸியேட் டைரக்டர் ஆஃப் ரிசர்ச் ஆபரேஷன்ஸ் என்ற பதவியில் பணி புரிகிறேன் . எனக்கு இரண்டு மகன்கள். பெரிய மகனுக்குத் திருமணமாகி கலிபோர்னியாவில் வசிக்கிறார். இரண்டாவது மகன் வட கரோலினாவில் வேலை செய்கிறார்.

2.உங்கள் தமிழார்வத்திற்கு உந்துதலாக இருப்பவர்கள் யார் ?

என்னுடைய தமிழார்வத்திற்கு உந்துதலாக இருந்தது அமெரிக்காதான்! தமிழ்நாட்டைவிட்டு தள்ளி வந்த பிறகு, தமிழ்ப்பற்றும், தமிழின் மதிப்பும் எனக்குத் தெரியத் தொடங்கியது என்று சொல்லலாம். அதற்குப் பிறகு இந்த ஆர்வத்தைத் தூண்டி விட்டவர் என்னுடைய கணவர் மாறன் . என்னுடைய மாமனார் தமிழார்வம் மிக்கவர். என் கணவருக்கும் தமிழ் மீது பற்று அதிகம். சிறந்த தமிழறிஞர்களை அறிமுகப்படுத்தி எனக்குத் தமிழார்வத்தை முதலில் ஏற்படுத்தியவர் என்னுடைய கனவர்தான். நான் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சங்க இலக்கியத்தைப் படித்துக்கொண்டிருக்கிறேன். நான் மேடைப் பேச்சாளராக விருப்பப்பட்டதால் நிறையச் சொற்பொழிவுகளைக் கேட்கிற பழக்கமும், அதற்காகப் படிக்க வேண்டிய தேவையும் எனக்கு வந்தது. அதனால் நான் மேடையில் பேச வேண்டும் என்கிற விருப்பமும் என்னைத் தமிழ் மேல் ஆர்வம் கொள்ளச் செய்தது. அப்படி நான் வியந்து ரசித்த பேச்சாளர்கள் பேராசிரியர் சுபவீ மற்றும் இலங்கை ஜெயராஜ் ஐயா ஆகிய இருவர். பேராசிரியர் சுபவீயின் மொழி நடை எனக்கு மிகவும் பிடிக்கும். அதேபோல் இலங்கை ஜெயராஜ் ஐயா அவர்களுடைய கதை சொல்லும் பாணியும், அவர் பேச்சில் உள்ள நயமும் பாராட்டுக்குரியது. இவர்களைப் போலப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்குள் விதைத்தது இவர்களுடைய பேச்சுதான். இந்த ஆர்வம் வெறும் கனவாகவே இல்லாமல் நினைவாவதற்கு முக்கியக் காரணம் இணையம்! இணையம் இருப்பதால்தான் எதையும் தேடிப் படிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைக்கிறது.

3.எழுத்துலகில் நீங்கள் நுழைந்த தருணம் எது? அந்த ஆரம்ப அனுபவத்தைப் பகிருங்கள்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் வெளியாகும் ''தென்றல்'' என்னும் இதழில் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுத ஆரம்பித்தேன். அதன் பின்னர் யூடியூப் சேனலில் சங்கப் பாடல்களைக் கதை வடிவத்தில் சொல்லத் தொடங்கிய போது ஏன் இந்தக் கதைகளைப் புத்தகமாக்க கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ''தமிழா விழி தமிழே வழி ''என்ற தலைப்பில் கதைகளைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டேன் . ''எங்கேயோ கேட்ட குறள்'' என்ற தலைப்பில் திருக்குறளை கதை வடிவத்தில் எழுதி இருக்கிறேன். முக்கியமாக இந்தச் சமுதாயத்திற்கு என் எழுத்து பயன்பட வேண்டும் என்று தோன்றி நான் எழுத ஆரம்பித்தது பிள்ளைகளுக்காகத்தான். அமெரிக்காவில் பத்து முதல் பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றிய போது அந்த வயதிலும் பல குழந்தைகள் தமிழைச் சரளமாக வாசிக்க முடியாமல் சிரமப்படுவதைக் கவனித்தேன் . இதற்குக் காரணம், அமெரிக்காவில் வாழும் பெரும்பாலான தமிழ் குழந்தைகள் தமிழை ஒரு பாடமாக மட்டுமே அணுகுவதுதான்.

ஆனால் ஆங்கிலத்தை அவர்கள் நான்கு அல்லது ஐந்து வயதிலிருந்தே வாசிக்கத் தொடங்குகிறார்கள். பாடப்புத்தகங்களைத் தவிர, 'ஃபன் ரீடிங்' எனப்படும் கதைகள், நாவல்கள் போன்ற பிற புத்தகங்களையும் வாசிக்கும் பழக்கம் அவர்களுக்கு இயல்பாக உருவாகிறது. இதற்கு மாறாக, தமிழை வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே கற்கும் வாய்ப்பே அவர்களுக்குக் கிடைக்கிறது. அதனால் தமிழுடன் அவர்களுக்கான தொடர்பு மிகக் குறைவாகவே இருப்பதை நான் நேரடியாகக் கண்டேன்.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், குழந்தைகளுக்குத் தமிழ் கதைப்புத்தகங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். இந்தியாவிலிருந்து சில புத்தகங்களைக் கொண்டு வந்து இங்கே அறிமுகப்படுத்த முயற்சித்தோம். ஆனால் இந்தியாவில் எழுதப்படும் பல கதைகள், அமெரிக்காவில் வாழும் தமிழ் குழந்தைகளின் வாழ்க்கை அனுபவங்களுக்குப் பொருந்தாதவையாக இருந்தன. அவற்றில் அமெரிக்க வாழ்க்கைச் சூழல் பிரதிபலிக்கப்படவில்லை.

மேலும், இங்கு வளரும் குழந்தைகளுக்குத் தெரிந்திருக்கும் தமிழ் சொற்கள் மிகவும் குறைவானவை. அவர்கள் பெற்றோரின் உதவி இல்லாமல், தாங்களே வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு எளிய மொழியில், அவர்களுக்குப் பரிச்சயமான சொற்களைக் கொண்டு புத்தகங்கள் எழுதப்பட வேண்டிய அவசியம் இருப்பதை உணர்ந்தேன்.

அந்தத் தேவையிலிருந்தே, குழந்தைகளுக்காக மிக எளிய தமிழில், அவர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் கதைப்புத்தகங்களை எழுதத் தொடங்கினேன்.

4. பெண் எழுத்தாளராக நீங்கள் சந்தித்த முக்கியமான தடைகள் அல்லது சவால்கள் என்ன?

எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி அம்மா ஒருமுறை ஒரு பேட்டியில் கூறிய கருத்து மிகவும் சிந்திக்கவைக்கும் ஒன்று. ஒரு ஆண் எழுத்தாளர் எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், வீட்டில் குழந்தை அழுதால், ''இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேறு பக்கம் செல்லுங்கள்; நான் நிம்மதியாக எழுத முடியவில்லையே!'' என்று சத்தமிடும் சூழல் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அதேபோல், அந்த எழுத்தாளருக்கான சாப்பாடும் காபியும் அவருடைய அறைக்கே வந்து சேரும். இவ்வாறான வசதியான சூழல் ஒரு பெண் எழுத்தாளருக்கு அவ்வளவு எளிதாக அமைவதில்லை. அப்படி அமைந்திருந்தால், இன்னும் எத்தனையோ பெண் எழுத்தாளர்கள் உருவாகியிருப்பார்களே என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

ஆனால் அமெரிக்காவில் வாழும் இந்திய சமுதாயத்தில், இந்த நிலை ஓரளவு மாறியிருப்பதாக நான் உணர்கிறேன். குறிப்பாக, அமெரிக்காவுக்கு வந்த பிறகு பல ஆண்கள் மனப்பான்மையில் மாற்றம் பெற்று, தங்கள் மனைவிகள் விரும்பும் செயல்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். நான் எழுதிக் கொண்டிருக்கும் நேரங்களில், எனக்கு டீ போட்டு தருவது, சாப்பாட்டைத் தட்டில் வைத்து எடுத்து வந்து தருவது போன்ற உதவிகளை என் கணவர் மகிழ்ச்சியுடன் செய்கிறார். அந்த வகையில், பெண் என்பதனால் எழுதுவதற்கு வீட்டில் எனக்கு எந்தத் தடையும் இல்லை.

எனினும், ஒரு எழுத்தாளர் என்ற நிலையில் நான் எதிர்கொள்ளும் சவால்கள் குறையவில்லை. சொல்ல வேண்டிய கதைகள் பல இருக்கின்றன; ஆனால் அவை அனைத்தும் என் கணினிக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றன. அவற்றைப் பதிப்பிப்பதே எனக்கு ஒரு இமாலயச் சாதனையாகத் தோன்றுகிறது. எனக்குச் சரியான பதிப்பாசிரியர்கள் கிடைப்பதில்லை. மேலும், நான் எழுதும் குழந்தைகளுக்கான படக்கதைகளுக்குப் படங்கள் வரையக் கலைஞர்களைக் கண்டுபிடிப்பதும் மிகக் கடினமாக உள்ளது.

இந்த எல்லாச் சவால்களையும் தாண்டி, சொந்த செலவில் புத்தகத்தை வெளியிட்ட பிறகும், அந்தப் புத்தகம் குழந்தைகளுக்குப் பிடித்திருக்கிறது என்று தெரிந்தாலும், இங்கே அதைப் பெருமளவில் விற்பனை செய்வது சாத்தியமாகவில்லை. அமெரிக்காவில் பல பள்ளிகளில் தமிழ் நூலகங்கள் இருந்தாலும், அத்தகைய நூலகங்கள் கூட என் புத்தகத்தை வாங்க விருப்பம் காட்டுவதில்லை; பெரும்பாலும் இலவசமாகப் பெறுவதற்கே விரும்புகிறார்கள்.

இவ்வளவு உழைப்பிற்குப் பிறகும், இதன் மூலம் வருமானம் எதுவும் கிடைப்பதில்லை. தமிழ் பணி என்பது ஒரு தொழிலாக இல்லாமல், தன்னார்வப் பணியாகவே மாறிவிடுகிறது. இதையே நான் இன்று ஒரு மிகப் பெரிய சவாலாக உணர்கிறேன்.

5. பெண் என்ற அடையாளமும், புலம்பெயர்ந்த தமிழர் என்ற அனுபவமும் உங்கள் படைப்புகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன?

பெண் என்ற அடையாளம் என் பேச்சுகளிலும், நான் எழுதிய சில கவிதைகளிலும் வெளிப்படும். குறிப்பாகப் பெண் விடுதலையைச் சரியாகப் புரிந்து கொள்ள நான் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறேன். என்னுடைய பட்டிமன்றப் பேச்சுகளில் அந்தக் கருத்தை மையமாக வைத்துப் பலமுறை பேசியுள்ளேன்.

'கண்ணகியா, மாதவியா?' என்ற வழக்காடு மன்றத்தில் நான் மாதவிக்காக வாதாடியதுடன், கோவலனே குற்றவாளி என்ற நிலைப்பாட்டையும் முன்வைத்தேன். அதேபோல், சங்ககாலப் பாடல்களில் அவ்வையார்,

வெள்ளிவீதியார், மாறோக்கத்து நப்பசலையார், காக்கைப் பாடினியார் ஆகிய பெண் புலவர்களின் பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு தனிப் பேச்சுகளையும் நிகழ்த்தியுள்ளேன்.

மேலும், நான் எழுதும் கதைகளில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியலை சித்தரிப்பதால், அதில் என் புலம்பெயர்ந்த தமிழர் என்ற அடையாளமும் வெளிப்படையாகத் தெரிகிறது.

6.அயலகத்தில் நீங்கள் ஆற்றிவரும் தமிழப்பணிகள் என்ன ?

நான் கடந்த 11 ஆண்டுகளாக மேரியாட்டா பகுதியில் உள்ள தமிழ் பள்ளியில் தன்னார்வல தமிழ் ஆசிரியராகச் செயல்பட்டு வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக, எங்கள் பகுதியில் உள்ள பொது நூலகத்தில் ஐந்து முதல் எட்டு வயது பிள்ளைகளுக்காகத் தமிழ் கதைகளைக் சொல்லும் பணியிலும் ஈடுபட்டுள்ளேன்.

நான் மேடைப்பேச்சாளர் என்பதால், கல்யாண மாலை போன்ற பெரிய மேடைகளிலும், சிறப்புப் பேச்சாளர்கள் – சிற்சபேசன் ஐயா, சாலமன் பாப்பையா ஐயா , பேராசிரியர் கு.ஞானசம்பந்தன், பட்டிமன்ற நடுவர் லியோனி ஐயா, அப்துல் காதர் ஐயா– போன்றோருடன் ஒரே மேடையில் பேசும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், பட்டிமன்றங்களில் திரு.ராஜா, திருமதி பாரதி பாஸ்கர், திருமதி கவிதா ஜவஹர் , திருமதி. பர்வீன் சுல்தானா மற்றும் வழக்கறிஞர் சுமதி ஆகியோருடன் இணைந்து பேசும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

தமிழகத்தின் பல கல்லூரி மாணவர்களுக்கு ஊக்கப் பேச்சாளராகவும் நான் இருந்துள்ளேன். அமெரிக்காவின் பல மாநிலங்களிலும், கனடாவிலும், பட்டிமன்றங்கள் மற்றும் நிகழ்வுகளில் தொடர்ந்து என் பேச்சுகளை வழங்கி வருகிறேன்.

அமெரிக்கா வந்த பிறகு சங்க இலக்கியத்தைப் படித்து, அதை எளிய மக்களுக்குப் புரியும்படி கதை வடிவில் 5 நிமிடக்காணொளிகளாகக் கடந்த ஐந்தாண்டுகளாக வெளியிட்டு வருகிறேன். என் யூட்யூப் சேனல் ஜெயா மாறன்-ல் இதுவரை 700க்கும் மேற்பட்ட காணொளிகள் உள்ளன. சிற்றிலக்கியங்கள் – அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை – போன்றவற்றில் இருந்து பிடித்த பாடல்களை எடுத்துக் கொண்டு, அவற்றைக் கதை வடிவில் விளக்குகிறேன்.

ஒரு எழுத்தாளராக, இதுவரை ஏழு புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளேன். அமெரிக்காவில், நான் ஒரு பக்கம் குழந்தைகளோடு பணியாற்றி வருகிறேன்; இன்னொரு பக்கம், தமிழ் முன்னோடிகளுடன் பழகி அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றுள்ளேன். உதாரணமாக, நியூயார்க்கில் இருக்கக் கூடிய மருத்துவர் எம். என். கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கை

வரலாற்றைப் புத்தகமாக்கினோம். நேர்காணல்கள் மூலம் அவரது வாழ்க்கையை எழுதி வெளியிட்டோம். இதன் மூலம் நான் இணை ஆசிரியராகப் பங்கு பெற்றேன். வெளியான புத்தகத்தின் பெயர் ''அமெரிக்காவின் அகரத் தமிழன் – மருத்துவர் எம். என். கிருஷ்ணன்''.

மேலும், திருக்குறள், சங்க இலக்கியம், அமெரிக்காவில் தமிழ் கற்பிக்கும் முறை, அமெரிக்காவில் நீர் மேலாண்மை போன்ற தலைப்புகளில் இதுவரை எட்டு ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளேன். உலகத் திருக்குறள் மையத்தின் அழைப்பின்படி இரண்டு கட்டுரைகளைச் சிகோகாவில் வாசித்தேன்.

7. இதுவரை உங்கள் எழுத்தில் வெளிவந்த நூல்கள் பற்றிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் இதுவரை ஏழு புத்தகங்களை எழுதியிருக்கிறேன். முன்பே நான் குறிப்பிட்டதுபோல், ''சங்க இலக்கியத்தைத் தழுவிய தமிழா – விழி தமிழே வழி'' என்ற என் முதல் நூல், சங்க இலக்கியத்தைக் கதை வடிவில் எளிமையாகச் சொல்லும் முயற்சியாக அமைந்தது. அதேபோல், ''எங்கேயோ கேட்ட குறள்'' என்ற நூலில் திருக்குறளை கதை வடிவில் எழுதிக், அதைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டு விளக்கியிருக்கிறேன்.

இதனைத் தொடர்ந்து நான் எழுதிய ஐந்து நூல்கள் முழுமையாகப் பிள்ளைகளுக்கானவை. பிள்ளைகளுக்காக எழுதப்பட்ட இந்நூல்கள், ஒரு புறம் அமெரிக்க வாழ்க்கை முறையைத் தழுவியதாகவும், மறுபுறம் நம் தமிழரின் பெருமைகளை எளிய வடிவில் இங்கு வாழும் குழந்தைகளுக்குப் புரியவைக்கும் நோக்கத்தோடும் அமைந்துள்ளன.

உதாரணமாக, ''நீலப்பல்'' என்ற தலைப்பில், இன்றைய ப்ளூடூத் தொழில்நுட்பத்திற்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்ற கோணத்தில் ஒரு நூலை எழுதியிருக்கிறேன். அதேபோல், கீழடி அகழ்வாய்வின் பெருமைகளைச் சிறு பிள்ளைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுக்குப் புரியும் விதமாக ''ஃபீல் ட்ரிப் டு கீழடி'', ''கீழடிக்கு போகலாமா?'' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதியுள்ளேன். சில இடங்களில் கடினமான தமிழ் சொற்கள் வரும்போது, அடைப்புக்குறிக்குள் அதற்கான ஆங்கிலச் சொற்களையும் கொடுத்து விளக்கியிருக்கிறேன்.

மேலும் ''கப்பல் காகம்'', ''கூபர்'' போன்ற தலைப்புகளிலும் குழந்தைகளுக்கான நூல்களை எழுதியுள்ளேன். தமிழ் இலக்கியத்தைப் பிள்ளைகளிடம் சித்திரக் கதைகள் வழியாகக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. அந்த முயற்சியின் ஒரு பகுதியாக, மோசிகீரனாரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சித்திர நூலை உருவாக்கியும் பார்த்தேன்.

இவை அனைத்தும் பிள்ளைகளுக்காக நான் தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளாகும். இதற்கு அப்பாற்பட்டதாக, மருத்துவர் எம்.என்.கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலின் இணை ஆசிரியராகவும் இருந்திருக்கிறேன்.

8. நீங்கள் பெற்ற விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் பற்றிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் நாடகங்களில் நடித்துவருகிறேன். குறிப்பாகத் தமிழ் வரலாற்று நாடகங்களில் அதிக ஈடுபாடு கொண்டவள். அட்லாண்டாவில் வசித்து வரும் திரு. செல்வா அவர்கள், வரலாற்றுக் கதைகளை இன்றைய சிந்தனைகளோடு இணைத்து புதுமையான நாடகங்களை உருவாக்குவதில் வல்லவர். அவரது நாடகங்களில் வரலாற்றுக் கதாபாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்பை அவர் எனக்கு வழங்கினார். குந்தவையாக, கண்ணகியாக, குயிலியாகப் பல்வேறு கதாபாத்திரங்களில் நான் நடித்துள்ளேன்.

கண்ணகி கதாபாத்திரத்தில் நான் நடித்த நாடகத்தைப் பார்த்து வியந்து பாராட்டிய புதுச்சேரியின் ஒரு துளிக் கவிதைப் பதிப்பகத்தின் உரிமையாளர் முனைவர் அமிர்தகணேசன் ஐயா அவர்கள் எனக்கு *"தமிழன்பன் – 80"* விருதை வழங்கினார்.

மேலும், ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் நடத்திய மேடைப்பேச்சுப் போட்டியில் நான் கலந்து கொண்டேன். அந்தப் போட்டியில் பல அமெரிக்கத் தமிழ் பேச்சாளர்களுடன் போட்டியிட்டு, பல கட்டங்களைத் தாண்டி, இறுதியில் என் வயது பிரிவில் வெற்றி பெற்று *"ஞானபாரதி"* என்ற விருதை பெற்றேன்.

அதனைத் தொடர்ந்து, பெரியார் பன்னாட்டு அமைப்பு நடத்திய *"பெண் ஏன் அடிமையானாள்?"* என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசை பெற்றேன்.

9.இன்றைய இளம் தலைமுறை தமிழ் பெண்கள் எழுத்துலகில் நுழைய என்ன ஆலோசனை வழங்குவீர்கள்?

ஆலோசனை வழங்கும் அளவிற்கு நான் இன்னும் பெரிய எழுத்தாளர் இல்லை. நானும் இப்போதுதான் மெதுவாக வளர்ந்து வந்துகொண்டிருக்கிறேன். ஆனால், பெரிய எழுத்தாளர்கள் சொல்லிய அருமையான கருத்துகளை இங்கே பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

ஒருமுறை பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடம் ஒருவர் வந்து, தான் எழுதிய கவிதையைக் கொடுத்து, *"நீங்கள் வாசித்துச் சொல்லுங்கள்"* என்று கேட்டாராம். அதற்குப் பாவேந்தர் அவர்கள், *"முதலில் சங்க இலக்கியங்களையும், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற இலக்கியங்களையும் படித்துவிட்டு வா"* என்று

சொன்னாராம். அதாவது, எழுத வேண்டும் என்றால் முதலில் நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பிலிருந்தே புதிய சிந்தனைகள் உருவாகும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

எழுத்தாளராக உருவாக விரும்புபவர்கள் தினமும் குறைந்தது ஓரிரு பக்கங்களாவது இரவில் நாம் அன்று சிந்தித்தவற்றை எழுதிப் பழகவேண்டும் என்று நடிகர் திருக் கமல்ஹாசன் அவர்கள் ஒரு நேர்காணலில் கூறியதை நான் கேட்டேன். அவர் தினமும் இப்படியே எழுதி வந்ததிலிருந்தே ''தேவர் மகன்'' போன்ற கதைகள் உருவானதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அம்மாவின் வாழ்க்கையும் மிகவும் சுவாரஸ்யமானது. அவர் ஒரு சர்வசாதாரணக் குடும்பப் பெண்ணாகத்தான் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். நோட்டு, பேனா எடுத்துக்கொண்டு தினமும் எழுதும் வசதி அவருக்கு இல்லை. காலை நான்கு மணிக்கு எழுந்து, இரவு பதினொன்று மணி வரை வீட்டுப் பணிகளிலேயே நாள் கழியும்.

ஆனாலும், அவர் அன்று பார்த்த மனிதர்கள், பார்த்த காட்சிகள், சந்தித்த நிகழ்வுகள்—இவற்றையெல்லாம் மளிகைக் கடையில் வாங்கிய பில்லின் பின்புறம் இருக்கும் வெற்று இடத்தில் குறித்துக் கொண்டு வந்தாராம். இவ்வாறு காலம் காலமாகச் சேமித்து வைத்த அந்தச் சிறு குறிப்புகள்தான், அவர் எழுத்தாளராக வளர்ந்தபோது புதிய கதாபாத்திரங்களையும் நிகழ்வுகளையும் உருவாக்க உதவின.

இதிலிருந்து நான் புரிந்துகொண்ட ஒன்று—எழுத்து என்பது யாருக்கும் எளிதாக வந்துவிடுவதில்லை. நீண்டகாலச்சிந்தனை, ஒழுக்கமானபழக்கம், தொடர்ச்சியான வாசிப்பு—இவை அனைத்தும் சேர்ந்தே ஒரு எழுத்தாளனை உருவாக்குகின்றன.

அமெரிக்காவில் எழுத்தாளர்களுக்கான ஒரு பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டபோது, அங்கு வந்த ஒரு எழுத்தாளர் ஒரு அருமையான யோசனையைச் சொன்னார். ''புத்தகங்களுக்கான தலைப்புகளைக் கவிதைகளில் தேடுங்கள்'' என்ற அவரது கருத்து, எழுத்தாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

10.உங்கள் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

பேச்சுத் துறையில் பல்வேறு சிற்றிலக்கியங்களை வாசித்து, அவற்றைக் கதை வடிவில் தொடர் காணொளிகளாக என் யூடியூப் சேனலில் வெளியிடுவது என் முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும்.

தற்போது பட்டினப்பாலை, முத்தொள்ளாயிரம், சீவக சிந்தாமணி, நெடுநல்வாடை போன்ற இலக்கியங்கள் தொடர்வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

இதே போல், சிறுபானாற்றுப்படை, கலிங்கத்துப்பரணி போன்ற படைப்புகளும் என் அடுத்தத் திட்டப் பட்டியலில் உள்ளன.

இதற்கு இணையாக, நவீன இலக்கியங்கள் மற்றும் புதிய நூல்களை வாசித்து, அவற்றைத் திறனாய்வு மற்றும் நூல் பகிர்வு வடிவில் தொடர்ந்து வழங்கி வருகிறேன். அந்த வகையில், ஐஏஎஸ் பாலகிருஷ்ணன் ஐயா அவர்கள் எழுதிய "ஒருபண்பாட்டின் பயணம் – சிந்து முதல் வைகை வரை" என்ற நூலை வாசித்து, அதை ஒரு தொடர் நிகழ்வாக வழங்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகிறேன்.

எழுத்துத் துறையைப் பொறுத்தவரை, குழந்தைகளுக்கான புத்தகங்களை எழுதும் பணி தொடர்ந்து நடைபெறவுள்ளது. ஆங்கிலத்தில் உள்ள *phonics* முறையைப் போல, சிறு பிள்ளைகள் எழுத்துகளைக் கற்றுக்கொள்ளத் தொடங்கியவுடன்வாசிக்கும்பழக்கத்தைஉருவாக்கும்வகையில், இரண்டெழுத்து, மூன்றெழுத்துச் சொற்களைக் கொண்ட எளிய வாசிப்புப் புத்தகங்களை நாங்கள் தயாரித்து வருகிறோம். இந்தப் புத்தகங்கள் ஐந்து முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

மேலும், முன்னர்க் குறிப்பிட்டதுபோல், அமெரிக்கத் தமிழ் முன்னோடிகளின் வாழ்க்கை வரலாற்றையும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்த வரிசையில் டாக்டர் சண்முகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வருகிறேன்.

இவையெல்லாம் தான் என் தற்போதைய மற்றும் எதிர்கால இலக்கிய, பேச்சுச் சார்ந்த திட்டங்கள்.

இந்த நேர்காணலில், ஜெயா மாறன் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைப் பயணம், தமிழார்வம் உருவான விதம், எழுத்துலகில் அவர் நுழைந்த தருணங்கள், பெண் எழுத்தாளராகவும் புலம்பெயர் தமிழராகவும் அவர் சந்தித்த அனுபவங்கள், அயலகத்தில் மேற்கொண்டு வரும் தமிழ்ப்பணிகள், பெற்ற விருதுகள், இளம் தலைமுறைக்கான அவரது ஆலோசனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகிய அனைத்தையும் விரிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றோம். தமிழை நேசிப்பவர்களுக்கும், இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களுக்கும், குறிப்பாக எழுத்துலகில் அடியெடுத்து வைக்க விரும்புவோருக்கும் இந்த உரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!

பேட்டியாளர்

மேனகா நரேஷ், நியூஜெர்சி

அடர்வனத்துள் அலைந்து
திரியும் ஆதி ராட்சசி நான்!
வீழ்ந்தாலும் சிரித்தபடி
பாய்ந்தோடும் பேரருவி நான்!
மூங்கிலுக்குள் புகுந்தலையும்
புயல்காற்றும் நான்!
சூரியரச்மிகள் உட்புகா
ஒரவனக் குளிர்சேறும் நான்!
உள்ளொளியில் பூமி விளக்கேற்றும்
பெருநெருப்பும் நான்!
அடர்வனத்துள் திரிந்தலையும்
ஆதிப் பெருங்காதலும் நான்!

– வர்க்கினி பர்வதா.



கிறிஸ்துவப் பெண் ஆளுமைகள் - 1

பண்டித ரமாபாய் சரஸ்வதி: சமூகப் புரட்சியின் விடிவெள்ளி

லயன் MJ F வெங்கடேசன்
நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம், கோவை

பண்டித ரமாபாய் சரஸ்வதி (1858-1922) ஒரு சிறந்த சமசுகிருத அறிஞர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிய முன்னாடியாவார்.

1. இளமைக்காலம் மற்றும் சமசுகிருத புலமை

ரமாபாய் மகாராட்டிர மாநிலத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை அனந்த சாஸ்திரி டோங்ரே ஒரு சமசுகிருத அறிஞர். அக்காலகட்டத்தில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட போதிலும், அவர் ரமாபாய்க்கு சமசுகிருதத்தைக் கற்றுக்கொடுத்தார்.

புலமை: மிகச் சிறிய வயதிலேயே சமசுகிருதத்தில் 18,000 ஸ்லோகங்களை மனப்பாடம் செய்திருந்தார். சரஸ்வதி பட்டம்: 1878-ல் கல்கத்தா பல்கலைக்கழகம் அவருக்கு 'பண்டிதை' மற்றும் 'சரஸ்வதி' ஆகிய பட்டங்களை வழங்கியது. சமசுகிருதத்தில் இத்தகைய பட்டங்களைப் பெற்ற முதல் பெண்மணி அவரே ஆவார்.

சோதனைகள் நிறைந்த காலம்

ரமாபாயின் இளமைக்காலம் கடும் போராட்டங்களால் ஆனது:

பஞ்சம்: 1876-77ல் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தில் தனது பெற்றோரையும் சகோதரியையும் இழந்தார்.

அலைச்சல்: அவரும் அவரது சகோதரரும் இந்தியா முழுவதும் கால்நடையாகப் பயணம் செய்து பசியுடனும் வறுமையுடனும் போராடினர்.விதவைக் கோலம்: பின்னர் பிபின் பிஹாரி மேதாவி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். ஆனால், திருமணமான இரண்டு ஆண்டுகளிலேயே அவரது கணவர் காலமானார். தனது கைக்குழந்தையான மனோரமாவுடன் அவர் தனித்து விடப்பட்டார்.

2. ஆன்மீக மாற்றம் மற்றும் சமூகப் பார்வை

ரமாபாய் இந்து தர்மத்தின் சாஸ்திரங்களை ஆழமாகப் பயின்றவர். ஆனால், அன்றைய சமூகத்தில் பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அவரைப் பெரிதும் பாதித்தன.

தேடல்: இங்கிலாந்து சென்றபோது, அங்குள்ள பெண்கள் விடுதிகள் மற்றும் அவர்கள் காட்டிய அன்பு அவரை ஈர்த்தது.

மாற்றம்: எளியோர் மீதான கிறிஸ்துவின் அன்பு மற்றும் விவிலியத்தின் போதனைகள் அவருக்கு மன அமைதியைத் தந்தன. குறிப்பாக, பாவ மன்னிப்பு மற்றும் மீட்பு குறித்த கொள்கைகள் அவரை 1883-ல் கிறிஸ்தவ மதத்தை ஏற்கத் தூண்டின.

சமூகப் பார்வை மற்றும் மாற்றங்கள்

கிறிஸ்தவத்தை ஏற்ற பிறகு, அவர் ஒரு மதப் பிரச்சாரகராக மட்டும் இருக்கவில்லை; தன் வாழ்வையே சமூகப் பணிக்காக அர்ப்பணித்தார். சாரதா சதன் (Sharada Sadan): 1889-ல் மும்பையில் இளம் விதவைகளுக்காகவும் ஆதரவற்ற பெண்களுக்காகவும் இந்த இல்லத்தைத் தொடங்கினார்.

முக்தி மிஷன் (Mukti Mission): 1890-களின் இறுதியில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது ஆயிரக்கணக்கான பெண்களையும் குழந்தைகளையும் மீட்டு அவர்களுக்குப் புகலிடம் அளித்தார்.

3. முக்கிய இலக்கியப் பணிகள்

அவர் தனது கருத்துக்களைப் புத்தகங்கள் வாயிலாக உலகுக்குத் தெரியப்படுத்தினார்:

1. ஸ்திரீ தர்ம நீதி (1882): பெண்களின் சுயமரியாதை மற்றும் கல்வி குறித்து வலியுறுத்தும் வழிகாட்டி.
2. உயர் சாதி இந்துப் பெண் (1887): விதவைகளின் ஒடுக்குமுறைகளை ஆங்கிலத்தில் தோலுரித்துக் காட்டிய நூல்.
3. எனது சாட்சியம் (1907): அவரது ஆன்மீகத் தேடல் மற்றும் மத மாற்றத்தை விவரிக்கும் சுயசரிதை.
4. விவிலிய மொழிபெயர்ப்பு: மூல மொழிகளிலிருந்து விவிலியத்தை நேரடியாக மராத்திக்கு மொழிபெயர்த்தார்.

4. மகள் மனோரமா: தாயின் கனவை நனவாக்கியவர்

ரமாபாயின் மகள் மனோரமா பாய், தனது தாயின் பணிகளில் வலதுகரமாகத் திகழ்ந்தார். அவரது பங்களிப்பு மிக முக்கியமானது:

1. கல்விப் பணி: மனோரமா இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உயர்கல்வி கற்றவர். அவர் இந்தியா திரும்பியதும், 'சாரதா சதன்' மற்றும் 'முக்தி மிஷன்' நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றார்.
2. சாரதா சதன் பள்ளி: மும்பையில் உள்ள சாரதா சதன் பள்ளியின் முதல்வராகப் பணியாற்றி, பெண்களுக்கு நவீன கல்வியை வழங்கினார்.
3. குல்பர்கா பணி: கர்நாடகாவின் குல்பர்கா (Gulbarga) பகுதியில் மிகவும் பின்தங்கிய பெண்களுக்காக ஒரு தனிப் பள்ளியைத் தொடங்கினார். அங்கு பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

4. தியாகம்: தனது தாயின் சமூகப் பணிகளையே தனது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு மணம் முடிக்காமல் வாழ்ந்தார். 1921-ல் தனது தாய்க்கு முன்னரே அவர் காலமானார், இது ரமாபாய்க்குப் பேரிடியாக அமைந்தது.

5. சமூகத் தாக்கம் மற்றும் விடுதலைப் போராட்டம்

நிறுவனங்கள்: 1889-ல் விதவைகளுக்காக 'சாரதா சதன்' மற்றும் ஆதரவற்றோருக்காக 'முக்தி மிஷன்' ஆகியவற்றைத் தொடங்கி ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்வை ஒளிரச் செய்தார்.

அரசியல் பங்களிப்பு:

விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பு

நேரடி அரசியலில் ஈடுபடாவிட்டாலும், ரமாபாய் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்ந்தார்:

இந்திய தேசிய காங்கிரஸ்:

1889-ல் நடைபெற்ற காங்கிரஸின் 5-வது மாநாட்டில் பங்கேற்ற 10 பெண் பிரதிநிதிகளில் இவரும் ஒருவர்.

பெண் கல்வி: இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதாது, பெண்கள் கல்வியறிவு பெற்றுச் சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

ரமாபாயின் பணிகள் இந்தியச் சமூகத்தில் ஆழமான மாற்றங்களை விதைத்தன:

பெண் கல்வி புரட்சி: பிராமணப் பெண்கள் மட்டுமின்றி, அனைத்துச் சாதிப் பெண்களும் கல்வி கற்க முடியும் என்பதை நிரூபித்தார்.

விதவைகள் மறுவாழ்வு:

விதவைகள் அமங்கலமானவர்கள் என்ற கருத்தை உடைத்து, அவர்களுக்குத் தொழிற்கல்வி வழங்கித் தற்சார்புடன் வாழ வைத்தார்.

முடிவுரை

பண்டித ரமாபாய் மற்றும் அவரது மகள் மனோரமா ஆகிய இருவரின் கூட்டுழைப்பு இந்தியப் பெண்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது. ஒரு விதவை பெண்ணால் சமூகத்தையே மாற்ற முடியும் என்பதை உலகுக்கு நிரூபித்த ரமாபாயின் மரபு இன்றும் அவரது 'முக்தி மிஷன்' மூலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வண்ண விளக்குகள்- மரபுக் கவிதைகள் - பூங்கொடி பராங்குசம் - ஒரு பார்வை

பொன். குமார்

ஆசிரியர் - தமிழ் மாமணி, புலவர் பூங்கொடி பராங்குசம், தமிழாசிரியர் (ஓய்வு), புதுச்சேரி

வெளியீடு - பூங்கொடி பராங்குசம் புதுச்சேரி

தமிழ்க்கவிதை மரபு என்பது மரபுக் கவிதையே. இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் புதுக்கவிதைத் தோன்றி பல பரிமாணங்கள் பெற்றிருந்தாலும் இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் மரபுக் கவிதைத் தொடர்வது அதன் வீரியத்தைக் காட்டுகிறது. மரபாளர்களில் ஆண்கள் அதிகமெனினும் பெண்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாயுள்ளது. பெண்களில் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் பூங்கொடி பராங்குசம். கவிஞர் புதுவைச் சிவத்தின் புதல்வி. பல அமைப்புகளில் பொறுப்பாளர். பல விருதுகளுக்கு உரிமையாளர். இவர் இலக்கிய உலகிற்கு அளித்துள்ள மரபுக் கவிதைத் தொகுப்பு வண்ண விளக்குகள். இது புதுவையின் பெண் எழுதிய மரபுப்பாடல் என சிறப்பு தகுதி பெறுகிறது.

தமிழ்க்கவிஞர்களில் சிலர் தொகுப்பெனினும் வாசிப்பெனினும் தமிழ் வாழ்த்துடன் தொடங்குவதை மரபென கொண்டுள்ளனர். கவிஞர் பூங்கொடி பராங்குசமும் தமிழ் வாழ்த்துடனே தொடங்கியுள்ளார். தொடர்ந்து உலகத் தமிழர் ஒற்றுமையில் தமிழர் பெருமை பேசியுள்ளார்.

குறிஞ்சி முல்லை கண்ட பின்னும்
மருதத் துடனே நெய்தலும் சேர்த்தே
ஒருங்கே திணையை உணர்ந்தவன் அவனே
என பல பெருமைகளை பட்டியலிட்டுள்ளார். அன்னை மொழியே அமுதம் கவிதையில்
அன்னை மொழியே அமுதாகும்
அதற்கே என்றும் ஈடில்லை
முன்னோர் பெருமை குன்றாமல்
மூத்த தமிழே அரசாளப்

பின்னே வளமும் தலைமுறைக்கும்
பெரிதாய்ச் சேர்க்கும் செல்வமதாய்
மன்னர் காத்த மறத்தமிழின்
மாண்பு நெறியைக் காத்திடுவோம்
என போற்றியுள்ளார். செந்தமிழ் நாடு கவிதையில்
முத்தமிழுக் கொப்பாக மொழிவே றுண்டோ?
என வினவி தமிழின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார். தமிழை மட்டும் போற்றாமல்
எரிதீயாம் ஆங்கிலத்தை ஓட்டி விட்டு
இழந்த மானம் காத்திடுவோம் என்றும் உண்மை
என்கிறார். இழந்த மானம் காப்போம் மூலம்
கவிதைகளால் தேசத்தைக் காப்பாற்ற முடியுமா?
என தலைப்பில் வினவி
கவிதைகூ றும்வழியில் கருத்துடனே சென்றால்
காத்திடலா மிவ்வுலகைக் கவனத்திலே கொண்டால்

என கவிதையின் ஆற்றலை எடுத்துக்கூறி கவிஞர்களையும் பெருமைப்படுத்தியுள்ளார் கவிஞர். அந்நாளில் அரசவைக் கவிஞர்கள் இருந்தது நினைவுக்கூரத் தக்கது.

ஈன்றெடுக்கும் எவ்வுயிர்க்குந் தாயென்றே பெயராம்
ஈனாத உயிர்கூடத் தாய்மைகொள்ளும்: அம்
நன்றிதையே உணர்ந்தாலே நலமுண்டாம் என்றும்
நாட்டினிலே தாய்வேறு தாய்மையும் வேறாம்
என தாய்மைக்கு புதுவிளக்கம் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.
எள்ளள வேனும் இதயந் தன்னில்
இரக்கம் கொள்ளாமல்
கள்ள எண்ணம் கொண்டோர் தம்மை
காறி உமிழ்ந்திட்டார்

என புதுமைப் பெண்கள் குறித்து எழுதியுள்ளார். இச்சிந்தனை மூலம் கவிஞர் பாரதியின் பிரதிநிதியாக செயல்படுவதை அறிய முடிகிறது. தொடர்ந்து பெண்கள் முன்னேற்றம், பெண்ணுக்குச் சுதந்திரம் குறித்தும் பாடியுள்ளார்.

எளிய மனிதர் இன்னலையும்
ஏழைக் குழந்தைக் கல்வியையும்
ஒளியை இழந்தோர் வாழ்வினையும்
உயர்த்தி வாழ நினைத்திடுவார்
என மகளிர் சங்கம் செயல்பாடுகள் பற்றியும் பாடியுள்ளார்.

உலகினிலே மக்களினம் இரண்டாம் உண்டாம்
உருவத்தின் அமைப்பாலே ஆண்பெண் ணென்று
பலகால முன்னாலே புலவர் சொன்னார்
பாட்டெல்லாம் உயர்வுதாழ்வு இல்லை யாக
நலமுள்ள கருத்தையே எழுதி வைத்தார்
நாட்டிற்கும் பொதுவாக ஆக்கி வைத்த
விலையில்லாப் பொருளாக ஆணும் பெண்ணும்
வித்திட்டார் சமமென்று வாழ்க நாளும்

என ஆண் பெண் சமத்துவம் தேவையென எழுதியுள்ளார். ஒருபுறம் பெண்கள் முன்னேற்றம், பெண் உரிமைப் பற்றி பேசினாலும் மறுபுறம் சமத்துவம் கோருவது கவனிப்பிற்குரியது. இவ்வாறான சமுதாய கருத்துகள் மட்டுமல்லாது பைந்தமிழ் பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், மொழி ஞாயிறு பாவாணர், பெருந்தலைவர் காமராசர் வாழ்க, கவிஞர் புதுமைச் சிவம், முதல்வர் அரங்கசாமி என மனிதர்கள் குறித்து பாடி தன்னன்பை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறான கவிதைகள் மனிதர்களை பாடி வைத்த கவியரசு கண்ணதாசனை நினைவூட்டுகிறது.

மனிதனுக்கு அவசியமான செல்வம் கல்வியே. கல்விச் சிறப்பு குறித்து வள்ளுவர் முதல் பலர் கவிதையியற்றியுள்ளனர். கவிஞர் பூங்கொடி பராங்குசமும் கல்வியின் சிறப்பு குறித்து எழுதியுள்ளது சிறப்பாயுள்ளது.

உயிர்தனுக் குணவு பயனுறுதல் போல்
உயரிய வாழ்வினில் மிகவும்
பயிரைக் காக்கும் உரமதாம் கல்வி பயனுற அமைதலே சிறப்பு
என்பது கல்வியின் சிறப்பைக் காட்டுகிறது. தொடர்ந்து
இன்றைய வாழ்வினுக்குக் குறள்நூல் தன்னை
ஏற்பதொன்றே இன்பமாகும்
என தெரிவித்து திருக்குறளைக் கற்க என்கிறார். மேலும்
திருக்குறளில் காணாத கருத்தும் உண்டோ?
தீந்தமிழர் நூலிதுபோல் வேறும் உண்டோ?
என திருக்குறள் பெருமையை எடுத்துரைத்துள்ளார்.
கனவுகள் என்னும் கவிதையில்
குறிக்கோ ளற்ற கோணல் வாழ்க்கை
நெறிப்பா டில்லா நியதி யாகும்
என மனிதர்கள் குறிக்கோளுடன் வாழ வேண்டும் என
வலியுறுத்தியுள்ளார்.
இந்தியாவும் ஒளிர்கிறதே என்று சொல்லும்
ஏளனத்தை எப்படிநாம் ஏற்றுக் கொள்வோம்

என இந்தியாவின் முன்னேற்றம் கவிதையில் அரசின் மீது விமர்சனம் வைத்துள்ளார். அரசை எதிர்ப்பது, விமர்சிப்பது ஒரு கவிஞரின் உரிமை எனில் ஆலோசனை வழங்குவதும் கடமையாகும். கவிஞர் ஏரிகள் புனரமைப்பு திட்டம் ஒன்றை வகுத்துத் தந்துள்ளார்.

ஏரியிலே தூர்வாரி இயன்றளவில் ஆழம்
ஏற்படுத்தி வைத்தாலே ஓடும்நீர் தேங்கும்
ஊரினிலே வீட்டினிலே ஓர்குழியில் சேர்ந்தால்
ஒழுங்காக நிலத்தடிநீர் உயர்வதையே காண்போம்
என பயனுறும் வகையில் ஆலோசனையை அரசுக்கு ஆதரவாக
வழங்கியுள்ளார்.
இழந்த பருவம் மீண்டுவர
இளமை என்றும் வேண்டுமடி

எனத் தொடங்கும் என் ஆசை இத்தொகுப்பில் வித்தியாசமானது. கவிஞரின் இளம்பிராய நினைவுகளை பட்டியலிட்டுக் காட்டியது. தொடர்ந்து

அலைகடலில் ஆழ்த்தி லிருந்து வந்த
அருமைச்சிப் பிவாய்திறந்த முத்து தானே?

சிலை வடிக்கும் சிற்பியாகும் வியந்து போற்றும்
சிற்றுளிக்கும் அடங்காத சிரிப்புத் தானே?

என்னும் பிள்ளைச் செல்வம் வாசிக்க வாசிக்க இதயத்தை வருடிக் கொடுப்பதாயுள்ளது.

உழுவார் உலகுக் கச்சாணி
உழவே யதனால் உயர்ந்ததுவாம்
சுழலும் பூமி தனில் யார்க்கும்
செய்யும் தொழிலே சிறந்ததுவாம்
பழகும் தொழில்கள் யாவையும்
பார்க்கும் நிலையில் பெரிதெனினும்
உழவன் பெருமை தனியாகும்
உண்டொன் றில்லாத் தொழிலாகும்

என வள்ளுவருக்கு நிகராக உழவின் பெருமைப் பேசி உழவரை மகிழச் செய்துள்ளார். உழவர் தொடர்பான பொங்கல் பண்டிகைக் குறித்து பொங்கிடுவோம்பொங்கல்எனகவிதைப்பொங்கல்படைத்துகளிப்பூற்றியுள்ளார்.

மானமென்றால் என்னவென்று குறளும் சொல்லும்
மதிப்புடனே தன்நிலையில் தாழா மையே
மானத்தில் தாழ்ந்துபடின் உயிர்வா ழாமை
மாசற்ற வாழ்வெனவே விளக்கம் தந்து
மானமாக வாழ்வதற்கு கவரி யையும்
மாண்புடனே காட்டியதன் உயர்வும் என்னே

என மானம் பற்றி புனைந்தவர் தமிழர்களின் மற்றொரு சொத்தாம் வீரம் குறித்தும் எழுதியுள்ளார்.

வீரமும் காதலும் விளநில மாகப்
பாரினில் வாழ்ந்தவன் பண்டைத் தமிழன்

என புகழாரம் சூட்டியுள்ளார். ஆனால் காதல் குறித்து பாடவில்லை.

நட்புக்கே இலக்கணத்தை நவின்றவரு முண்டு
நானிலமும் அதன்படியே நடந்தவருமுண்டு
உட்பகையே கொண்டிங்கு உயர்ந்தாரு மில்லை
ஊரினையே பகைத்தோரும் உயிர்வாழ்ந்த தில்லை

என்றும் நட்பும் நயமாய் எழுதப்பட்டுள்ளது.

எல்லா மதங்களும் அன்பையே போதிக்கிறது. உலக இயக்கமே அன்பின் அடிப்படையிலேயே இயங்குகிறது. கவிஞர் பூங்கொடி பராங்குசமும் அன்பு வேண்டும் என்று இறுதியாக எழுதியிருப்பது மனத்தை நிறைவடையச் செய்கிறது.

ஒன்று பட்டால் வாழ்வுண்டாம் ஒற்றுமை நீங்கில் தாழ்வாம்

என்றிட்ட சொல்லே உண்மை எழுபிற விக்கும் சான்றாம்
மன்பதை உயிர்க்கு நல்ல மதிப்புமே வேண்டுமானால்
அன்புடன் வாழ்வு தொன்றே அருமறை போற்றும் வாழ்வாம்
என தொகுப்பை முடித்து மகிழ்ச்சியைத் தொடங்கி வைத்துள்ளார்.

வண்ண விளக்குகள் கவிஞரின் எண்ணச் சிதறல்களாக உள்ளன. மரபு படியே தொகுப்பை தயாரித்து வெளியிட்டுள்ளார். மரபு எனினும் மக்கள் மனத்தில் பதியும் படி எழுதியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. தமிழ்ப்பற்று, பெண்ணுரிமை ஆகிய இரண்டுமே இத்தொகுப்பின் பிரதான உள்ளடக்கம். தொகுப்பை வாசித்து முடித்த போது தென்றல் தேகம் தழுவிய அனுபவம் ஏற்படுகிறது. இத்தொகுப்பு மரபுக்கவிஞர்களுக்கு மிகவும் பிடிக்கும். புதுக்கவிஞர்களையும் வாசிக்கச் செய்யும். தெளிவான அச்சு, தெவிட்டாத வடிவமைப்பு. அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், நேரிசை ஆசிரியம், ஆசிரிய ஒத்தாழிசை, சிந்துப்பாடல் என்னும் வகையில் இலக்கணத்துக்குட்பட்டு எழுதப்பட்டு இருந்தாலும் எளிமையான மொழியைக் கையாண்டிருப்பதற்கு கவிஞருக்கு பாராட்டு தெரிவிக்கலாம். மரபு எழுதத் தெரிந்தவர்கள் புதுக்கவிதை எழுதினால் புதுக்கவிதை மேலும் பொலிவுறும். கவிஞர் பூங்கொடி பராங்குசம் புதுக்கவிதை படைக்க வேண்டும். புகழ் பெற வேண்டும்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:
சம்சுல் ஹுதா பானு
99403 35306

என்னை இழந்தவன்
என்னை கண்டடைவான்..

என்னை கண்டடைந்தவன்
என்னை இழக்கமாட்டான்...

கண்டடைதலும் இழப்பும்
உங்களுக்கே உரியது..

எனக்கல்ல!!

~ இப்னு அறபி

-தமிழில் டாக்டர் ஜலீலா முசாமில், இலங்கை

அனைத்துமாக விளங்கும் இறைநிலையை உணர்ந்து வாழ்க!

முனைவர். இல.ஜெயந்தி
சென்னை

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறையாற்றலை உள்ளபடி உணர்வது மனிதகுலத்திற்கு மேன்மையளிப்பதாகும்.

‘அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படிக் கிச்சைவைத்து
உயிர்க்குயிராய் தழைத்த தெது? மனவாக்கிலே தட்டாது நின்றதெது?’

என வினவி, ஆராய்ந்து அறிவான தெய்வத்தை உணர்ந்தார் தாயுமானவர்.

‘யாதுமாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்!
தீது நன்மை யெல்லாம் - காளி
தெய்வ லீலையன்றோ!
பூதமைந்தும் ஆனாய் - காளி
பொறிக ளைந்தும் ஆனாய்
போதமாகி நின்றாய் - காளி
பொறியை விஞ்சி நின்றாய்!’
‘செய்கை யாவும் தெய்வத்தின் செய்கை
சிந்தை யாவும் தெய்வத்தின் சிந்தை’
‘எங்கும் தெய்வம் எதுவும் தெய்வம்’
‘வையகத்தே சட வஸ்துவில்லை மண்ணும் கல்லும் சடமில்லை’
யாரும் பணிந்திடும் தெய்வம் யாவினும் நின்றிடும் தெய்வம்’

‘காயிலே புளிப்பாக, கனியிலே இனிப்பாக, காக்கைச் சிறகினில் கருப்பாக, மரங்களில் பச்சை நிறமாக,’ அனைத்திலும் இறை நிலையை உணர்ந்து இன்பத்தில் ஆழ்ந்தார் பாரதியார்.

‘மரமாய் சக்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறித் தோன்றும் பிறப்பு.’

பரம் என்ற இருப்பாற்றலிலிருந்து ஐந்து பூதங்களும் (விண், காற்று, நெருப்பு, நீர், நிலம்) ஒன்றிலிருந்து மற்றொன்றாகத் தரம் மாறித் தோற்றம் பெற்றன.

'சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு'

'பஞ்சபூதங்களாகவும், அவற்றின்தன்மாற்றங்களானசுவை, ஒளி, ஊறு, ஓசைநாற்றமாகவும், இவற்றை உணரும் மனமாகவும், விளங்கும் இறைநிலையை அறியும் போதுதான், மனித அறிவு முழுமை பெறுகிறது' என குறளுக்கு விளக்கமளிப்பார் வேதாத்திரி மகரிசி.

உணர்வின் மூர்த்தி!

புலன்களால் அறிய இயலாதது உணர்ந்து துய்க்கத் தக்கது.
'யாவையும் எவரும் தானாய்அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரினுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை தனைக்கூடில் அவனையும் கூடலாமே!'

என உணர்ந்து உரைத்தார் நம்மாழ்வார்.

உருவ வழிபாடு!

பக்தியோக நெறியில் உருவ வழிபாடு முறை தோன்றியது. 'அக்கால மக்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப மறைபொருள் விளக்கமாகாததால், அவர்களது புலனறிவுக்கு ஏற்ப காட்சிக்கு உட்படும் உருவ வழிபாட்டு முறைகள், அச்சத்தைப் போக்கி நம்பிக்கை அளித்தமை அறியலாம். அதனை ஊக்கப்படுத்தும் வகையில் அறிஞர்கள் இறை நம்பிக்கைக்காக புராணங்கள், இதிகாசங்கள் உருவாக்கி, அச்சமூட்டியும், அச்சுறுத்தியும் மக்களிடம் ஒழுக்கத்தை நிலைநிறுத்த முயன்றதை அறிய முடிகிறது' என்பார் ஆராய்ச்சியாளர் மு. தெய்வ நாயகம்.

'ஒரு பரப்பொருள் உண்டே தவிர வெவ்வேறு தெய்வங்கள் இல்லை என்ற தெளிவு வேண்டும்' என்பார் அறிஞர் மு. வரதராசனார்.

காலத்துக்கு ஏற்ப கடவுளர் மாற்றம்

காலத்துக்கு ஏற்றபடி தெய்வங்களை மாற்றினர்.

'போரையும் குடியையும், பசு மாமிசம் தின்பதையும், அக்கிரமங்கள் செய்வதையும் தொழிலாகக்கொண்டு, மாமிசம், போதை மிகுந்த மது பானங்கள் இவற்றின் வாசனையிலேயே இன்பம் கண்ட பழைய தெய்வங்கள், தங்கள் சமூகத்துக்கு இப்போது பொருத்தமாக இருக்க மாட்டார்கள் என்று மனிதர்களுக்குத் தோன்றியது. (உம்) இந்திரன். ஆகவே தெய்வங்களும் ஆராய்ச்சிக்கு உட்பட வேண்டி இருந்தது. மனிதர்கள் தெய்வத்தின் ஒழுக்கத்தையும் சக்தியையும் உயர்த்தினார்கள்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

காட்சிக்குப் புலப்படாமல் அகத்தே உணரத்தக்க இறைநிலையை உருவத்தில் வழிபடும் முறையை முன்னோர் வகுத்தளித்தனர்.

'பக்திவழி என்பது சிந்தனையாற்றல் பெறாத சிறுவர்கட்கும், வயது வந்தும் சிந்தனை செய்து, உண்மையான இறைநிலையை, உணர்ந்து கொள்ள முடியாத மனநிலையை உடையவர்களுக்கும், மனதை வளப்படுத்தி, வாழ்வை வளப்படுத்த நல்லதோர் சிறந்த முறையாக உருவ வழிபாட்டு முறை ஏற்படுத்தப்பட்டது.'

'யுகத்தால் சிவநிலையை உணர முடியாதோர்க்கும்
உருவ வழிபாட்டுமுறை உளம் அறிந்தோர் கற்பித்தார்'

என்பார் வேதாத்திரி மகரிசி.

உளவியல் கொள்கை

எந்தப் பேறு தனக்கு வேண்டுமோ அதற்கேற்றவாறு உருவங்களையும் குணங்களையும் அமைத்துக் கொள்வதற்கு உருவாக்கப்பட்ட செயல் முறைகள்தான் சிலை வணக்கமாகும்.

'இறைநிலையே அறிவாக இருக்கும்போது
இவ்வறிவை சிலைவடிவத் தெல்லைகட்டி
குறைபோக்கப் பொருள் புகழ் செல்வாக்கு வேண்டி
கும்பிட்டுப் பலன் கண்ட வரையில் போதும்'
நடமாடும் உயிர்வகையில் நல்லறிவாய் உள்ள
நாம் ஏனோ கடவுளுக்கு உணவளிக்க வேண்டும்?'

என்று சிந்திக்க வைப்பார் வேதாத்திரி மகரிசி.

முருகன் அல்லது அழகு:

அழகியலை வழிபடும் இயற்கை வழிபாடுதான் முருகன் வழிபாடாகும்.

'முருகனைச் சைவ சமயத்து அளவில் கட்டுப்படுத்தி வைத்துள்ள நிலையினின்றும் விடுவித்து அவனை உலகம் முழுதும் பரவியிருக்கும் இயற்கையின் வடிவமாகக் காண வேண்டும். முருகனின் தன்மைகளாகச் சொல்லப்படுகின்ற மணம், இளமை, அழகு இவற்றை உலகில் விரும்பாதவர் ஒருவரும் இலர்' என்பார் திரு.வி.க.

இறையின் வெளிப்பாடு:

1. 'சடப் பொருள்களில் இறைநிலையானது அமைப்பு (Pattern), துல்லியம் (Precision) இயக்க ஒழுங்கு (Regularity), (வடிவம், குணம், காலம்) என செயல்படுகிறது.

2. உயிரினங்களில், உணர்தல் (Cognition) துய்த்தல் (experience), பிரித்துணர்தல் (Discrimination)

3. ஆறறிவு பெற்ற மனிதரிடம், தன்னை அறிதல் (Self realization) (மறை பொருள், காந்த ஆற்றல்) இறைநிலை உணர்தலான உச்சநிலை அறிவாக, செயல்படுகின்றது என்பார் வேதாத்திரி மகரிசி.

'அனைத்து வல்லமையும் ஒருங்கிணைந்த பரம்பொருளை அருவத்திலே (மறைபொருள்) கண்டு துய்த்த போதிலும் பற்பல உருவங்களை அந்தப் பரம் பொருளுக்குக் கற்பித்து, அந்தந்த உருவங்களுக்கு இயைந்த உறுப்புக்களையும், அணி, பணிகளையும் வகுத்து உலகிலே உருவ வழிபாடு நிலவுவதற்கு எல்லாச் செயல்களையும் நெறிப்படுத்தியவர்கள். ஞானிகளே ஆவர்' என்பார் அறிஞர். மி.ப. சோமு.

முதலில் உருவ வழிபாட்டுமுறை மேற்கொண்டிருந்தாலும், உண்மையை உணர்ந்தவுடன் மக்களுக்கு, எடுத்துரைத்தனர் அருளாளர்கள்.

நம்பிக்கை, பயிற்சி, ஒருமை, தெளிவு (சரியை கிரியை யோகம், ஞானம்) என முறைப்படுத்தினர்.

சீவ காருண்யம்:

எல்லா உயிர்களிடமும் விளங்கும் இறைநிலையை உணர்ந்து சீவகாருண்யத்தை வலியுறுத்தினார் இராமலிங்க வள்ளலார்.

'சமயங்களிலும் மதங்களிலும் தெய்வத்தைப் பற்றி குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றி புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லட்சியம் வைக்க வேண்டாம் ஏனெனில் அவைகளிலும் அவ்வச்சமய மதங்களிலும் அற்பப் பிரயோசனம் பெற்றுக் கொள்ளக் கூடுமேயல்லாது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபாவத்தை பெற்றுக் கொள்கிறதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாட்சி, நானேயிருக்கிறேன்!' என்று பேருபதேசத்தில் கூறினார்.

'பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவே யாகும்'

'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி'

என்றுரைத்தார்.

ஞானத் தாழிசை

ஞானத் தாழிசையில் உருவமற்ற இறையை 'சுழியாகிய முனை கண்டு,' உணர்த்தினார் மாணிக்கவாசகர்.

'சொல்பதங் கடந்த தொல்லோன்

கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்
விண் முதல் பூதம் வெளியிட வகுத்தேன்
பூவில் நாற்றம் போன்று உயர்ந்து எங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை'யை
'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!' என்றார்.

பகைவனுக் கருவாய்!

பகைவனிடமும் பரமன் வாழ்கின்றான்.
'பகைவனுக் கருள்வாய், நன்னெஞ்சே
பகை வனுக் கருள்வாய்!
புகை நடுவினில் தீ யிருப்பதைப்
பூமியிற் கண்டோமே - நன்னெஞ்சே!
பூமியிற் கண் டோமே!
பகை நடுவில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்றான்'

என்றார் மகாகவி பாரதியார்.

'பல வகையான வடிவங்கள் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாவற்றுக்குள்ளும் ஊடுருவி நிற்கும், ஒரே தத்துவத்தைக் காண்பவன் எவனோ, மரணம் நிறைந்த இந்த உலகத்தில் எல்லையற்ற ஒரே ஆன்மாவைக் காண்பவன் எவனோ, அறியாமை நிறைந்த இந்த உலகில் ஒளியாகவும், ஞானமாகவும் உள்ள ஒரே தத்துவத்தை உணர்பவன் எவனோ? அவனுக்கே அழியாத அமைதி கிட்டுகிறது.'

'எல்லாவற்றிலும் பரம்பொருளைப் பார்ப்பதுதான் மனிதனின் இலட்சியமாகும்.' என்றார் சுவாமி விவேகானந்தர்.

'பூமியில் எங்குச் சென்றாலும், ஓர் அசைவும் உயிர்ப்பும் உள்ளது. தோற்றத்தில் ஜடமாக இருக்கும் பாறைகள், உலோகம், மரம், களிமண், எல்லாவற்றுக்குள்ளும் உள்ளார்ந்த இயக்கம் உண்டு' என்று அறிவியல் விளக்கம் அளிப்பார் முன்னாள் குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல் கலாம்.

உருவமும் அறிவியலும்

உருவ வழிபாட்டிலே அறிவியலை இணைத்து வைத்தனர் முன்னோர்

(பக்தி) உருவங்கள்	(ஞானம்) அறிவியல் நிலை
சிவம்	சுத்தவெளி, இருப்புநிலை
சக்தி	விண், இயக்கநிலை
விநாயகர்	ஐந்து கரங்கள், பஞ்ச பூதங்கள்
கந்தன்	காந்தம், ஓங்காரம்
கந்தபுராணம்	காந்த தத்துவம்
பிரம்மா (நான்முகன்)	காலம், தூரம், பருமன், வேகம்
ஆறுமுகன்	அழுத்தம், ஒளி, ஒலி, சுவை, மணம், மனம் காந்த தன்மாற்றம்
சக்ர தாரி (விஷ்ணு)	விண் சுழற்சி, சக்கரம்
சங்கு	சுழற்சியால் ஒலி
கலை மகள்	கல்வி அறிவு
இலக்குமி	பொருளாதாரம்
பூமாதேவி	நிலம்
வாயு தேவன்	காற்று
கங்காதேவி	நீர்
அக்னி பகவான்	நெருப்பு
மன்மதன், ரதி	பால் உணர்வு தேவை அறிதல்
கருமாரி	சக்தியை மாற்றி அமைத்தல் மூலாதாரத்திலிருந்து தலைக்கு
சிதம்பர ரகசியம்	விண் மறை பொருள், காந்தம்
நவகிரகங்கள்	நவகோள்கள்
ஓரறிவு தாவரம் விருட்சம்	வேம்பு, அரசு
துளசி	நோய் தீர்க்கும் மருத்துவ மூலிகை
பைரவர்	நாய், விலங்குகளிடம் அன்பு
நந்தி கேசுவரர்	காளைமாடு
சிம்மவாகினி	சிங்கம்
மூசிக வாகனர்	எலி
மயில் வாகனர்	பறவை - மயில்
பொங்கல் பண்டிகை	சூரியனைப் போற்றுதல்
சித்ரா பௌர்ணமி	சந்திரனைப் போற்றுதல்
ஆயுத பூசை	கருவிகளைப் பராமரித்தல்

என இறைநிலையின் இயக்கத்தை அனைத்திலும் உணர்ந்து மதித்துப் போற்றினர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று மன ஒருமையோடு உழைத்தவர் உயர்ந்த நிலை அடைந்தனர்.

ஒருவரை ஒருவர் வேறுபடுத்திக் கொண்டு மதம், இனம், மொழி, கொள்கை என்று மனிதகுல ஒற்றுமையைக் குலைக்கும் அறியாமையிலிருந்து நீங்கி, அனைத்துமாக விளங்கும் இறைநிலையை உணர்ந்து வாழ்க!

“உண்மையில் நாம் யார்?”

மங்கலான வெளிர் நீலப் புள்ளி
விண்வெளி இருளில் மிதக்கும் புள்ளி
விந்தைமிகு வெளிர் நீலப் புள்ளி
அளவில் ஒரு பொருட்டல்ல அப்புள்ளி
ஆமாம், அது ஓர் அற்ப சிறு புள்ளி
உணர்த்தும் பொருளிலோ அப்புள்ளி
உண்மையிலேயே ஒரு பெரிய புள்ளி

மீண்டும் பாருங்கள்...
அதுவே அங்கு
அதுவே நம் வீடு
அதுவே நம் வாழ்வு

அந்தச் சிறு துகளில்தான்
நாம் நேசித்தவர்கள் எல்லாம்,
நாம் அறிந்தவர்கள் எல்லாம்,
நாம் தெரிந்து கொண்ட ஒவ்வொருவரும்
தங்கள் கனவுகளையும் கண்ணீரையும்
அங்குதான் விட்டுச் சென்றார்கள்
இன்பமும் துன்பமும் அங்கே
மகிழ்ச்சியின் ஆரவாரங்களும் அங்கே
துயரத்தின் கதறல்களும் அங்கே

எண்ணற்ற மதங்கள் நம்பிக்கையூட்ட
எண்ணற்ற வழிகாட்டிகள் நெறிப்படுத்த
எண்ணற்ற முரண் கொள்கைகள் நம்மைக் குழப்ப
எண்ணற்ற போர்கள் நம் நிம்மதியைக் குலைக்க
உண்மையும் மாயையும் ஒருங்கிணைந்து
ஒரே புள்ளியில் அடுத்தடுத்து அடுக்கப்பட்டன.

வேட்டையாடியும் விவசாயியும், வீரனும் கோழையும்,
பண்பாட்டை உருவாக்கியவரும் அதைச் சிதைத்தவரும்,
அரசனும் ஏழையும், கனவில் மிதந்த காதலர்களும்
நம்பிக்கையில் துடிக்கும் குழந்தை இதயங்களும்
என அனைவரும் அங்கேதான்

அங்கே ஒரு சூரியக் கதிரில் மிதக்கும் தூசித் துகளாக
விண்வெளி இருளில் நம் வரலாறு மிதக்கிறது

அந்தப் புள்ளியின்
ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினர்
அழிக்க ஆர்வம் கொள்வர்
ஆதிக்க வெறி கொண்டவர் பேராசையால்
போரில் ஆறென ஓடிடும் இரத்த வெள்ளம்
எல்லாம் அந்த ஒரு சிறு புள்ளியின்

ஏதோ ஒரு சிறு பகுதியை அடைவதற்காக

அண்டப் பேரரங்கில் பூமி ஒரு சிறு மேடை
ஆனால் அந்த மேடையில் நாமே நாயகர்கள்
என்ற மாயை நம் கண்ணை மறைக்கிறது

காணும் மங்கலான வெளிர் நீலப் புள்ளி
நம் அகந்தையை ஆணவத்தை அழிக்கிறது
நம் இருப்பை கேள்விக்குள்ளாக்குகிறது—
"உண்மையில் நாம் யார்?"

இந்த பரந்த இருளில் நமக்கு வேறிடம் இல்லை
எங்கிருந்தும் எவரும் காப்பாற்ற வழியில்லை
உயிர் வாழ நமக்கிருப்பது ஒரே உலகம்
வேறு கோள்களுக்குப் போகலாம் வரலாம்
ஆனால் அவற்றில் வாழ வழியில்லை
குடியேற வகையில்லை

விரும்பினாலும் இல்லாவிட்டாலும்
நமக்கிருப்பது ஓர் உலகம் மட்டுமே
நிற்க இருக்கும் தரை இப்புள்ளி மட்டுமே

இந்த வெளிர் நீலப் புள்ளியின் படம்
நமக்குக் கற்பிப்பது
பணிவு, அன்பு, பொறுப்பு,
ஒருவரை ஒருவர் அன்புடன் அரவணைக்க
இந்த வெளிர் நீலப் புள்ளியைப் பாதுகாக்க,
நேசிக்க, பேணி வளர்க்கத் தெரிந்து கொள்வோம்

எனினில் இதுவே இதுவரை
நாம் அறிந்த ஒரே இல்லம்
நாம் வாழக்கூடிய ஒரே உலகம்

கார்ல் சேகனின், 'பேல் ப்ளூ டாட்: எ விஷன் ஆஃப் தெ ஹியூமன் ஃப்யூச்சர் இன் ஸ்பேஸ்'கட்டுரையின் கவிதை வடிவம்

தேமொழி

தண்டவாளப் பறவை

இரம்யா நடராஜன்

ாளரக் காற்று சுபாவின் எண்ணங்களைக் கலைத்துக் கொண்டிருந்தது. தடக் தடக் அவள் இதயத்தில் ஆயிரமாயிரம் கேள்விகளை எழுப்பியது. கம்பிகளின் இடையில் கறுத்த வானம் கண்சிமிட்டிக் கொண்டிருந்தது. பின்னோக்கி விரையும் ஒவ்வொரு காட்சியும் தண்டவாள இசைக்கு சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது. இந்த பயணத்தின் இலக்கு எப்படி இருக்குமோ என்ற அச்சம் எழுந்துக் கொண்டே இருந்தது.

''குவிக்'' சுபாவின் அலைபேசி கத்தியது. ஜீனிப் பெட்டிக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தான் கார்த்திக்.

'கண்ணம்மா' மனதுக்குள் அவன் குரல். மென் புன்னகை புரண்டது அவள் இதழில்

'ம்ம்ம்'

'என்ன ம்ம்ம்'

'ம்ம்ம் னா என்ன'

'அழகி. மூனு மணிநேர பயணம். தூங்கிடாத கூடவே இரு'

'எப்பவும் கூடவே தான இருக்கேன்'.செய்தி சுற்றிக் கொண்டிருந்தது. அவனுக்கு எட்டவில்லை.

''ச்பச்.. டவர் போகுது''. ஆதங்கத்தில் உரக்கவே சொன்னாள். எதிர் இருக்கையில் இருந்த அந்த அம்மாள் தன் கையிலிருந்த சிவப்பு ரோஜாக்களை இருவருக்கும் இடையே இருந்த அந்த குட்டி மேஜையில் வைத்துவிட்டு, சுபாவையே பார்த்துக் கொண்டே இருந்தாள். காதலின் மினுமினுப்பு எப்படியும் கண்ணிலும் கன்னத்திலும் உதட்டுச் சுழிப்பிலும் வெளிபட்டுக்கொண்டே தான் இருக்கும். அதை தான் பார்த்துக் கொண்டிருந்தாளோ என்னவோ. நெளிந்தாள் சுபா.

வெகு நேரமாக அலைபேசியையே பார்த்துக் கொண்டிருந்தாள். செய்தி கார்த்திக்கை எட்டவில்லை. 'சொல்லிருக்கலாம். ட்ராவல்ல இருக்கேன்னு.என்னமோ ஏதோன்னு

நினைப்பாரு. அவரும் ஊருக்குப் போறாரு நம்ம பத்தி எதுக்கு அனாவசிய கவலைன்னு தான சொல்லல. ஊருக்கு போயிட்டு சொல்லிக்கலாம். புரிஞ்சிப்பாரு'

''குவிக்'' எண்ண ஓட்டத்தை கலைத்தது அலைபேசி.

'சுபா டியர் டவர் போயிட்டு போயிட்டு வருது. ஆனாலும் நான் முழிச்சிட்டு தான் இருப்பேன். கூடவே இரு டி'

'கூடவே தான் இருக்கேன் கார்த்திக். பாட்டு கேக்கலாமா.. நம்ம ப்ளேலிஸ்ட் வரிசையில'

'ஏய் இரு இரு ஒரே ஒரு விஷயம் மட்டும் அனுப்பிடறேன். அப்புறம் ஆரம்பிக்கலாம்'

'சொல்லுங்க கார்த்திக்'

உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அலைபேசியும் அவள் மீது வெளிர் பார்வை வீசியது. எதிர் இருக்கை அம்மாள் இப்போது படுத்துவிட்டாள். சுபாவின் பக்கம் புரண்டபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த முறை சிறு புன்னகை கூட பூத்துவிட்டது. பதிலுக்கு உதட்டின் ஓரமாக புன்னகைத்தாள் சுபா.

''ட்ரெயின்ல நெட் போயிட்டு போயிட்டு தான் வரும்'' என்று சொல்லி சிரித்தாள் அந்த அம்மாள். என்ன பதில் அளிப்பது என்று தெரியாமல் கவனத்தை அலைபேசி மீது திருப்பினாள் சுபா. அலைபேசி வழி முத்தங்களை அனுப்பியிருந்தான் கார்த்திக். அடிவயிற்றில் பட்டாம்பூச்சி எழ கண்களும் உதடும் பூத்தது. இதை அந்த அம்மாள் பார்த்துவிட நேருமோ என்று தலையை குனிந்தபடி சிலிர்த்துக்கொண்டாள் சுபா.

'இது தான் அந்த ஒன்னா. போங்க கார்த்திக்'

'அடியே.. அப்ப வேணாமா.. வேண்டாம்னா திருப்பி அனுப்பிடுமா.. நான் பத்திரமா வச்சிக்கறேன்'

'கள்ளா'

'கள் நீ'

அதை தொடர்ந்து காதலில் துள்ளியது அலைபேசி.

''முத்தம் முத்தம் முத்தமா'' சத்தமாக பாடினாள் அந்த அம்மாள். அதிர்ந்தாள் சுபா. இன்று கார்த்திக் உடன் சரியாக பேச முடியாது போலிருக்கிறதே என்று தோன்றியது. அந்த அம்மாளை முறைத்தாள். அந்த அம்மாள் காதிலிருந்து இயர்பாட்ஸ் எடுத்துவிட்டு..

''ரொம்ப சத்தமா பாடிட்டேனா.. மன்னிச்சிடு மா. எனக்கு பாட்டுன்னா ரொம்ப புடிக்கும். புடிச்ச பாட்டுன்னா கூடவே பாடிருவேன்''

உண்மையோ பொய்யோ எதற்கு வீண் பேச்சு என்று அலைபேசிக்குள் புகுந்தாள் சுபா.

'கார்த்திக் உங்கள நேரில் பாக்கனும் போல இருக்கு. எப்ப எங்க பாக்கலாம் சொல்லுங்க'

'அவசரம் என்னவாம். இன்னும் காதல் கனியட்டும் ராசாத்தி. ஊர் உறவு தெரியாமல் பழகுவது எவ்ளோ கிக் ஆ இருக்கு. இப்படியே கொஞ்ச நாள் போகட்டும்'

'நமக்குள்ள எத்தனை ஒற்றுமை எத்தனை புரிதல் இருக்கு கார்த்திக். இன்னும் என்ன கொஞ்சநாள் போகனும்'

''பார்த்த விழி பார்த்த படி பூத்து இருக்க..'' மீண்டும் அந்த அம்மாள். இந்த முறை இன்னும் சத்தமாக பாடவே மேல் இருக்கையிலிருந்து சலிப்பு குரல்கள் வந்தன. படக் கென்று போர்வையை இழுத்து முகத்தில் போர்த்திக் கொண்டாள். சிரித்துக் கொண்டாள் சுபா.

நீண்ட நேரம் மௌனத்திற்கு பிறகு அலைபேசி சிணுங்கயது.

'அப்டி இல்ல சுபா டியர். சில சமயங்களில வேகமா அடுத்த அடுத்த கட்டம் தாண்டினா சுவாரஸ்யம் குறைஞ்சிடும். நமக்குள்ள இருக்கற இந்த தவிப்பு எவ்ளோ இனிமையா இருக்குல'.

'சிலசமயம் தவிப்பு எல்லை மீறுதே கார்த்திக். பார்க்கனும்னு தோணுது ல. அதெப்படி சுவாரஸ்யம் குறையும்'

'அதும் சரிதான் சுபா. நான் சொன்னது அப்படி இல்ல. என் மேல எதும் அவநம்பிக்கையா சுபா. என்னடா இவன்னு தோணுதா உனக்கு'.

'உங்கள அப்டிலாம் நான் நினைக்கல. உயர்ந்த சிந்தனை இருக்கறவரா தான் நம்பறேன். நீங்க சொல்ற இந்த விஷயம் எனக்கும் தோணும் தான். அந்த இனிமையை அந்த தவிப்பை இந்த காதல் வேதியலை கலைக்கக் கூடாதுன்னு. ஆனாலும் உணர்ச்சி மீறும் போது பாக்கனும்னு ரொம்ப மனசு தவிக்குது கார்த்திக்'

'புரியுது கண்ணம்மா. இங்கும் அப்படி தான். நான் சொல்ல வருவது நீயும் நானும் சந்திப்பது இயல்பா நடக்கட்டுமே. இந்த காதல் இந்த இயற்கை இந்த ப்ரபஞ்சம் நம்மளை சந்திக்க வைக்கும். நம்பு டி என் காதலி'

'ஆமா கார்த்திக் சந்திக்க வச்சு தான் ஆகனும் நம்பறேன். ஆனா ஆசை படலாம் ல ஒரு சிறு முயற்சி பண்ணலாம்ல'

'ஆமா பண்ணலாம் தான் கண்ணழகி'

'கண்ணுக்குள்ள நீங்க தான... அழகா தான் இருக்கும்'.

‘இங்க இதயத்துக்குள்ள யாராம்’

‘உங்க சுபா டியர் தான்’ செய்தி செல்லாமல் சுற்றிக் கொண்டிருந்தது.

இரண்டு வருடமாக கார்த்திக் உடனான இந்த பயணம் எத்தனை இனிமையாக இருந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். தன் தோழியின் அலைபேசி எண்ணில் ஒரு இலக்கம் மாற்றி அனுப்பிய செய்தி அவனை அடைந்த அந்த நிமிடம் முதல் இன்று அவன் செய்திக்காக காத்திருக்கும் இந்த நொடி வரை....வளர்ந்துவிட்ட இந்த இணக்கம் ஆச்சரியப்படுத்தியது. காதல் பயங்கரமானது தான் என்று எண்ணத் தோன்றியது.

அவனைப் பராக்கும் ஆவலை எத்தனை கட்டுப்படுத்தியும் அந்த ஆசை மேலெழுந்து கொண்டே தான் இருக்கிறது. பார்த்து?..அடுத்து என்ன.தெரியாது. அவனைப் பார்த்து பூங்கொத்து நீட்டி, கண்ணோடு கண் நோக்கி,நெற்றி முட்டி, ‘நான் உங்களை காதலிக்கிறேன்...ஐ லவ் யூ கார்த்திக்’ என்று சொல்லிவிட வேண்டும். அவ்வளவு தான். எத்தனை முறை அலைபேசியில் சொல்லி இருந்தாலும், அந்த நெருக்கம் தாண்டிய ஒரு நெருக்கம் வேண்டுமெனத் தோன்றியது. அது அவனுக்கும் இருக்கும் என்றே நம்பினாள்.

“உன் மனசுல பாட்டு தான் இருக்குது..” மீண்டும் அந்தம்மாள் பாடத் தொடங்கினாள். இந்த முறை குரலையும் உயர்த்தி ராகமும் தளர்த்தி தடம் பரண்ட ரயிலெனப் போய்க் கொண்டிருந்தது. மேல் இருக்கைகளிலிருந்து இருவரும் எட்டிப் பார்த்தனர். அந்த அம்மாள் போர்வையை இழுத்து போர்த்தி இருப்பதால் இவர்கள் பார்ப்பது தெரியவில்லை. காதில் அனேகமாக இயர்பாட்ஸ் இருக்க வேண்டும். அவர்கள் கூப்பிடுவதும் கேட்கவில்லை. மேலிருந்த நபர் தன் கையிலிருந்த காகிதத்தை சுருட்டி பந்து போல ஆக்கி வீசினார். ஏதோ தன் மேல் விழுந்துவிட்டது என்று பயந்த அந்த அம்மாள் வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

“எலி எலி இல்ல பாம்பு என்னவோ ஜந்து என் மேல.. ஆ... ஆ... காப்பாத்துங்க.. செயின் இழுங்க... ரயில நிறுத்துங்க” என்று அலறி எழுந்து ஆடத்தொடங்கினாள். சிரிப்பும் பரிதாபமும் என அனைவரது கண்களும் அவள் மேல் பாய்ந்தது. தன் போர்வை உதறியதில் காகித பந்து விழுந்திருப்பதை கண்டாள். அவளுக்கே சிரிப்பாக வந்தது.

“அய்யோ இதுக்கு போயி அலட்டிக்கலாமா” என்று பாடியபடியே தலையில் கைவைத்து அமர்ந்து கொண்டாள். வண்டிக்குள்ள சலசலப்பு அடங்கியது.

“ஏய் பொண்ணு... யாரு போட்டது.. நீ யா” என்று குறும்பு கொட்ட கண் சிமிட்டிக் கேட்டாள்.

“அய்யோ நான் இல்லைங்க” என்று பதட்டத்துடன் சொன்னாள் சுபா.

“பரவால பரவால.. நான் பாடினதுல கடுப்பாகிருக்கும்.. இது எப்பவும் நடக்கறது தான். ஆமா என்ன சொல்றாரு உன் காதலன்” உரிமையாக சுபா பக்கத்தில் வந்து அமர்ந்தாள் அந்த அம்மாள்.

தயங்கினாள் சுபா. 'இதென்ன வம்பா போச்சு' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள்.

"சும்மா சொல்லு. நானும் தான் பாக்கறேன் வெட்கப் படற, குழையற, முகத்துல ஒளி பரவுது.. காதல் காட்டி கொடுத்துடும் தெரியுமா..."

சுபாவிற்கு சங்கடமாக இருந்தது. யாரையும் டக்கென்று எதிர்த்து பேசுவது அவளுக்கு வராத ஒன்று. இந்த அம்மாளை சமாளிக்கத் தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தாள். அந்த அம்மாள் மேலும் தொடர்ந்தாள்.

"பொண்ணே.. காதல்னா சும்மா இல்ல. அது ஒரு மேஜிக். அது தான் உயிர்நாடி. காதல் இல்லாம இந்த உலகத்துல ஒன்னுமே இல்ல. ஏன் உலகமே இல்ல. காதல் அணைக்காத ஆளுன்னு யாருமே கிடையாது. காதல்ல இருக்கறவங்க மனசுக்குள்ள இருக்கும் மகிழ்ச்சியும் சிலிர்ப்பும் அவங்களுக்கே தனி சுகம்.

வாழ்க்கை எப்படி வேணா மாறலாம். காதல் இல்லாம ம்ஹூம்..எப்பவும் அது மனசுக்குள்ள இருந்துட்டே தான் இருக்கனும். வாழ்க்கையில எது நடந்தாலும் அதுக்குள்ள இருந்து அதை அனுபவிக்க ஆரம்பிச்சா போகப்போக தள்ளி நின்னு பாக்கற பக்குவம் கிடைச்சிரும். இந்தத் தெளிவை காதல் தரும்.

சின்ன சின்ன சீண்டல்கள் தழுவல்கள் முத்தங்கள் இது எல்லம் உள்ளிருக்கும் புரிதலின் காதலின் வெளிப்பாடா தான் இருக்கனும். புரிதலும், ஒருத்தருக்கு ஒருத்தர் கொடுக்குற இடைவெளியும், மரியாதையும், நம்பிக்கையும், விட்டுக்கொடுக்காம சுமப்பதும் காதலின் பலம்".

ஒவ்வொரு முறை காதல் என்ற வார்த்தை கேட்கும் போதெல்லாம் கார்த்திக்கின் முகம் வந்து வந்து போனது. ஏதோ தவிப்பில் இருந்த மனம் இப்போது இறகென மாறியது போன்ற உணர்வு. இந்த பயணம் வெற்றிப் பயணம் என்றே தோன்றியது. அந்த அம்மாளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுபா.

"அய்யோ நான் பேசிட்டே இருக்கேன் பாரு. இப்ப உன் காதலன் உன்கூட இருந்தா எப்படி இருக்கும்னு தான யோசிக்கற. அப்படி தான் இருக்கும். அவரு பக்கத்துல தான் இருக்காரு. மனசு நெருக்கின பிறகு தூரங்கள் பொருட்டே இல்ல பொண்ணே...சரி தான நான் சொல்றது...சரி சரி...அடுத்து இறங்கனும். ரெடி ஆகறேன்.

நீயும் ஜன்னல் நிலவும் காதலனும்னு இனிய இரவு மலரட்டும்.. சரியா" சிரித்துவிட்டு தன் காதில் இருந்த இயர்பட்ஸை எடுத்து வைத்துவிட்டு இருக்கையலிருந்த பையை எடுத்துக் கொண்டு இறங்கத் தயார் ஆனாள்.

வெகு நேரமாக அலைபேசியை பார்க்காத நினைவு வந்தது. கார்த்திக் காத்திருப்பாரோ என்று அவசரமான திரையை எழுப்பினாள் சுபா. வரிசையாக கொஞ்சல்கள் இருந்தது. முத்தங்கள் வழிந்தது. சிவந்தாள்.

‘கார்த்திக்’

‘கண்ணம்மா’

‘இங்க ஒரு ப்ரச்சனை நடந்தது. அதான் உடனே பதில் சொல்ல முடில. இப்ப முடிஞ்சு போச்சு...ஒன்னு சொல்லனுமே கார்த்திக் உங்க கிட்ட’

‘இரு டி. வண்டி வந்தாச்சு. ஏறிட்டு பேசறேன்’

மெதுவாக ஊர்ந்து ஊர்ந்து ரயில் நின்றது. அந்த அம்மாளைப் பார்க்கும் ஆர்வத்தில் சுபா சாளரத்திலிருந்து எட்டி எட்டிப் பார்த்தாள். அந்த அம்மாள் இறங்கி சுபாவைப் பார்த்து கையசைத்தார்.

சாளரம் பக்கம் இருந்த சிவப்பு ரோஜாக்களின் மீது பார்வை பாய்ந்தது. அந்த அம்மாள் விட்டுவிட்டு போய் விட்டாரே என்று அதை கையிலெடுத்து அவர் திரும்பிப் பார்க்க மாட்டாரா என்று தவித்துக் கொண்டிருந்தாள். அந்த அம்மாள் திரும்பிப் பார்த்துவிட்டு ‘‘உனக்கு தான்’’ என்று சொல்லி திரும்பி நடக்கலானார். சிறு புன்னகையை உதிரித்துவிட்டு கையசைத்தாள் சுபா.

‘‘குவிக்’’ அலைபேசி சிணுங்கியது.

‘கண்ணம்மா...காதல் பயங்கரம் டி. கொஞ்சம் ஜன்னல் பக்கமிருந்து இந்த பக்கம் திரும்பு டி’

சட்டெனதரும்பினாள். அவள் இருக்கையின் எதிர் இருக்கையில் அவன் அமர்ந்திருந்தான். புன்னகையும் கண்ணீரும் ஒரு சேர திரண்டது. காதலில் உறைந்தவளிடம் நெருக்கி அமர்ந்தான் கார்த்திக்.

‘‘கார்த்திக்..நீங்க இங்க எப்படி’’என்று திணறினாள்.

‘‘இங்க இப்படி தான் கண்ணம்மா’’ என்று கைகோத்துக் கொண்டான்.

இணைந்த கைகளில் காதல் உஷ்ணம் பரவியது. காத்திருப்பின் தவங்களுக்கும் தவிப்புகள் தாண்டும் திண்மைக்கும் வரமென அந்த நிமிட சிலிர்ப்புகள்.சாளரக்காற்றில் ரோஜாமலர்கள் அழகாய் அசைந்திருந்தன. இதயங்களின் இசையில் தண்டவாளப் பறவை மெல்ல அசையத் தொடங்கியது.

ஆயிஷா அம்மையார்

சம்சுல் ஹுதா பானு
எழுத்தாளர்

ஆயிஷா அம்மையார் 'பெண்' என்னும் மானுட சக்தி ஆன்மவலிமையால்தன்னம்பிக்கை கொண்ட உன்னதப் படைப்பு. சுயமுன்னேற்றம் மற்றும் முடிவுகள் எடுக்கும் தருணங்களில் சமுதாய வளர்ச்சியையும், தான் சார்ந்த குடும்பத்தின் உயர்வையும் கருத்தில் கொண்டுதான் பெண் இயங்குவாள். தன்னிலிருந்து உயிர்களை உருவாக்குபவள் என்பதால் தனநலன் சாராதவள், பிறர்நலன் பற்றிய சிந்தனையையும் தன்னுள் எப்பொழுதும் பெருக்கிக் கொள்ளும் உயர் ஆன்மா பெண்.

ஆயிஷா அம்மையார் அவர்கள் மிகப் புத்தி கூர்மையுள்ள பெண்ணாகவும், வரலாறு சம்பந்தமான கேள்விகளுக்கு உடனுக்குடன் மிகச் சரியான பதில் தரும் ஆற்றலைப் பெற்றவராக இருந்தார். இன்றைய காலகட்டத்தில் *AI*, கூகுளிடம் கேட்கும் கேள்விகளுக்கு உடனடியாக பதில் வருவதுபோல் மிகுந்த ஞாபகசக்தி கொண்ட பெண்ணாக எந்தக் கேள்விக்கும் யோசனை செய்யாது சரியான பதிலை டாண், டாண் எனச் சொல்வதில் திறமையுள்ள பெண்ணாக இருந்தார்கள்.

அண்ணல் நபிகள் நாயகம் முஹம்மது அவர்களின் மனைவி கதிஜா நாச்சியார் இறந்துவிட்ட பிறகு நபிகள் நாயகத்தை மிகுந்த பாதுகாப்புடன் கவனித்துக் கொண்டவர் ஆயிஷா அம்மையார் அவர்களின் தகப்பனார் அபுபக்கர் சித்தீக். அந்த சமயத்தில் ஆயிஷா ஆறு வயதுச் சிறுமியாக இருந்தாலும் மிகவும் பொறுப்புள்ளவராகவும், பொறுமைமிக்கவராகவும் இருந்தார்கள்.

இஸ்லாமிய மார்க்கம், அதன் சிறப்புகளை அன்றைய அரபு மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மிக, மிக இன்னல்களைச் சந்தித்தக் கொண்டிருந்த நபியவர்களுக்கு ஆயிஷாவின் தகப்பனார் தனது புதல்வியைத் திருமணம் செய்ய பேசி முடித்தார்கள். இங்கு நாம் சிறுவயது பெண் குழந்தை என்ற எண்ணம் நமக்கு வரும்தான். 'காலம்' ஒவ்வொரு மாற்றத்தையும், மாற்றிக்கொண்டு தான் அதன் பயணத்தைத் தொடர்கிறது.

நிகழ்வுகளின் காலத்தை வாழ்வியலைக் கருத்தில் கொண்டு வரலாறைப் புரிந்துகொள்ள வேண்டும். குழந்தையாக ஆயிஷா இருந்தாலும், தனது தந்தையும், நபிகள் நாயகமும், தோழர்களும் படும் வேதனைகளை அறிந்து அதன் முக்கியத்துவம் அறிந்து மிகவும் உறுதுணையாக ஆயிஷா இருந்ததால் தன்னை உயர் சிந்தனை, செயல்களில் செயல்பாட்டில் அர்பணித்துக் கொண்டார். ஆறுவயதில் நபிகள் நாயகத்துக்கு பேசி முடிக்கப்பட்ட ஆயிஷாவிற்கு ஒன்பது வயதில் நபிகள் நாயகத்தோடு திருமணம் நடத்தப்பட்டது. தன்னைச் சுற்றி நடக்கும்

சூழலுக்கு ஏற்ப தன்னை ஒப்புக்கொடுப்பவள் பெண். அண்ணல் நபிகள் நாயகத்தின் மனைவியாக ஆனபின் இஸ்லாமிய சட்ட, திட்டங்களை மிகத் தெளிவாகக் கற்றுக்கொண்டு நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார் ஆயிஷா அம்மையார்.

இஸ்லாம் மார்க்க வழிபாடுகளில் தொழுகை, நோன்பு, சக்காத்த (கட்டாய தர்மம்) ஆன்மீக சட்ட திட்டங்களும், சொத்துரிமை, வாரிசுரிமை, திருமண சட்டம் என தெளிவான, முறையான சட்ட வாழ்வியல் முறையை தானும் வாழ்ந்து, தன்னைச் சார்ந்தோருக்கும் எடுத்துரைத்தார். ஆயிஷா அம்மையாருக்கு 'சித்தீக்கா' என்ற நற்பெயரும் கிடைத்தது. சித்தீக்கா - என்பதன் பொருள் 'உண்மையாளர், நேர்மையாளர், நம்பிக்கையாளர்' என்பதாகும். ஆயிஷா அம்மையாரிடம் சட்டத்தின் கேள்வி கேட்கப்படும்போது, எந்தக் கையேடுகளை, குறிப்பேடுகளைப் பார்க்காமல் கேட்ட கேள்விக்கு சரியான, முறையான பதில் அடுத்த நொடியே கொடுப்பார்கள். ''சட்டத்தை கரைத்துக் குடித்தவர்'' ஆயிஷா அம்மையார் எனச் சொல்லக் கேள்விப்பட்டிருப்போம்.

இஸ்லாமிய சட்டத்தின் இம்மியளவு, நெல்முனையளவு கூட விலகாத வாழ்வியலை தானும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் எடுத்துரைத்து வாழ வைப்பதற்கு மிகப் பெரிய அறிவாற்றலும், நெஞ்சுரமும் கொண்டவராக ஆயிஷா அம்மையார் இருந்தார்.

இன்றையப் பொழுதும் இறைவன் கைகளில் நாளையப் பொழுதும் இறைவன் கைகளில் என இஸ்லாமிய மார்க்கத்தை பரப்பும் செயலில் தன்னை முழுதாக ஒப்படைத்த அண்ணல் நபியவர்களின் மனைவியாக மிக எளிய வாழ்வை அண்ணலாருடன் ஆயிஷா அம்மையார் வாழ்ந்தார். மனிதன் மாசற்று வாழ்வதும் மற்றவரை அனுசரிப்பது தலையாயக் கடமை என இருவரும் வாழ்ந்தார்கள்.

சட்டத்துறை, இஸ்லாமிய கேள்வி ஞானத்தில் மட்டுமல்ல, வில், வாள் பயிற்சி பெற்ற வீர மங்கையாகவும் ஆயிஷா அம்மையார் திகழ்ந்தார்கள், போர்களங்களில் வியக்கத் தகுந்த சாகசங்களைச் செய்ததோடு, போர்க்களத்தில் கூடாரம் அமைப்பது, வீரர்களுக்கு உணவு சமைப்பது, ஆயுதங்களைச் செம்மைப்படுத்துவது, காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்வது, போர் வீரர்களுக்கு அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் தண்ணீர் தேடிக் கொண்டு வந்து சேர்ப்பது என ஆணுக்கு நிகரான பெண்ணாக ஆயிஷா அம்மையார் இருந்துள்ளார்.

பாலைவனப் பகுதியில் தண்ணீர் கிடைக்காமல் பல சோதனைகளைச் சந்திக்கும் மக்கள் தொழுகையின் முன்பு ''அங்க சுத்தி'' செய்வது கடமை. அங்க சுத்தி என்பது இறைவணக்கத்திற்கு முன்பு உடலை நீர் கொண்டு சுத்தப்படுத்துதல் ஆகும். ஒரு சமயம் தண்ணீர் மிகக் குறைவாக போர்க்களத்தில் இருந்தபோது ஆயிஷா அம்மையார் தனது ஓர்மையின் வேண்டுதலில் இறைவன் ''தயமம்'' - என்னும் மண்கொண்டு உடலைத் தூய்மைப்படுத்தும் வஹியை இறக்கினான். (வஹி - இறைச் செய்தி) என்பதிலிருந்து ஆன்மீகத்தின் அடிவேரினைப் பிடித்துதொழுகிய பெண் ஆயிஷா அம்மையார் என்பதும் தெளிவாகிறது. சகிப்புத் தன்மையும், கம்பீர நிதானமும் இறைவனுக்கு விருப்பமான இருகுணங்கள் என நபிகள் பெருமானார் கூறுவதை தன்னுடைய வாழ்வியலாக எடுத்து வாழ்ந்து, கண்ணியமும், நன்னடத்தையும், தானம், தர்மத்திலும் சிறந்து விளங்கிய மிகச் சிறப்பான பெண் ஆளுமை ஆயிஷா அம்மையார் ஆவார்கள்.

எங்கோ திசை திரும்பும்
நேசத்தை...
வலுக்கட்டாயமாய் நேசிக்க
வைக்கிறது வாழ்க்கை..
நேசித்ததெல்லாம்
நேசித்தவர்களுக்கு வாய்ப்பதில்லை...
வாய்த்தவர்கள்
நேசித்ததை நேசிக்கிறார்களா?
ஒவ்வொரு
விடியலும் பின் இரவுமாய்
காலச்சக்கரத்திற்குள்
காதல் கசங்கிக்
கொண்டிருக்கிறது இவர்களிடையே...
வாசல் கோலமோ...
பூத்துக் கிடக்கும் மல்லிகையோ
நேசிக்கப்படாமல் கிடக்கிறது
தென்றல் தீண்டிப்
பரவசமாக்குகிறது
இவர்கள் வீட்டுத்
திரைச்சீலையை மட்டும்...
பத்திரப்படுத்தி வைத்த
சாக்லேட் கவர்கள்
கசப்பின் உச்சமாகிப் போனதில்,
டெடி பொம்மைகளும்
பரணேறிக்கொண்டன...
'நாம்' எனப்
பேசிய இதழ்கள்...
'நான்' எனும் போதைக்குள்
வீழ்ந்து...
அமிலத்தீ வழிந்துகொண்டிருக்கிறது

பிப்ரவரி தேசத்தில்
இவர்கள் கொடுத்துக்கொண்ட
தாஜ்மஹால்...
வீட்டின் ஒரு ஓரமாய்
கண்களை வைத்துக்கொண்டு
கண்ணீர் வராமல்
அழுது கொண்டிருக்கிறது...

ஸ்ரீவாரி மஞ்சு



ஆள்வோர் யாராயினும் நாட்டைத் தாய்போல் காத்திடுக!

இலக்குவனாரீ திருவள்ளுவன்

சங்கப் புலவர்கள் பொன்னுரை – 29

ஆள்வோர் யாராயினும் நாட்டைத் தாய்போல் காத்திடுக!

காவல்,

குழவி கொள் பவரின், ஓம்புமதி!

காத்தற்குரிய நாட்டைக், குழந்தையைத் தாய் காப்பதுபோல் காத்திடுவாயாக!

– நரிவெரூஉத்தலையார்

புறநானூறு 5, அடிகள் 6-7

திணை: பாடாண் திணை

துறை:செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியும் ஆம்.

சேரமான் கருவூர் ஏறிய ஒள் வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட பொழுது, நரிவெரூஉத் தலையார் பாடியது.

முழுப்பாடல்:

எருமை அன்ன கருங்கல் இடை தோறு,
ஆனிற் பரக்கும் யானைய, முன்பின்,
கானக நாடனை!நீயோ, பெரும!
நீயோர் ஆகலின், நின் ஒன்று மொழிவல்;
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,
குழவி கொள் பவரின், ஓம்புமதி!
அளிதோ தானே; அது பெறல்அருங் குரைத்தே.

பதவுரை:

எருமை – எருமை மாடுகள், அன்ன – போன்ற, கருங்கல் – கரிய கற்கள், இடைதோறும் – இடங்கள் எல்லாம், ஆனின் – மாடுகளைப் போல், பரக்கும் – பரவியிருக்கும், யானைய – யானைகள் உடைய,

முன்பின் – வலிமையான, கானக – காடுகளை அகத்தே கொண்ட, நாடனை – நாட்டினை உடையவனாய், நீயோ – நீ தான், பெரும – பெருமகனே, நீயோர் ஆகலின் – நீ இவ்வாறு இருப்பதால், நின் – உனக்கு, ஒன்று – ஒன்று மொழிவல் – சொல்கிறேன்,

அருளும் – நெஞ்சில் அருள் உள்ளமும், அன்பும் – அன்பு உணர்வும், நீக்கி – விலக்கி, நீங்கா – நீங்காத, நிரயம் – நரகம், கொள்பவரொடு – இடமாகக் கொள்பவரோடு, ஒன்றாது – சேராமல்,

காவல் – காக்கும் நாட்டை, காவல் – காக்கப்படும் நாட்டிற்கு, குழவி – குழந்தை, கொள்பவரின் – வளர்ப்பவர்களைப் போல், ஓம்புமதி – பாதுகாப்பாயாக!

அளிதோ தானே – அளிக்கத் தக்கது அக்காவல் தானே – தான், அது பெறல் – அத்தகைய காக்கும் வாய்ப்பைப் பெறுவது, அருங்குரைத்தே – அரியது ஆகும்.

முன்பின் என்றால், முந்தியும் பிந்தியும் எனப் பொருள் உள்ளதை யாவரும் அறிவர். ஆனால், வலிமை என்றும் பொருள் உண்டு. அப்பொருளிலேயே இங்கே பயன்படுத்தப்பெற்றுள்ளது.

பொருளுரை:

எருமைகள் போன்ற தோற்றத்தையுடைய கரிய நிறமுடைய கற்கள் நிறைந்த இடம் எங்கும் மாடுகளைப் போலப் பரவியிருக்கும் யானைகள் நிறைந்த வலிமையான காடுகளைக் கொண்ட நாட்டை ஆளும் தலைவனே!

நீ இவ்வாறு வளமும், சிறப்பும் பெற்றவனாக இருப்பதால் உனக்கு ஒன்று சொல்கிறேன். கேட்பாயாக!

அருளும், அன்பும் இல்லாமல், தீமைகள் செய்து, நரகத்தைத் தனது இடமாகக் கொண்டு வாழும் தீயவரோடு சேராமல், உன் நாட்டை, குழந்தையை வளர்ப்பவர்கள் அக்குழந்தையைப் பாதுகாப்பது போல் பாதுகாப்பாயாக.

அத்தகைய நாட்டுக் காவலே அளிக்கத்தக்கதாகும். அவ்வாறான சிறந்த காக்கும் வாய்ப்பைப் பெறுவது அரியதாகும்.

நாட்டை எவ்வாறு காக்க வேண்டும் எனப் புலவர் நரிவெரூஉத்தலையார் ஆள்வோர்க்குத் தக்க அறிவுரை வழங்கியுள்ளார்.

நாட்டை மட்டுமல்ல, கட்சி, நிறுவனம், அமைப்பு என எதுவாக இருந்தாலும் அதனைப் பேணும் பொறுப்பில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுரை இது.

ஆள்வோர் யாராயினும் நாட்டைத் தாய்போல் காத்திடுக!

தமிழ் இலக்கிய ஆளுமை - முனைவர் செ.ராஜேஸ்வரி

மேனகா நரேஷ்
நியூஜெர்சி

தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, ஆய்வு, பதிப்பு, இதழியல் எனப் பல தளங்களில் நீண்ட காலமாக இடையறாது இயங்கி வருபவர் முனைவர் ராஜேஸ்வரி. இளம் வயதில் தொடங்கிய எழுத்துப் பயணம் இன்று சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள், ஆய்வு நூல்கள், கவிதைகள், சிறுகதைகள், திரைப்பட ஆய்வுகள், சமூகப் பண்பாட்டு நூல்கள் எனப் பரந்து விரிந்துள்ளது.

ஆங்கில வழிக் கல்வியும், தமிழ் இலக்கியக் கல்வியும் இணைந்து உருவாக்கிய இருமொழித் திறன், அவரை மொழிபெயர்ப்புத் துறையில் தனித்த அடையாளம் பெற்றவராக மாற்றியுள்ளது. 1985 ஆம் ஆண்டு தொடங்கிய மொழிபெயர்ப்புப் பயணம், இன்று சங்க இலக்கியங்கள் முதல் நவீன கவிதைகள் வரை பல முக்கிய நூல்களை உலகளாவிய வாசகர்களிடம் கொண்டு சேர்த்துள்ளது.

'சந்திரோதயம் பதிப்பகம்' மூலம் வணிக இலாபத்தை இலக்கிய வளர்ச்சிக்காக மீள்நோக்கி முதலீடு செய்யும் அரிய பதிப்புத் தத்துவத்தையும், 'தமிழணங்கு', 'சக்தி' போன்ற இதழ்கள் மூலம் ஆய்வும் பெண்சார் சிந்தனையும் வளர்க்கும் பங்களிப்பையும் தொடர்ந்து செய்து வருகிறார்.



மாநில அளவிலான விருதுகள், பல்வேறு இலக்கிய அமைப்புகளின் பாராட்டுகள் ஆகியவை இவரது பயணத்தின் அங்கீகாரங்கள். ஆனால் அவற்றை விடவும், எழுத்தும் மொழிபெயர்ப்பும் சமூகத்திற்கான பொறுப்பாக இருக்க வேண்டும் என்ற அவரது உறுதியான பார்வையே இவரது ஆளுமையை முழுமைப்படுத்துகிறது.

அத்தகைய பன்முகப் படைப்பாளியின் வாழ்க்கைப் பயணம், சிந்தனை, அனுபவங்கள்,

மொழிபெயர்ப்புத் தத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த நேர்காணல் அமைந்திருக்கிறது.

1.உங்களைப் பற்றி அறிமுகத்தைக் கூறுங்கள். நீங்கள் எந்தெந்த துறைகளில் செயல்பட்டு வருகிறீர்கள்?

நான் ஒரு மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், இதழ் ஆசிரியர்.

2. உங்களுடைய எழுத்து வாழ்க்கை எப்போது, எவ்வாறு தொடங்கியது? பள்ளிக் கால அனுபவங்கள் அதில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தின?

எழுத்து வாழ்க்கையின் வரலாறு ஏழாம் வகுப்பில் தொடங்கியது. அப்போது எங்களுடைய மதுரை ஓசிபிஎம் உயர்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு ஆண்டு மலர் தயார் செய்ய வேண்டும். அந்த ஆண்டு மலரில் கதை கவிதை கட்டுரை ஓவியம் ஆகியவை இடம்பெறும். அப்போது நான் இரண்டு கவிதைகள் எழுதிக் கொடுத்த நினைவு இருக்கிறது. அதுதான் என்னுடைய முதல் படைப்பு. தொடர்ந்து நான் தமிழில் ஆண்டுதோறும் வகுப்பு ஆண்டு மலருக்குக் கவிதைகளை எழுதி வந்தேன். இவ்வாறாகத் தொடங்கிய எனது எழுத்து பயணம் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் போதும் பின்பு சிறுகதை போட்டி கட்டுரை போட்டி பேச்சுப்போட்டி பங்கேற்புகள் வாயிலாகத் தொடர்ந்தது. பரிசுகள் நிறைய கிடைத்ததும் எனக்கு உற்சாகம் கொண்டு நிறைய எழுதவும் பேசவும் செய்தேன்.

மொழிபெயர்ப்புத் துறையில் நான் ஆராய்ச்சி செய்த போது எங்களுடைய ஆய்வாளர் மன்றமான புதன் வட்டத்தில் நான் வாசித்து அளித்த கட்டுரைகளை உடனடியாக நான் புலமை, செந்தமிழ், வளர்தமிழ் போன்ற ஆய்வு இதழ்களுக்கு அனுப்புவேன். அவை உடனுக்குடனே வெளியிடப்படும். இவ்வாறாகப்

பருவத்திற்கு ஒன்றாக நான்கு ஆண்டுகளில் வாசிக்கப்பட்டஎன்னுடைய எட்டு கட்டுரைகள் அச்சில் வெளிவந்தது எழுதுவதில் எனக்கு அதிக ஆர்வத்தைத் தூண்டியது.

3.உங்கள் வாசிப்பு பழக்கமும் கல்வி பின்னணியும் உங்கள் எழுத்துத் திறனை எவ்வாறு வடிவமைத்தது? குறிப்பாக தமிழ் துறையில் உங்கள் பயணம் பற்றி கூறுங்கள்.

பள்ளிக்காலத்தில் எனக்கு மிகச்சிறந்த தமிழாசிரியர்கள் கிடைத்தனர். மேலும் என் தந்தையார் வீட்டில் நிறையத் தமிழ் செய்யுள்களை சொல்லும்போது எனக்கு பல தமிழ்ச் செய்யுள்கள் மனப்பாடம் ஆகி இருந்தன. நான் தமிழ் பாடநூல் வந்ததும் பல்சுவை பகுதியை எடுத்துத்தான் வாசிப்பேன். அவற்றை ரசித்துப் படித்ததில் அவை எனக்கு தானாகவே மனப்பாடம் ஆகிவிடும். ஆறாம் வகுப்பு படிக்கும் போது இருந்தே மதுரை தல்லாகுளம் கிளை நூலகத்திலிருந்து என் தந்தையார் எனக்கு நிறைய நூல்கள் எடுத்துக் கொடுத்து என்னுடைய வாசிப்பு ஆர்வத்தை வளர்த்து விட்டார். எனவே சிறு வயது முதல் நிறைய வாசிப்பு இருந்ததனால் கல்லூரியில் நான் எதிர்பாராத வகையில் தமிழ் துறை இல் இளங்கலை பிரிவு படிக்க சேர்ந்தபோது எனக்கு தமிழ் வாசிப்பு உறுதுணையாக இருந்தது. அதுவரை ஆங்கில வழியில் படித்து வந்த நான் கல்லூரியில் தமிழ்த் துறையில் சேர்ந்ததால் முழுக்க முழுக்க தமிழில் படிக்க படிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது எனது தமிழ் துறை தலைவர், பேராசிரியர்கள் என்னை செல்லப் பிள்ளையாக கவனித்துக் கொண்டனர் நான் முதுகலை படித்த போது தினமும் நூலகத்தில் இருந்து ஒரு நூல் எடுத்துச் சென்று வாசித்து விடுவேன். இதனால் நான் வாசிக்காத தமிழ்ப் பிரிவு சார்ந்த நூலே எங்கள் நூலகத்தில் இல்லை என்றாயிற்று. கல்லூரி தமிழ்த் துறையில் நிறைய பருவக் கட்டுரைகள் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் எனக்கு கட்டுரை எழுதுவது என்பது மிகவும் எளிதாயிற்று. சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத பழகினேன். ஆங்கில மீடியத்தில் இருந்து வந்ததனால் எனக்கு தமிழில் அதிக

அளவில் வளவளவென்று எழுதத் தெரியவில்லை. சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதினேன். இன்றும் இப்படியே எழுதுகிறேன்.

மனிதநேயச் செம்மல் சைதை S. துரைசாமியிடம் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
16.8.2018 முதல் தனது நூல்களின் முதல் பிரதியை வழங்குதல்.
செ. ரா.வின் நூல்கள் 108, இதழ்கள் 65

4. நீங்கள் எழுதியுள்ள பல்வேறு நூல் வகைகளில், உங்களுக்கு அதிகமாக பிடித்த இலக்கிய வகை எது? அதற்கான காரணம் என்ன?

நான் எழுதிய மொழிபெயர்ப்பியல் ஆய்வு, இலக்கிய ஆய்வு, சமூகப் பண்பாட்டு ஆய்வு, சோதிடவியல், எம்ஜிஆர் திரைப்பட ஆய்வு, கவிதை சிறுகதை போன்ற நூல் வகைகளில் எனக்கு மிகவும் பிடித்தவை புனைவிலக்கியம வகை தான்.

ஏனென்றால் அவை நம்மோடு வாழ்ந்த மனிதர்களைப் பற்றியவை நம்முடைய உணர்வுகளின் பிரதிபலிப்பு. ஆய்வு கட்டுரைகளும் இலக்கிய விமர்சனமும் தற்சார்பற்றவை. நான் எழுதிய கவிதைகளும் சிறுகதைகளும் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

தமிழணங்கு விருதுகள் வழங்கும் விழாவில் இதழாசிரியர் ராஜேஸ்வரியுடன் டில்லி தமிழ் சங்கத்தின் செயலாளர் இரா. முகுந்தன், முனைவர் சிவ. இளங்கோ, பொறிஞர் ரவி

5.ஏன் எம்ஜிஆர் பற்றி நூல்கள் எழுதினீர்கள்?

எம்ஜிஆர் ஒரு நடிகர் மட்டுமல்ல; மனிதநேயச் செயல்பாடுகளில் முன்னோடி. அரசியல் நோக்கம் இல்லாத காலத்திலேயே ஏழை மக்களுக்கு நேரடியாக உதவியவர். அவரின் மனிதநேயத்தை முன்வைத்து 21 தமிழ்நூல்கள் மற்றும் ஒரு ஆங்கில நூல் எழுதியுள்ளேன்.

6.தமிழ் மொழிபெயர்ப்பு துறையில் எத்தனை ஆண்டுகள் அனுபவம் உண்டு?

என் மொழிபெயர்ப்புப் பயணம் 1985 ஆம் ஆண்டில் தொடங்கியது. *Indian Women – Changes and Challenges* என்ற ஆங்கில நூலின் பாதியை பேராசிரியர் ரீட்டம்மா டேவிட் மொழிபெயர்த்திருந்தார். மீதிப் பகுதியை நான் மொழிபெயர்த்ததால், இருவரின் பெயரும் இணைந்து வெளியானது. இதுவே என் முதல் மொழிபெயர்ப்பு.

அதன் பின்னர் பல தொண்டு நிறுவனங்கள், இந்திரா காந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகம், அரவிந்த கண் மருத்துவமனை, கமலா டாட் காம் போன்ற அமைப்புகளுக்காக சட்டம், அறிவியல், சமூகவியல், கணக்கியல், வணிகவியல்,

வரலாறு, வெளிநாட்டு செய்திகள் எனப் பல துறைகளில் நூல்கள் மொழிபெயர்த்தேன். கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ் இலக்கிய நூல்களைத் தொடர்ந்து மொழிபெயர்த்து வருகிறேன்.

7.மொழிபெயர்ப்பின் மீதான ஆர்வம் எவ்வாறு உருவானது?

பள்ளி வரை ஆங்கில வழிக் கல்வியும், கல்லூரியில் தமிழ் இலக்கியக் கல்வியும் பயின்றதால் இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றேன். இதனால் மொழிபெயர்ப்பு எனக்கு இயல்பாகக் கைவந்த கலை ஆனது. துல்லியமாகவும் விரைவாகவும் மொழிபெயர்த்ததால் தொடர்ந்து வாய்ப்புகள் கிடைத்தன. 1985 முதல் இன்றுவரை மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வருகிறேன்.

8. நீங்கள் மேற்கொண்ட முக்கிய மொழிபெயர்ப்பு பணிகள் எவை?

சங்க இலக்கியங்களில் ஐங்குறுநூறு, குறுந்தொகை, புறநானூறு, மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, முல்லைக்கலி (தேர்ந்தெடுத்த பாடல்கள்),

நீதி இலக்கியங்களில் நாலடியார், ஆச்சார கோவை,

சிற்றிலக்கியங்களில் முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி,

புராணங்களில் திருவிளையாடல் புராணத்தின் மதுரை திருநகர் படலம்,

புதுக்கவிதைகளில் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் ஏழு கவிதைத் தொகுதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளேன்.

மேலும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஏழு நூல்கள், கலீல் ஜிப்ரானின் மணலும் நுரையும் (14 பாடல்கள்) ஆகியவற்றையும் மொழிபெயர்த்துள்ளேன்.

9. மொழிபெயர்ப்புத் துறையில் உள்ள முக்கிய சிக்கல்கள் என்ன?

மொழிச் சிக்கல்கள் மற்றும் பண்பாட்டுச் சிக்கல்கள் என்பவை முக்கியமானவை. வாசகனுக்கு மூலமொழி தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், மொழிபெயர்ப்பு பெறுமொழியில் எழுதப்பட்ட புதிய நூலாக அமைய வேண்டும்.

பழமொழிகள், சொலவடைகள், சடங்குகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளை அளவோடு விளக்க வேண்டும். அதிக விளக்கம் தகவல் சுமையாக மாறக்கூடும். ஆகவே அடிக்குறிப்புகள் மூலம் எளிமையாகவும் சரளமாகவும் மொழிபெயர்க்க வேண்டும்.

சக்தி பெண்ணிதழின் உதவி ஆசிரியர் டாக்டர் மேனகா நரேஷ், மற்றும் எழுத்தாளர்கள் ஐயை திவ்யா, முனைவர் ஜெயந்தியுடன்

அறிவியல் நூல்களில் புதிய கலைச்சொற்கள் உருவாக்க வேண்டிய சவாலும் உள்ளது. புனைவு மற்றும் புனைவு அல்லாத நூல்களுக்கு வெவ்வேறு அணுகுமுறைகள் தேவை.

10. இன்றைய காலத்தில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அங்கீகாரம் உள்ளதா?

முன்பை விட தற்போது நல்ல அங்கீகாரம் உள்ளது. தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மொழிபெயர்ப்பாளர் விருதுகளையும், பணமுடிப்பையும் வழங்குகிறது. 2021 ஆம் ஆண்டு தஞ்சாவூர் நெருஞ்சி இலக்கிய இயக்கமும், தொடர்ந்து தமிழ்நாடு அரசும் எனக்கு சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கின.

11. 'தமிழணங்கு' இதழின் நோக்கும் செயல்பாடும் என்ன?

'தமிழணங்கு' ஒரு ஆய்விதழ். இதில் கற்பனை இலக்கியங்கள் இடம்பெறாது. தமிழ், தமிழர் வரலாறு, இலக்கியம், தொல்லியல், சமயம், பண்பாடு சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் தங்கள் மொழி, பண்பாடு, மரபு ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாக தலைமை ஆசிரியர் மற்றும் நிறுவுநராக இதழை நடத்தி வருகிறேன்.

12. 'சக்தி' இதழ் எதை மையமாகக் கொண்டது?

'சக்தி' பெண்கள் மேம்பாட்டை மையமாகக் கொண்ட இதழ். பெண்கள் எழுத்துகள், பெண்களைப் பற்றிய கவிதை, கதை, கட்டுரை, பேட்டிகள் ஆகியவை இதில் இடம்பெறுகின்றன. இதழ் இணையத்திலும் வெளியாகிறது.

13. நீங்கள் சொந்தமாக பதிப்பகம் தொடங்கிய அனுபவம் குறித்து கூறுங்கள். 'சந்திரோதயம் பதிப்பகம்' உருவான விதமும், அதன் செயல்பாட்டு முறையும் என்ன?

முதல்வர் ஸ்டாலினிடம் இருந்து சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது பெறுதல்

நான் 1918இல் எழுதத் தொடங்கியதில் இருந்து எந்தப் பதிப்பகத்தையும் அணுகியது கிடையாது. என்னுடைய நூல்களை நானே வெளியிடுகிறேன். என் தோழி சந்திரிகா என்னை சொந்த பதிப்பகம் ஆரம்பிக்கும்படி தூண்டினார்கள். சந்திரோதயம் பதிப்பகம் உதயமாயிற்று. அதனுடைய லாப நட்டத்தை என்னுடைய பொறுப்பில் ஏற்றுக் கொண்டேன். அதிக எண்ணிக்கையில் விற்கக்கூடிய எம்ஜிஆர் நூல்கள் ஜோதிட நூல்கள் போன்றவற்றில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு நான் மொழிபெயர்ப்பு நூல்கள் இலக்கிய ஆய்வு, சமூக பண்பாட்டு ஆய்வு நூல்களை எழுதி வெளியிடுகிறேன். சமூக பண்பாட்டு ஆய்வு நூல்களும் ஓரளவு நன்றாக விற்கின்றன. புத்தகத்திலிருந்து கிடைத்த லாபத்தை மீண்டும் மீண்டும் புதிய புத்தகங்கள் கொண்டு வருவதிலேயே நான் முதலீடு செய்கிறேன். இதனால் எனக்கு லாபம் என்று இல்லாவிட்டாலும் நஷ்டம் கிடையாது. மேலும் நான் காணொளிகள் பேசுவதில் கிடைக்கும் வருமானத்தையும் என்னுடைய சொந்த நூல்கள் வெளியிடவே பயன்படுத்துகிறேன். அதனால்

எனக்கு அதிக எண்ணிக்கையில் நூல்கள் வெளியிட முடிகிறது. சினிமா ஆன்மீகம் இலக்கியம் ஜோதிடம் மொழிபெயர்ப்பு என்று பல துறை சார்ந்த நூல்களை வெளியிடுவதால் எழுத்து எனக்கு சலிப்பு தட்டவில்லை. என்னுடைய ஆர்வத்தை தூண்டும் வகையிலேயே என் பயணம். அமைந்துள்ளது

14. இதுவரை நீங்கள் பெற்றுள்ள முக்கியமான விருதுகள் எவை? அவை உங்கள் எழுத்து வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

தமிழணங்கு, சக்தி பெண்ணிதழ் உதவி ஆசிரியர் முனைவர் சந்திரிகா சுப்ரமணியன், முனைவர் தனலட்சுமி அவர்களுடன்

நான் இதுவரை மூன்று மாநில விருதுகள் பெற்று இருக்கிறேன் 1984 இல் சத்துணவு திட்டம் பற்றிய ஓரங்க நாடகம் போட்டியில் முதல் பரிசு பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றேன். அதன் பிறகு 2021இல் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதும்அடுத்தஆண்டு சிறந்தபதிப்பாளர்விருதும்(சந்திரோதயம்பதிப்பகத்திற்கு) எனக்குக் கிடைத்தது. இவை தவிர சிறந்த தமிழ் அமைப்புகள் மூலமாக எனக்குப் பல விருதுகள்கிடைத்துள்ளன. திருப்பூர்இலக்கிய விருதும்திருப்பூர்சக்தி விருதும் கிடைத்தது. வாணுவம் பேட்டை திருவள்ளுவர் இலக்கிய மன்றம் தன்னுடைய ஐம்பதாவது ஆண்டு விழாவில் மொழிபெயர்ப்பு துறை சார்ந்த சாதனையாளருக்கு தரும் விருதாக சாதனை திலகம் என்ற விருதை வழங்கியது. மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் திருவள்ளுவர் பற்றிய 100 கட்டுரைகளை வரவழைத்து அவற்றில் சிறந்ததாக என்னுடைய கட்டுரையைத் தேர்ந்தெடுத்து அறிவுமலர் என்ற விருதை

வழங்கியது. அண்மையில் தமிழ் காப்புக் கழகம் இலக்குவனார் சங்கத் தமிழ் ஒளி விருதை என்னுடைய சங்கத் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்காக வழங்கியது. முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் எழுதிய ஊடகச் சட்டங்கள் என்ற நூலுக்காக 2023 ஆம் ஆண்டு எமது சந்திரோதயம் பதிப்பகத்திற்கு சிறந்த பதிப்பகம் விருது கிடைத்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 130 நூல்கள் வெளியிட்டுள்ளோம்.

இந்த நேர்காணல், எழுத்து என்பது தனிப்பட்ட சாதனை அல்ல; அது சமூகப் பொறுப்புடன் கூடிய நீண்ட பயணம் என்பதைக் தெளிவுபடுத்துகிறது. பள்ளிப் பருவத்தில் விதைக்கப்பட்ட வாசிப்பு ஆர்வம், கல்லூரி காலத்தில் வளர்ந்த ஆய்வுச் சிந்தனை, மொழிபெயர்ப்பின் வழியாக விரிந்த பன்மொழி உலகம், பதிப்புத் துறையில் எடுத்த தன்னம்பிக்கை முயற்சிகள் — இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு முழுமையான இலக்கிய ஆளுமையை உருவாக்கியுள்ளன.

மொழிபெயர்ப்பு என்பது சொற்களை மாற்றும் செயல் அல்ல; அது பண்பாட்டையும் உணர்வையும் கடத்தும் நுட்பமான கலை என்பதை முனைவர் ராஜேஸ்வரியின் அனுபவங்கள் வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்கள் முதல் நவீன எழுத்துகள் வரை பல்வேறு படைப்புகளை உலக வாசகர்களுக்குக் கொண்டு சேர்த்துள்ள இவரது பணி, தமிழ் மொழியின் எல்லைகளை விரிவுபடுத்தும் முயற்சியாக அமைகிறது.

இலாப நோக்கற்ற பதிப்புத் தத்துவம், ஆய்வு இதழ்களின் தொடர்ச்சியான செயல்பாடு, பெண்கள் எழுத்துக்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஆகியவை இவரது சமூக அக்கறையை வெளிப்படுத்துகின்றன. விருதுகளும் பாராட்டுகளும் ஒரு பயணத்தின் வெளிப்புற அங்கீகாரமாக இருந்தாலும், தொடர்ச்சியான உழைப்பும் அர்ப்பணிப்புமே உண்மையான சாதனை என்பதை இந்த நேர்காணல் உணர்த்துகிறது.

எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஆய்வாளர்கள் மட்டுமல்லாது இளம் தலைமுறை வாசகர்களுக்கும், இந்த அனுபவப் பகிர்வு ஒரு ஊக்கமாகவும் வழிகாட்டியாகவும் அமையும். தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் எதிர்கால வளர்ச்சியில் இத்தகைய பணிகள் முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை!

பேட்டியாளர்

-மேனகா நரேஷ், நியூஜெர்சி

ஹைக்கூ கவிதைகள்



1
உதிரும் இலைகள்
மொட்டை மரத்தில்
சிரிக்கும் காலம்
2
பெய்யும் மழையோடு
திரும்புகின்றன
பழைய நினைவுகள்
3
விரித்ததும் ஜன்னல்
திறந்து கொண்டது
மனது
4
மகிழ்ந்து கண்ணாடி
வரிவரியாய்
மழைக்கவிதை
5
ஒரே சாதி
மனிதர் யாவரும்
கறுப்பு நிழலில்
6
நின்ற மழை
தொடங்கி விடும்
இதயத்தின் பேச்சு
7
வீசும் காற்று
பேதமின்றி
மூங்கிலிசை
8
காலை ஒளி
பறவைகள் ஒலி
இறைவன் அருகி(ளி)ல்
9
சாயும் வெயில்
நீண்டு செல்லும்
மர நிழல்
10
குழியும் கல்
பாடம் கற்பிக்கிறது
ஓடும் ஆறு

DR ஜலீலா முசாம்மில்
ஏறாவூர் இலங்கை

பேமஸ் சர்க்கஸ்.

சமீஸல் ஹுதா பானு
எழுத்தாளர்

ம்ம்ம்மேமே...ம்ம்ம்மேமே... என்ற ஆடுகளின் கத்தும் சத்தங்களுடன்... வரப்புகளின் சறுகளில் அருகம்புல்லை மேய்ந்த ஆடுகளை சிறிது தூரத்தில் இருந்த ஓரே பெரிய தூரைக் கொண்டு பறந்து விரிந்திருந்த கருவேல மர நிழலில் கொரட்டிக் கம்பை வைத்து கருவேலம் பழங்களை ஆடுகளுக்காக பறிச்சுகிட்டு இருந்தாள் பொன்னாத்தா. ஆடுகளின் சத்தம் அதிகமாக கேட்கவும், ஆடுகளை நோக்கி தனது பார்வையை திருப்பியவள் வரப்பின் இரண்டு அடிக்குப் பக்கத்தில் மெயினு ரோட்டில் மாட்டு வண்டியில் எளந்தாரிப் பயலுக அஞ்சாரு, பேரு இறங்குவதும், கடப்பாறை, மம்பட்டி, சாந்துச் சட்டி, திமுசுக் கட்டை இவைகளையும் இறக்கி ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் கைகளில் வைத்துக் கொண்டு வயலில் இறங்கி வரப்பின் அருகில் நின்றனர். அறுப்புக்காலம் முடிஞ்சுருச்சு இப்போ வேலவெட்டிலாம் இல்லாத காலம் கோவிலிலும் இனி மாசிக் கெளரி- முளப்பாரி திருவிழாவாத்தேன் இருக்கும். வயலுகள்ள பூராம் நெல்லுப்பயிரை அறுத்து பொறவு நெல்லுப் பயிரோட தூருக... காய்ஞ்ச வேருக முடுச்சு முடுச்சா பூமியில பதிஞ்சுருக்கு.., இப்போ இந்த பயலுக எந்த வேலைக்கு வந்துருக்காக? என பொன்னாத்தா யோசித்தாள்.

வண்டியோட்டி வந்தவரும் எளந்தாரிப் பயதேன்... வண்டிய கருவேலமரத்து நிழலுக்குக் கொண்டு வந்து மாடுகளை வண்டிய விட்டு அவிழ்த்து கருவேல மரத்து தூரில் மாடுகளை கட்டினான். வண்டியை பத்திரமாக மேடு, தாவு இல்லாமப் பார்த்து நிற்க வைத்தான், முன்பகுதி சாய்வாகவும், பின்பகுதி தூக்கலாகவும்- வண்டியின் சக்கரத்தின் அடியில் தடைக்கல்லை வச்சு நிப்பாட்டியிருந்தான். பொன்னாத்தாவுக்கோ மனசு பர...பர..னு பொறுக்க முடியாமல்... "ஏப்பு...வெளியூர்க்காரவுக மாதிரி இருக்கீக... என்ன சோலியா வந்தீங்கப்பூ"... எனக் கேட்டுக் கொண்டே தனது ஆடுகளுக்கு த்தே... த்தேய்... எனக் குரல் கொடுத்தக் கொண்டாள்.

இந்தா... இந்த வயலுக நாலத்தையும் (நான்கையும்) வரப்பு மட்டுப் படுத்தி சமமாக்கச் சொல்லி மொத்தக் கூலியப் பேசி எங்கள அனுப்பிவச்சுருக்காக த்தே... அம்மூருக்கிட்ட காவனூருதேன், அம்மூரு. என்னமோ சர்க்கசுக் கொட்டாயி போடப் போறாகளாம் த்தே.. என்றதும் நெஞ்சுல நெருப்பள்ளிப் போட்டது மாதிரி இருதயம்

கலங்கி... ஏம்ப்பூ என்னப்பூ இப்புடிச் சொல்லுறே?.. நெசமாத்தேனா... அட சண்டாளத்தனமே!.. மெயினு காவாக்கி முன்னே இருக்குற வயலோட வரப்பை சமப்படுத்திட்டா.. அடுத்தடுத்து வயலுக கதி? மறுபடியும் வரப்பெடுக்குறது ரொம்ப செரமமாச்சேப்பூ...

சர்க்கசுக் கொட்டாயி போடுறுவனுகளுக்கு வேற டவுனு கெடக்கலயா?... வெள்ளாம வெளயிற வயக்காட்டை கண்ணு வச்சுப்புட்டாங்களே படுபாவிக. ஆமா,வயலுக்கார அரக்காசய்யா இப்படி ஒரு காரியத்துக்கு ஒத்துக்கிட்டாங்களா?.. சாமி சத்தியமாத்தேன் சொல்லுறியாப்பூ... என பரிதவிப்போடு கேட்ட பொன்னாத்தாவை இடைமறித்த வண்டி ஓட்டி வந்த காவனூர் பையன், வரப்பை சமப் படுத்தி சர்க்கசுக்காரனுகளுக்கு மூணு கா(ட்)ச்சி ஒருநாளைல நடத்தப்போறாகளாம், சர்க்கசு பார்க்க நம்ம ஊரைச்சுத்தியிருக்குற சுத்துப்பட்டு கிராம மக்க முச்சூடும் வருவாகளாம், என்னற காவனூர் காரங் பையன்கிட்ட மேலும் பேச கெதியற்று, மெதுவாக நடந்து... கண்களில் வந்தகண்ணீரை அடக்கி, பெருமூச்செறிந்து... பொன்னாத்தா ஆடுகளைப் கூட்டிப் பத்திக்கொண்டும் கட...கடவென வயலைவிட்டு வெளியேறி மெயின் ரோட்டுக்கு வந்தபோது, அரக்காசு ஐயா சைக்கிளில் வருவதைப் பார்த்து, த்தே...த்தே..என ஆடுகளை கால்வாய்க்குள் ஒருசேர பத்தி இறக்கிவிட்டு, கால்வாயில் அருகம்புல்லைல்க் கடிக்கும் ஆடுகளை ஓரக் கண்ணால் பார்த்து மனசு திருப்தியுடன், பத்திரமாக ஆடுகள் மேய்வதைப் பார்த்துக்கொண்டே, அரக்காசு ஐயாகிட்ட பேசனும் என நினைத்து நின்றவளை என்ன... பொன்னாத்தா...அதுக்குள்ள கெளம்பிட்ட போல என்று சைக்கிளை மெதுவான பிரேக்குடன் நிப்பாட்டி, ஒரு காலை பெடலைவிட்டு தரையில் அழுத்தி, மறுகாலை பெடலில் வைத்தபடி நின்ற அரக்காசுவிடம், ஏய்யா...இது உங்களுக்கே நல்லாயிருக்கா.... ரோட்டு மேல உள்ள வயலை சர்க்கசு கூடாரம் கட்ட மேம்படுத்துறாக, இப்பக்கூட நேரமாகலை... சர்க்கசுலாம் அம்மூருக்கு வேணாம், வெள்ளாமக்காடு மேடுதாட்டிப்போயிரும். கா(ல்)வாயில வார க(ண்)ம்மாத்தண்ணி உங்க வயலுக்குப் பாஞ்சுதேன் மத்தவுக வயலுக்குப் போகும், சர்க்கசு கொட்டாயி வந்தா காவாயும் மேடுதட்டி, வயலும் மேடுதட்டிப் போகுமய்யா..சர்க்கசுலாம் வேணாய்யா.... நிப்பாட்டுங்க.... என்றவளை ஆழமாக ஒரு பார்வை பார்த்து அரக்காசு பேசா ஆரம்பித்தார்.

வயலுல வரவு வந்தாத்தானே, வெள்ளாமை போட முடியும். என்னோட தள்ளாட்ட வயசுவரை நாம் போட்டேன், இப்ப கம்மாயிலை தூர் வாருறாகளா?...ஊருணியை தூரு வாருறாகளா?... மேம்மிஞ்சமா தண்ணியைத் தேக்கி வச்சு வெவசாயத்துக்கு குடுக்க. ஆத்துப்பாசனம், ஏரிப் பாசனம் இருக்குற பூமியா... நம்ம பூமி?... வானம்பார்த்த பூமி, நம்ம மூத்தக் குடி மக்க இருந்தவரையில வெவசாய வேலைக்குள்ள அடிப்படைகளை செப்பனிட்டு, மழை ஏச்சாலும், வாச்சாலும் வெள்ளாமையை வெளயவச்சு வீட்டுக்கு கொண்டாந்து நெறப்புனோம்... இப்போயாரு முன்னெடுத்துப் பண்ணுறாக? எம் மகன்கிட்ட விவசாயம்னு பேச்ச எடுத்தாலே மூஞ்சிய சுளிக்கிறான். சவுதிச் சவுராளிகளைப் பார்த்து, அவுக கட்டுற வீடுமாதிரிக் கட்டனும், அவுக

கொண்டுவர சவுதிச் சாமான் நம்ம வீட்டுக்கும் வாங்கனும்னு திரியிறான், எம் மவன் விவசாயம் பாக்குறானு சொன்னா பொண்ணே கெடைக்காது... சவுதிச் சவுராளி மாப்பிள்ளைக்கித்தேன் பொண்ணு போட்டா... போட்டியாக இருக்கு, எம் மவளுக்கும் மாப்பிள்ளையை பாக்கனும், சமஞ்சு கொமராயி மூணு வருசமாச்சு, கொமர காலா, காலத்துல கட்டிக்குடுக்கலையானு ஊரே கேக்குது, இதுக்குலாம் நான் பணத்துக்கு எங்க போறது அதனாலதேன் ஒரு வருச ஒத்திக்கு சர்கசு கம்பெனிக்கு விட்டுருக்கேன் என்று நீண்ட உரையை நிகழ்த்திய அரக்காசு சிறிது அமைதியானபோது... என்னமோ ஐயா.... ஊரோட தலைவிதியை நாம மாத்த முடியுமா?... வயலுக தரிசாப் போயி, வீட்டடி மனையாத்தேன் போகப் போகுது... உங்களைச் சொல்லிக் குத்தமில்ல ஐய்யாவுக...நான் வாரேய்யா...என காவாயில் மேய்ந்த ஆடுகளை தனது கைகளில் அசைவின் கட்டுப்பாட்டில் ஒருசேரப் பத்தி பொண்ணாத்தா நடந்தாள்.

அரக்காசு தனது வயலுக்கு வந்தபோது, மேலும் இரண்டு லாரிகள் அங்கு வந்தைப் பார்த்தார்.வயலின் வரப்புகளை உடைத்து, திமுசுக்கட்டையால் சமப்படுத்தி, அடுத்து வந்த லாரிகளில் வந்த களைக்கம்புகளை இறக்கி, வயலில் குழிகளை தோண்டி களைகளை நட்டு வைத்தனர். பச்சப் பசேலென பயிர்கள்,தவளை,பூச்சிகளின் சத்தத்தில், வயலின் கிடக்கும் தண்ணீர் சலப்,சலப்பென கரையில்ல் வயல் வரப்பில் மோதிச் செல்லும் அழகை நினைத்துப் பார்த்து இனி அந்தப் பசுமையான காட்சியின் நினைவுகளாகவே போயிரும் என மனசு வலித்தாலும், சர்க்கஸ் கம்பெனிக் கொடுத்த ஒரு வருச ஒத்திப் பணம் இரண்டு லட்சம் தீர்க்கப்போகும் பிரச்சனைகளை நினைத்து மனசு நிம்மதி அடைந்தாலும், வருசம் முடிந்ததும் ஒத்திப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கனுமே?..என நினைத்தபோது, மகனின் சவுதிச் சம்பாத்தியத்தை நினைத்து ''வயல் என்னோடதுதான்'' என்ற ஒரு நிம்மதி பெருமூச்சு அரக்காசை சைக்கிளைத் திருப்பி வீட்டுக்குச் செல்ல வைத்தது அடுத்தடுத்த வேலைகளைப் பார்க்க.

ஊர் முழுவதும், சர்க்கஸ் கொட்டாயி வரப்போவதைப் பத்தித்தேன் பேச்சாக இருந்தது. ஊருக்கு வரும் டவுன் பஸ்களில் சர்கஸ் கம்பெனி விளம்பரம் ஒட்டி அனுப்ப, டவுன் பஸ் சென்ற ஊர் முழுவதும் ''பேமஸ் சர்க்கஸ்''- வருகிற வியாழக்கிழமை சந்தையன்று முதுகுளத்தூரில் ஆரம்பிக்கிறதை அறிந்து முதுகுளத்தூரைச் சுற்றியுள்ள கிராமத்து மக்க சந்தைக்கி முதுகுளத்தூருக்கு இனி குடும்பத்தோட வருவாக, சர்க்கசப் புள்ள, குட்டிகளோட பாத்துட்டு, சந்தச்சாமானான கருவாடு,கத்தரிக்காய்,வெங்காயம்,பூண்டு,தக்காளி,கருப்பட்டிச் சேவு, சீரணி, காரச்சேவு,பொரிகடலை, மம்பானை சட்டி, பன்னருவா,பனையோலைப்பொட்டி,பனையோலைவிசிறி,வெள்ளரிப் பழம், புட்டுப் பழம், பனங் கெழங்கு, பனம்பழம்,கருக்கருவா, புள்ள மருந்துக, புட்டமா,ரிப்பனு,செடக்குச்சைடு,நெளிசைடு, வளவி, பொட்டு, பூவு வாங்கிட்டுப் போகுங்க... இனி ஊரு பிரிமுறுக்கி விட்டாப்புலதேன் இருக்குமும்னு பேச்சா இருந்துச்சு... பேமஸ் சர்க்கஸ் நடக்க ஆரம்பிச்சது சர்க்கஸ் கொட்டாயி நிரம்பி வழிந்தது.

அடி மம்மதுப்பாத்து சர்கசு அம்மூர்ல தெனசரி மூணு கா(ட்)ச்சி நடக்குதாம், கொள்ளைச்சனம் சர்க்கசு பாக்க குமுயிதாம்.

குமியட்டும்,குமியட்டும் நாம போய் பாக்க முடியாதுக்கா, நம்ம வீட்டு ஆம்பள மக்க புள்ள குட்டிகளக் கூட்டிச் சர்கசு பாத்துட்டு வந்துருச்சுக..அதுல சர்கசு பண்ணுற கொமரிக ஜிகு,ஜிகுனு உடுப்பு உடுத்தி உடம்பை வில்லா வளைச்சு சர்கசு பண்ணுறாளுகளாம். போட்டுருக்குற கொட்டாயி ஓட்டை எங்கன இருக்குனு பாத்து அந்தக் கொமரிகளைப் பாக்குறானுகளாம், நம்ம ஊரு எளவட்ட பசங்க, ஒரு கொமரிகிட்ட பேச்சு, வார்த்தையிலாம் நடக்குதாம்,துணி மணி,பூந்தி, சிலேபிலாமுலாம் வாங்கிக் கொடுக்குறானுவளாமுல க்கா... என மம்மதுப் பாத்துவிடம் சாலியாக்கா கூற ஊரின் பள்ளிவாசல் ஜமாத் சினிமாவுக்குப் பெண்கள் போகத் தடை போட்டுள்ளதையும், மீறினால் அஞ்சாயிரம் அபராதம், அபராதம் கட்டுவது கூட பெரிய விஷயமல்ல...ஜமாத்தை மீறி சினிமாவுக்குப் போன ''குடும்ப பொம்பளை''-என சம்பந்தம், சாடி எது நடந்தாலும் குத்திப்பேசுவது வழி,வழி வம்சங்களுக்குப் பேராப்போகுமுனு கட்டுப்பாட்டுக்கு, கட்டுப்பட்டு நடந்தாலும், உள்ளூர் கூரைக் கொட்டகைக்கு சினிமாப் படம் பாக்கப் போகாத ஊர்ப்பொண்டுக, டெளனுக்குக் கல்லுக் கட்டடத்துல ரெண்டு படம் பாத்துட்டு, கிளப்புக் கடையில சாப்பாட்டைச் சாப்புட்டு ஊருக்கு வந்துருவாக. ஊருல மத்த மதத்துல பொம்பள மக்க படத்துக்கு சர்கசுக்கு போகலாம் தடைலாம் இல்லை.

முஸ்லீம் மஹல்லாவுல ஜமாத் போட்டுருக்குற சட்டம், படம் பார்க்க சர்கசு பார்க்க போகக் கூடாதுங்குறது. முஸ்லீம் ஆம்பள மக்க பொழப்பு, தளப்பைத்தேடி பினாங்கு, மலேஷியா,சவூதினு போயிறாகள்ள அதனாலதேன் எனச் சொன்னாலும் ஊரோட இருக்குற ஆம்பளமக்களுக்குத் தடைலாம் இல்லை.

பேமஸ் சர்க்கசுனால எளவட்டப் பயலுக, சர்கஸ்க்காரப் பொண்ணுகிட்ட காட்டுன சாகசத்துல நேபாளத்துப் பொண்ணு, முஸ்லீமு எளவட்டத்தைக் காதலிக்கிறவரை முன்னேற்றமாக போனது. நேபாளப் பெண்ணின் அரை,குறை தமிழ் பேச்சில் சாதனா-ஜாகிர் காதல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர... மற்ற எளவட்டங்கள் காதல் தூதுக்குத் துணையாக, ''தங்களுக்கு ஒரு தங்கக்கிளி மாட்டாதா'' என... பேமஸ் சர்க்கஸ் கொட்டகையின் ரேடியோவில் ''தங்கச் சங்கிலி மின்னும் பைங்கிளி தானே கொஞ்சியதோ''- பாடலை இளமையின் வேகத்தில் ரசித்தபடி சாதனாவுக்கு, ஜாகிர் வந்த தகவலை சீட்டி ஒலியில் தெரிவிக்க, சாதனாவின் பொன்முகம் மலர்ந்து, தார்ப்பாய் ஓட்டையில் தனது முகத்தைக் காட்ட... ஜாகிரும்,சாதனாவும் காதல்மொழி பேசி, காதலின் உணர்வு எதிர்கால பிரச்சனைகளை அறிந்தாலும்,மீறி ''திருமணம்'' நண்பர்களைவைத்துசெய்யஉடன்படிக்கையானபோது சர்க்கஸில் சிலர் சாதனாவுக்குத் துணையாக காதல் உறுதுணை கொடுத்தாலும் அவர்களின் மூத்தவள் ரங்கீலா... சாதனாவைத் தனியே அழைத்து சர்க்கசுக்காகப் போகும் இடத்தில் எல்லாம் ஒரு காதல் கைகூடும், அது காலமெல்லாம் கூட வராது என்பதை தனது வாழ்வின் வேதனைகளைச் சொன்னபோது...சாதனா நேபாளத்தில்

தனது பெற்றோரை நினைத்துக் கவலையடைந்தாலும் ஜாகிரிடம் பேசுவோம் என்று... அடுத்தநாள் என்னைத் திருமணம் செய்தால் நாம் குடும்பம் நடத்தப் பணம், வீடு என உன்னிடம் இருக்கா?..நீ முஸ்லீம், உங்களது பெண்களே சர்கசுக்கு வரக்கூடாதுனு சட்டம் இருக்காம், எங்களது சர்கஸ் கம்பெனி உங்க பெரியவங்க கிட்ட பள்ளிவாசல்ல போயி சர்கசுக்கு உங்க பெண்கள் வர அனுமதி கேட்டும் அவங்க, அனுமதி தரல. இதுல, நான் சர்கஸ் வித்தை காட்டுபவள்,உனக்கும் எனக்கும் சரிப்படுமா?... என பொறுப்பான பெண்ணாக கேட்டபோது, ஜாகிரிடம் சரியான பதிலில்லை,''தங்கச் சங்கிலி மின்னிய வைங்கிளி'' சர்கஸ்காரியாக அப்பொழுது ஜாகிர் மனதில் சாதனா வந்தாள்.

தார்ப்பையின் கிழிசலை ஊசிநூலால் தைக்க ஆரம்பித்தாள் சாதனா. அவள் கண்களைவிட்டு வெளி உலகம் மறைய..மறைய...ஜாகிரும் சேர்ந்தே மறைய...முழு சர்கஸ் உலகத்தில் தன்னை பத்திரப்படுத்திக் கொண்டாள் சாதனா. ரங்கீலா, அடுத்த காட்சிக்கு தயாராகி உடை,உடுத்தி அவளின் குழந்தை பசியில் அழுக,தனது ஜிகு,ஜிகு உடையை அவிழ்த்து தாய்ப்பால் கொடுக்க முடியாமல், கண்ணீர் முட்ட நின்றவளை, சாதானா ஆறுதல் கூறி அனுப்பி குழந்தையைக் கையில் எடுத்து, அழுகையை அடக்க சமையலறையில் சாயாத்தண்ணி கிடைக்குமா?... எனத் தேடினாள்.

தகப்பன் யாரென தெரியாத குழந்தை... சாயாத்தண்ணியை சப்புக் கொட்டிக் குடித்தது. ஊர், ஊருக்கும் போனாலும், எந்த ஊரிலும் இளமைக் காதலின் கற்பை இழக்கக் கூடாது, பிறந்த ஊரோடு தளத்தோடு தன்னைச் சுற்றியுள்ளவனைக் கலியாணம் செய்தால் எனது வலி புரிந்தவனாக இருப்பான். ரங்கீலா.... என்னைக் காப்பாற்றினாள் என மனதில் நன்றியை ரங்கீலாவுக்கும், ஆண்டவனுக்கும் கூறியபோது ''அல்லாஹ் அக்பர் அல்லாஹ்-என பள்ளிவாசலின் பாங்கு ஒலித்தது. அல்லா காப்பாத்திட்டே... என நினைத்தவளை ரங்கீலா தோளைத் தொட்டு திருப்பியபோது வியர்வையுடன் நின்ற ரங்கீலா இன்னும் பத்து நாளையில...நம்ம சர்கஸ் ஒத்தி முடியுது, நாம இங்க வந்து வருஷம் ஒன்னாச்சு.நம்ம சர்கஸ் அடுத்து மதுரையில நடக்கப்போகுது என்றபோது சாதனா தார்ப்பாயின் தையலைக் கவனித்தாள்.

அரக்காசுவின் மகன் சவுதிபோனாலும் அங்கு அரபியின் பிடியில் வகையாக மாட்டியவன் பணம் அனுப்ப முடியாமல், ஊரின் தனவந்தர் அரக்காசுவின் வயலை வாங்கி சினிமாத் தியேட்டர் கட்ட அடித்தளத்தைப் போட்டார், ஊர் டெவலப் ஆகியது, வெள்ளாமையும் போச்சு, ஊரு வெளங்காம போச்சு, ம்ஹூம்.

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின்
நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*

9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*120*
2.	*ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	*மகிழ் பேரின்பம் (poems)*	*200*
4.	*பொன் வேலி (poems) நூல்கள்*	*200*
5.	*திருக்குறள் கதைகள் - பகை மாட்சி*	*100*

தே. ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

இல்லாமை அறியா இல்லாள்

சசிகலா விஸ்வநாதன்

தாரிணி," ஏங்க! நல்ல மூடுல இருக்கீங்களா", என்று சோமனிடம் கேட்க,அவன் தாரிணியை நிமிர்ந்து பார்த்தான்." "என்ன விஷயம்; இத்தனை பீடிகை எதற்கு" என்று மனதிற்குள் நினைத்தவாறே,''பக்கத்தில் உட்கார்ந்து தன் போக்கில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மாமுனியை, தாரணியின் கையில் மாற்றி விட்டு,"மாணிக்கம் அக்காவிடம் கொடுத்து விட்டு வந்து சொல்லு."என்றான். போன வேகத்தில் திரும்பி வந்தவள்,கொஞ்சலாக சோமனின் கையோடு தன் கையை பிணைத்துக் கொண்டவளை, யோசனையோடு சோமன் பார்த்தான் .ஒவ்வாத செலவுக்கு அஸ்திவாரம் போட, சரசமாய் பேசுவது அவனுக்கு அருவெறுப்பையே அளித்தது. தன் கையை அவளிடமிருந்து விடுவித்துக் கொண்டவன்,'சொல்லு, தாரிணி,என்ன விஷயம்?அம்மாவைப் பார்க்க ,புதூர் போகணுமா?இந்த வாரம் எனக்கு சோழவந்தான் போக வேண்டியிருக்கும் உன்னை வெள்ளிக்கிழமையே புதூர் வீட்டில் கொண்டு விட்டு விடுகிறேன் நீ ஞாயிறு ஐந்து மணிக்கெல்லாம் வந்துவிடு. நான் வரும்போது பெரிய அண்ணியும் கூட வருவாங்க. அவங்களை டாக்டரிடம் கூட்டிப் போகணும்'என்றான். தாரிணி,'புதூர் வீட்டுக்குப் போக வேண்டாம். .இப்பந்தானே புதூர் போய் வந்தேன். நான் சொல்ல வந்த விஷயமே வேறு. தீபாவளிக்கு இந்த வருடம் ஒரு பட்டு சேலை எடுக்கலாமா? கல்யாண சேலைகளையே இந்த மூன்று வருஷமா கட்டிக் கட்டி அலுத்து விட்டது . உங்களுக்குத்தான் கைத்தறி கடையில் பட்டு சேலை எடுக்க கைத்தறி கடன் தருவாங்கதானே. பத்தாயிரத்துக்கு பட்டு சேலை எடுத்தாலும் தள்ளுபடி போக எட்டாயிரம் தான் வரும். மாதம் எண்ணூறு தானே! மூச்சை ப் பிடிச்சு கட்டிடலாம்"என்று கொஞ்சுதலாகக் கேட்டாள்.'யார் மூச்சை',எனறு மனதிற்குள் நினைத்தபடியே,,சமாதானமாக அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்;சோமன்.

''இதோ பார்;தாரிணி! உனக்கு மட்டும் பட்டு சேலை எடுக்க முடியாது .தீபாவளிக்கு ஜவுளி எடுக்கும் வழக்கமே நீ இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் .நம் வீட்டில் தை பொங்கலுக்குதான் வீட்டில் ஜவுளி எடுக்கும் பழக்கம். அண்ணிகள் அக்கா எல்லோருக்கும் சேர்த்துதான் எடுக்க வேண்டும். வீட்டு பொதுவுல என்ன பட்ஜட் சொல்றாங்களோ அதற்குள் நீங்க எல்லாரும் பேசி ஒரு முடிவுக்கு வாங்க. என்றான்" ஆமாம்! எப்போதும் ஏதேனும் சாக்கு தான் சொல்றீங்க; நீங்க கவர்ன்மென்ட் வேலை பார்க்கறீங்க. நானும் தான் சம்பாதிக்கிறேன். எப்பவும் பஞ்சப்பாட்டு. அப்பவே என் அத்தை சொல்லிட்டே இருந்தாங்க .சமுசாரி வீட்டிலே தாரணியைக் கட்டிக் கொடுக்காதீங்கன்னு.. ஒழவன் கணக்குப் பார்த்தா,ஒழக்கு கூட மிஞ்சாதுன்னு சொன்னாங்க..தகப்பன் இல்லாத பிள்ளையை சீக்கிரம் கட்டிக்

கொடுத்துறணும்னு அண்ணன் தான் அவசரப்பட்டு முடிவெடுக்க, அம்மாவும் மருமகனுக்கு கவர்ன்மென்ட் வேலை, டவுனில்தானே வாழப் போறாங்கன்னு தப்பு கணக்கு போட,, நான் மாட்டிக்கிட்டேன், இந்த வீட்டிலே." என்று சலித்துக் கொண்டாள், தாரிணி. மேலே பேசுவது "ஆபத்து" என அறிந்து, மௌனமானான், சோமன் .அத்துடன் அன்று பிரச்சனை முடிந்தது.

"என்னங்க! நாம் ஒரு கார் வாங்கலாமா" என்று சோமனிடம் கேட்டாள் , தாரிணி; சிறிது நாட்களுக்குப் பிறகு." நமக்கு எதற்கு கார்? அதுதான் பைக் இருக்கே. வீட்டில் மூன்று பேருக்கும் பைக் இருக்கே; அது போதும் என்றான்; சோமன்." ஏங்க! உங்க ஆஃபிஸில் வேலை பார்க்கும் பாஸ்கர் கார் வாங்கியிருக்கிறார். நானும் தானே சம்பாதிக்கிறேன்; நம்மால் இ.எம்.ஐ கட்ட முடியாதா,?டவுனில் வேலை பார்க்கிறோம் .படிச்சிருக்கோம்.கொஞ்சமாவது கெத்தாக இருக்க வேண்டாமா?நம்மை நாமே உயர்த்திக் காட்டத் தெரிஞ்சுக்கணும். ஊரிலே இருப்பவங்களும் அப்பதான் நம்மை மதிப்பாங்க' என்று ஆரம்பித்தாள், தாரிணி. அடுத்த வாக்குவாதத்துக்குத் தயாரானான்,சோமன். அடிக்கடி இம்மாதிரி தர்க்கத்தில் ஈடுபடுவது சோமனுக்கு ஆயாசமாக இருந்தது'யாரைச் சொல்லிக்காட்டறே? ஊரில் நம்மை மதிக்கத்தான் செய்யறாங்க.தாரிணி! இதோ பார்.நீ சொல்வது சரி. நானும் பாஸ்கரும் ஒரே சம்பளம் தான் வாங்கறோம்.நீ வேலை பார்ப்பது ஒரு தனியார் பள்ளி.நீ அங்கும் ஆசிரியையாக் கூட இல்லை. பரிசோதனைச்சாலையில் உதவியாளராக இருக்கிறாய். ஐந்து வருட சர்விஸுக்கு பிறகு,இப்போதுதான் உன் சம்பளம் .பத்தாயிரத்தை தொடுகிறது . இதில் வீட்டுவேலை பார்க்கும் மாணிக்கம் அக்காவின் சம்பளமே இரண்டாயிரத்து ஐநாறு. மாதம் ,நீ ஸ்கூலுக்கு போய்வர ஆட்டோ சார்ஜ் ஆயிரம்.கைசெலவுக்கு தினம் ஐம்பது, நூறு என்று செலவு வேறு. கணக்குபோட்டு பார். பாஸ்கர் வீட்டில் செய்வதை எல்லாம் நாம் இந்த வீட்டில் செய்ய இயலாது. உனக்குப் புரியுதா, இல்லையா? பாஸ்கர் மனைவி மிதிலா ,அரசு உயர் நிலை பள்ளியில் கணக்கும் ஆங்கிலமும் கற்பிக்கும் ஆசிரியையாக இருக்கிறாள். தனியாக உயர் வகுப்பு மாணவர்களுக்கு ட்யுஷன் வேறுஎடுக்கிறாள். நீயும் கவனமாகப் படித்து பரிட்சையில் பாஸ் பண்ணியிருக்க வேண்டும். இத்தனைக்கும் உனக்கு கோச்சிங் வகுப்புக்கு வீட்டுப் பொதுவில் பணம் கொடுக்கத்தானே செய்தார்கள்" என்று சற்றுக் கடுமையாகவே பேசி இந்த விவகாரத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க. விரும்பினான். தாரணிக்கு ஒன்றும் மனதில் ஏறவில்லை. அழுகையும் ஆத்திரமாகவும்' கையில் இருந்த கை பையை தூக்கிக் கீழே வீச, உள்ளிருந்த பொருட்கள் தரையில் சிதறின .'சமயம் பார்த்து தான் தேர்வில் தேறாததையும், அவளுக்காக வீடு தண்டமாக செலவழித்ததையும் குத்திக்காட்டி பேசுவதாகத்தான் புரிந்து கொண்டாள்.'விரலுக்குத் தக்கதான் வீக்கம் இருக்கணும்'என்று காட்டமாகச் சொல்லி வெளியேறிய சோமனுக்கு ,இரண்டு நாட்கள் மௌன யுத்தத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. அவளது பாராமுகம் அவனை அவமானப் படுத்துவதாக உணர்ந்தான் தாரணியின் வீம்பும் ஆங்காரமும் அவனைக் கோபப்படுத்தியது,என்றாலும் அவன் பொறுமை காத்தான். வீணே வம்பை ஏன் விலை கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்ளணும், என்ற மனநிலையை சோமன் எப்போதும் கடைப்பிடித்தான். தாரிணியின் முரண்டும் ,கோபமும் தாபமும்,கண்ணீரும் சோமனுக்குப் பழகிப் போன வாடிக்கை .அதைப் பாராட்டாமல் இருப்பதே உத்தமம், என்பதைக் கற்றுத் தேர்ந்து விட்டான்,சோமன்.

மறு வாரமே,ஒரு பெரிய பூகம்பம் வெடிக்க இருக்க இருக்கிறது, என்பதை இருவருமே அறிந்திருக்கவில்லை. அன்று காலை குழந்தை மாமுனி,தாரணியின் தாலி கொடியை பிடித்து இழுக்க, தாரிணியும் குழந்தை கையிலிருந்து செயினை விடுவிக்க முயல, ,தாலி செயின் அறுந்து விட்டது. சோமன் அன்று மாலையே நகை கடைக்குப்போய் ஒக்கிட்டுக் கொள்ளலாம்,என்று சொல்ல, தாரிணி'ஏங்க! கூட ஒரு பவுன் போட்டு வேற டிசைனில் புதிதாகச் செய்து விடலாங்க 'என்றதும் ,சோமன் ஆடிப் போய் விட்டான்.'என்ன சுளுவா சொல்லிட்டே. .பவுன் விக்கிற விலையில் நம்மால் அகலக்கால் வைக்கலாகாது .சும்மா ஒக்கிடுவதற்கே எம்புட்டு காசாகுமோ, என்று யோசனையாய் இருக்கு.நீ வேற புதுசா கிளப்பி விடாதே',என்று அவனது எதிர்ப்பைத் தெரிவிக்க, தாரிணியின் கோபம் கட்டில் நிற்கவில்லை.'ஒரு தாலி செயினுக்குக் கூட வழி இல்லாம அந்த மீனாட்சி என்னை வச்சுட்டா.. ஏழு பவுனில் தாலி செயின் போடணுமின்னுதான் கல்யாண சமயத்தில் பேசியிருந்தது. ஐந்து பவுனில்தான் போட்டீங்க. கல்யாணம் ஆகி இந்த மூன்று வருடங்களில் ஒரு குந்துமணி தங்கம் வாங்கித் தந்தீங்களா?நானும்தான் வேலை செய்கிறேன்'என்று பொருமை ஆரம்பிக்க ,சோமனும் எதிர் சொல் எடுக்க வார்த்தைகள் இரு பக்கமும் கனமாக விழ ஆரம்பித்தன.'படித்த பெண் .பக்குவப்பட்டிருப்பாள் ,நாலும் தெரிந்தவளாய் இருப்பாள் என்று நினைத்து தான் உன்னைத் திருமணம் செய்தேன். நம் வீட்டின் குடும்ப பின்னணியை இந்த மூன்று வருட காலத்தில் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நீ மதியீனமாய் இருப்பாய்,என்று நான் நினைக்கவேயில்லை. டவுனில் படித்து வேலை பார்க்கும் உனக்காவது பவுனில் தாலிக்கொடி போடணுமின்னு பெரிய அண்ணி ஆசைப்பட்டு ஒத்தைக்காலில் நின்னு தன் சிறுவாட்டுப்பணம் அத்தனையும் கொடுத்து தன் மகளுக்கு காது குத்துக்கு அவங்க வீட்டில் போட்ட இரண்டு பவுன் செயினையும் கொடுத்தாங்க. நீ இப்படி இணக்கம் இல்லாம இருப்பது , சரியா'என்று கேட்க, தாரணிக்கு ஆத்திரமும் ஆங்காரமும் பொங்கியது. அவங்க தயவில்தான் தாலி செயின் வாங்கிப்போட்டீர்கள்,,என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் ,அந்த தாலி செயின், ஒருநாளும் என் கழுத்தில் ஏறியிருக்காது.என்று கூறிய வண்ணம் கையிலிருந்த தாலிக் கொடியை தரையில் விட்டெறிந்து, ஊரில் வாங்கும் விவசாய கடன் அத்தனைக்கும் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட டவுனில் இரண்டு ஏமாளிகள் இருக்கும் வரை அங்கிட்டு இருக்கும் உங்க அண்ணிகளும் ,அக்காவும் புளிய மரத்தடியிலும், பூவரசு மரத்தடியிலும் சொகுசா ஆடுபுலி ஆட்டம் ஆடின அலுப்பில் தூங்கித் தூங்கி எந்திருப்பாங்க. நான்தான் இங்கு அவதிப்பட்டு அலமலந்து போகிறேன்.கொடுத்து வைத்த மகராசிகள்''என்று சலித்துக்கொண்டாள் அத்தனையும் பொறுத்த சோமனை,அந்த கடைசி வார்த்தைகள் கொந்தளிக்க வைத்தன. அண்ணிகளை நக்கலடித்துப் பேசிய வார்த்தைகளை ,அவனால் தாங்கவே இயலவில்லை பொங்கி எழுந்த சோமன்,'வயல் வேலை என்றால் உனக்கு என்னவென்று தெரியுமா?தினம் தினம் சந்தியில் வயலுக்குப் போனால் அந்தியில்தான் வீடு வர முடியும். விதைப்பில் இருந்து அறுவடை வரை ஆட்களைக் கட்டி மேய்ப்பதெல்லாம் லேசு பட்ட வேலையா! உனக்கு சொகுசாக அரிசி மற்ற பொருட்கள் இந்தவீட்டுக்கு அனுப்புவதற்கு அவர்கள் படும் பாடு உனக்கு எப்படி தெரியும்? ஒரு இடம் போய் வர முடியாது. நாள் கிழமை கோயிலுக்குப் போக முடியாது.ஒரு நல்ல சேலை உடுத்த முடியாது ஒரு கல்யாணம் காட்சின்னு போக முடியுமா?.அதை விடு. அவங்க புருஷனோடு உட்கார்ந்து பேசக்கூட காலத்தை கடன் வாங்கினால்தான் முடியும்.பணம் காசை கடன்

வாங்கலாம். நேரத்தை யாரால் கொடுக்க ஏலும்?பாதி நாட்கள் சின்னணன் ராவுக்கு வீட்டுகே வராது. காட்டுலே காவலுக்கு தங்கிடும். பிள்ளை உண்டாகலைன்னு ஆத்தாவின் சடவு பேச்சைக் கேட்டு சின்ன அண்ணி,காளீஸ்வரி, சிரிச்சுட்டே போயிடும் .தம்பிக்கு பொண்ணை கொடுத்துட்டு எங்க அக்கா,பவுனம்மா இங்கிட்டும் பேச முடியாம, அங்கிட்டும் பேச முடியாம கிடந்து தவிக்குது இதை வெச்சு நித்தியமும் மாமா, அக்காவுடன் சண்டை இழுத்து வைக்குது இதெல்லாம் உனக்குப் புரியாதா?சும்மா நான் சம்பாதிக்கிறேன் ,என்று சொல்லிட்டுத் திரியாதே .அவர்களை பார்க்க நீ சொர்க்கத்தில் இருக்கே .ஒண்ணும் இல்லாத விஷயத்தை சுளுவா ஃபேன் அடியில் நின்னுக்கிட்டு வாய் பேசறியே ,கொஞ்சமேனும் மனசாட்சியோடு ,நெஞ்சிலே கை வைத்துச் சொல்லு .உன்னால் ஒரு நாள் நிலத்துல நிக்க முடியுமா?ஒரு வேளை காட்டு வேலை பார்க்க முடியுமா?.அவர்கள் போடும் உழைப்பிற்கு எங்களிடம் கேட்டால், பணமில்லை கொடுப்பதற்கு" என்று காட்டமாகச் சொன்னான்.

தாரணி.""ஆமாம்! உங்க வீட்டு ஆளுங்கதான் உங்களுக்கு உயர்த்தி. இப்ப என்னை மட்டப்படுத்தியே பேசுங்கள்" என்று விசும்பி விசும்பி அழுகிறவளை எப்படி ஆறுதல் சொல்லி தேற்றுவது என்று சோமனுக்குப் புரியவில்லை. பேசாமல் நான் அத்தை பெண் பூவாத்தாளையே கட்டியிருந்திருக்கலாமோ என்ற எண்ணம் தலை தூக்க. சோமனுக்கு அவன் மேலேயே அவனுக்கு வெறுப்பாய் இருந்தது. அலை பாயும் மனத்தைச் சுண்டி இழுத்து எதார்த்த உலகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிலை நிறுத்த ,அவனுக்கு ஒரு நொடியே பிடித்தது. தலையை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு சோபாவில் சரிந்தான். ஏதோ ஒரு உள் உணர்வு அவனை உசுப்ப,கண் முன்,அவன் கண்ட காட்சி அவனைக் கலவரப் படுத்தியது . தாரிணி கட்டில் மேல் நாற்காலி ஒன்றைப் போட்டு அதன் மேல் ஏற முயற்சி செய்து கொண்டிருந்தாள் .கையில் அவளுடைய துப்பட்டா இருப்பதைப் பார்த்ததும், நிலைமையின் விபரீதம் புரிய சோமனுக்கு ஒரு கணம்தான் ஆகியது .வந்த கோபத்தில் சோமன் தாரிணியின் கன்னத்தில் ஓங்கி ஒரு .அறை விட்டதில் ,அவள் மயங்கி சுருண்டு கீழே விழுந்தாள்.

தாரிணி மருத்துவமனையில் ஒரு நாள் இருந்து வர ஐந்தாயிரம் செலவாயிற்று, சோமனுக்கு . தாரிணிக்கு உடல் நலத்தில் பெரிய கோளாறு இல்லை என்றும் ,மன அழுத்தத்திலும் ,மன சோர்விலும், இருக்கிறாள் என்று மருத்துவர்கள் சொல்லியும், தாரிணி மனநல மருத்துவம் எடுத்துக்கொள்ளமறுத்துவிட்டாள்.இப்போது சோமனின்பாடுதான்படுதிண்டாட்டமாகியது . அரசு சம்பளம் அவனுக்கு இருபது நாட்களுக்குக் கூட கண்டு வர வில்லை. தாரிணி சோமனை மிரட்டி மிரட்டியே தன் விருப்பங்களையும், இச்சைகளையும் பூர்த்தி செய்து கொள்வதில் தேர்ந்து விட்டாள். சோமனும் அவளுடைய அடாவடித்தனத்துக்கும், அகம்பாவத்துக்கும் பயந்து கொத்தடிமையாய் வாழப் பழகி விட்டான்.இப்போது ஏழாம் வகுப்பு படிக்கும் மாமுனியும், வளர்ந்து வருகிறாள், இன்னொரு தாரணியாய். இல்லாமை அறியா இல்லாள் அகத்திருக்க,வேறொரு பொல்லாமை வேண்டுமோ, இல்லம் கெட்டழிய.

இன்றுன்னை பைத்தியமாய்
நேசிப்பவர்கள்
நாளை உன்னை வெறுத்து
நகரலாம்
இன்றுன்னை கொண்டாடித்தீர்ப்பவர்கள்
நாளை உன்னை எள்ளிநகையாடலாம்
இன்றுன்னை அணைத்துக்கொண்டு
உடனிருப்பவர்கள்
நாளை உன்னை அந்நியமாக்கி
தூர நிறுத்தலாம்

எல்லாம்
நிகழக்கூடியதுதான்
இல்லையா

எவ்வளவு
இறுகப்பற்றினால்தான்
என்ன
உதிர வேண்டிய இலைகள்
அதற்குரிய நேரத்தில்
உதிரத்தானேப் போகின்றன

பின்னும்
இந்த உறவில்
ஏன் நீ ஒரு மரமாக
இருக்கக்கூடாது

வந்தமரும் சில பறவைகள்
எச்சமிடும்
இன்னும் சில போகும் வழியில்
சொற்ப நேரம் இளைப்பாறிச்செல்லும்
சமயங்களில் ஒன்றிரண்டு கூடு கட்டி அங்கேயே
சிறிது காலம் வாழ்ந்து
மறையும்

அதற்கென்ன
தேடி வருவதையும்
விலகிச்செல்வதையும்
வேண்டாமென
தடுக்கின்றதா
மரம்

ஆக
எதையும்
அவ்வளவெல்லாம் நெருக்கமாக்கிக்கொள்ளாமல்
எதையும்
அவ்வளவெல்லாம் இறுகப்பற்றிக்கொண்டிராமல்

இந்த உறவில்
ஏன் நீ ஒரு மரமாகவே
இருக்கக்கூடாது?

– ரிஸ்கா முக்தார்

ARANYANI

VIJENI

CHAPTER - 12

Eyes might deceive you, but not your heart!

Suttum vili sudar thaan kannamma...

Sooriya chanthiraro...

Vatta kariya vili kannamma...

Vaana karumai kolo...

The rhythmic lyric came out from a radio with circular dials and speakers. Pranav's guttural snore interrupted the music. Navin sighed.

He walked up to the radio, nodding his head to the rhythm, and twisted the volume knob to high. Every morning he would play songs on the bronze radio gifted by his father, and today it was a romantic number.

"Kola kuyil osai unathu kuralin inimai adi..." He sang along, taking his tenth push up.

"Dey, reduce the volume..." Pranav threw a cushion at him in his dozy stupor. "You can romance later..."

Using a towel, he smeared off the sweat balls from his face. "It is almost nine. Do you have any plans to wake up or not?"

Pranav lazily stretched before stifling a yawn behind his hand. “So are you excited or scared?”

“Why should I be scared?”

“Because the girl should like you...” He walked to the clumsy shelf and sluggishly searched for his brush.

“Is there anyone who would not like me?”

“Be careful,” he said, raising his brows at him. “She might prick you too.”

And they both guffawed thinking about an incident...

“Where are you, Pranav? I have been waiting for you for the past twenty minutes.”

“What? I said bus stand, you fool!”

“Fine! Get that 32A bus and come soon. I will not wait any longer.”

“Yes! Yes!” Cursing Pranav under his breath, Navin hung up the phone,. He settled the bill for the call and sat on the cement bench.

“AAAHHHHH,”

He turned around. A guy was stroking his left thigh and a few people had gathered around him, asking questions.

“What happened?”

“Are you fine?”

“Why did you shout?”

“No... Nothing...” The guy gritted his teeth and said, “I... I am... fine.”

Before anyone could ask anything more, he left the place as if in a hurry.

Navin looked at where the guy was staring. A girl brushed her hair away from her face and turned towards him. He saw smiles around her lips and laughter in her

eyes. Curious to know what had transpired, he inched closer towards the gang of girls.

"Aarushi," One of her friends prodded the girl in her ribs. "I know you did something, do not laugh... tell me what happened?"

The girl tilted her head to the left and grinned as she raised a shiny compass in the air.

"Oh my god! I knew something was fishy... tomorrow he is going to get his friends!"

Another girl whimpered, "You are dead."

"Ha! Ha!" She giggled, batting her long eyelashes dramatically. "Let him... I will have another plan for that too."

Suddenly, anger masked her face, and she clenched the compass tightly in her long, soft fingers. "Such pathetic guys should be punished... actually he deserves more!"

Navin smiled to himself; he always liked bold girls. He got impressed by her brashness and naughtiness. He moved a little closer, to get a better glimpse of her facial features. She was beautiful, the kind of girl that would make any guy look at her twice.

He looked at her olive skin. The eyes reminded him of the water marbles that rolled as she looked around. Her nose was small but straight-edged and looked pinkish in the sunlight. Her lips were shinning, and he imagined her putting the lip balm over them to keep it soft. The top lip was thinner, but with the perfect curve; the bottom one was larger and plusher. He stared at her for too long that he gained her attention for a moment.

From that day on, he started gathering her details and informed his parents to arrange for his wedding with her. Both the families spoke with each other, after which they were satisfied with the proposal.

***

Shritha entered the lavender room with posters that covered every nook and corner of the wall. That was how Aarushi kept her room; posters of butterflies, flowers, horses, and dogs kept changing according to her mood.

"Aarushi?" she called her voice cracking. "I have been seeing you since the time you came home." Her mother snatched the pen that she was staring at. "Aarushi! I am talking to you."

"Ma!"

"What are you thinking so much, Aarushi?" Deep worry flashed through Shritha's face. "That look in your face is disturbing. What is wrong with you?"

"I am fine, Ma. I was just thinking about work..." She tore the paper that she had scribbled, wadded, and tossed it away.

"No, you do not seem like you are normal. You go to the temple."

"Ma!" She raised her eyebrows. "So according to your theory, if I go to the temple I will feel better?"

"I don't know about you, but if you go, I will feel better. Will you do it for me?"

Sighing, she nodded.

"Take thatha with you, I have already informed him, and he is waiting for you in the courtyard."

Aarushi twisted to look out from her window. Venkateshwar was watering the pots lined at each corner of the rectangle courtyard. The four edges of the inner yard were lined with roofs sloping inwards, and surrounding it lay five rooms.

The interior of her ancestral house was something that no one could stop gawking at. Plenty of windows for ventilation, wooden pillars with exquisite carvings, a backyard with coconut, pomegranate, neem, mango, banana, and so many flowering plants. If anyone would ask how heaven would look, she would bring them and show her house.

***

After travelling from Varaagur in Kolan express for more than four hours, Navin had reached her house. It was a big, beautiful, ancient house. With hesitation, he stood on the veranda, listening to the Tamil song that was playing inside. He smiled as he watched the two pigeons on the ledge under the veranda ceiling, kissing each other's beak.

"Come on in," Krishnan exclaimed.

Startled by the sudden voice, he turned around and instinctively recognised the person. He smiled. "Sure, Uncle."

"So tell me, Navin." Krishnan lifted the curved metal arm of the gramophone. "Do you like our house?"

"It is a lovely house, Uncle," he said, handing over the fruits that he had brought. "But I like the members living here more than the walls surrounding them."

"Is it all of us or especially my sister, Navin?" Rahul sitting on the courtyard step with his arm around a pillar, smiled teasingly.

"Rahul!" Krishnan glared. "Call him as Maama."

"That is okay, Uncle. I like it when he treats me as his friend."

"Navin, why is it that you had asked us not to tell anything about your marriage alliance to Aarushi?" Krishnan asked curiously, sitting across from him in the dining chair.

"That is because he wants to know if she likes him before getting married to her." Valliammai came from the puja room with a copper plate.

He stood, folding his hands. "Vanakam, Paatti ma."

"This is the prasadam from a temple in Kandhanallur. It is very powerful... give it to your parents, Navin."

He picked up the cover, folded it, and tucked it into his pocket. "Sure, Paatti ma."

It was because of Valliammai that this alliance became possible. She convinced her son and daughter-in-law and made things easy for him. He would always be grateful to her for that.

They chatted among themselves for some time when Shritha entered the hall with teacups and samosas.

"When will Aarushi come home Shritha?"

"It is 6:30 Krishnan, the puja would have been over." She served one of the samosa plates to Navin. "She will be here soon."

Krishnan picked up his teacup. "Navin, you look a bit tensed." After taking a sip of the ginger tea, he asked, "How shall we introduce you to her?"

"There will be no need for that." Shritha intervened, spooning out the tomato chutney on his plate. "I have already sent his photo to her."

"What? When di—" Krishnan's words were interrupted when Aarushi entered the house, slamming the door behind her.

"Ma!" she yelled. "I swear I am going to kill him. How dare he orders me not to bring those kids inside the temple? The place of god belongs to everyone... how can he talk like that to me? Everyone, even thatha is supporting him Ma... those kids are poor and innocent... I will not lea—"

"Aarushi!" her mother interrupted and took her aside. "Calm down... we shall talk about that later." She pointed towards Navin. "Look who has come..."

Aarushi's glance wavered for an instant. "I don't care... I will avenge him for all that he did. I will surely teach him a lesso—"

"Aarushi!" Krishnan glowered. "Behave yourself!"

Gulping down her grumblings, she replied softly, "Yes, Pa."

Yet, she could not control her emotions and continued to murmur under her breath. He will learn his lesson... how can people behave like this? She pulled the pink tassel at the edge of her sari's border in irritation. There is no peace in the temple as well. What guts did that baldy have to talk to me like that?

Krishnan broke the silence that prevailed in the room for a few seconds. “This is Navin, and he has come all the way from Varaagur to see you.”

Navin walked up to her and smiling elegantly. “Hi, I am Navin.”

“Hi...” They shared a cordial handshake. “I am Aarushi... do you know me?”

“Nope, but would love to...”

“You look familiar to me.” Aarushi couldn’t deny he was so handsome, like a model in the advertisements. Everything was perfect, his straight hair, sharp nose, medium-sized lip, and the thick moustache that ended at the right place.

“That is how it is.”

Ah! The photo! So this is the guy Ma had been forcing me to see...

By the time they were introducing each other, everyone had left to the backyard to give them some privacy. Aarushi turned around and noticed that her family had left them alone.

“I can understand what my family is up to. However, please do not get me wrong. I have no interest in marriage now... there are lots for me—”

“Oh... oh...,” he interrupted. “There is no such thing as marriage. I am your father’s friend’s son, that’s all. I just came to meet you all.”

“Oh... I am sorry... I came to a wrong conclusion.” She gestured him towards the sofa. “Come on, let us sit, and talk.”

“Wait!”

She turned to him.

“This is what I thought to tell you... but I am not able to lie to you,” he said, looking down at the floor. “I am here as an alliance... but this is not the first time I am seeing you. I have seen your originality and I like it. Similarly, I want you to see mine. And, only if you like me, we shall proceed further. Until then, I am your friend... if you agree I will be your lifelong friend.”

“I am glad you understand my feelings. I don’t know wh-what to te—”

She was distracted when Betty started to scratch the maroon fabric of the sofa.

"Betty!" she cried, rushing towards the sofa, followed by Navin. "Get down! If Pa sees this, he will kill you and me!"

Betty gave a loud bark, not listening to anything she said.

"Betty!" she screamed again and took him in her hands. "How many times should I tell you? If Pa sees this, he will not let us both inside!"

Navin extended his hand towards her. "Give him to me."

"No, no. He will not go th—" Before she could finish, Betty crawled upon him. "What? How is it possible? This is the first time I am seeing him in a stranger's hand."

Navin scratched behind the dog's ear. "Maybe he likes me."

"Hmm-hmm."

"Can you get me the nail cutters please?" he asked, gently rubbing Betty's belly as he crawled over his chest.

After disappearing to the storeroom towards the right, she brought a blue nail cutter. "Here!"

"Thanks."

"Don't strain, he will not let you touch his nails, I have tried it many times." She sighed. "Once in three months, I need to take him to the doctor for that. He is a very adamant and naughty boy!"

Navin took the dog towards the kitchen basin, turned the tap, exposed his paws over the flowing water, and carefully started to cut his nails. "See..." He smiled at her. Betty stayed in his lap without any movement, his eyes glued to Navin.

"Whoa!" she exclaimed loudly. "How did you do that? I mean... how is he not even moving in your hands?"

He chuckled. "I have no clue. Don't get jealous."

“I am jealous. How is he being so disciplined with you?”

“So tell me,” he asked, without taking his eyes from Betty’s paws. “Why were you so upset when you came home?”

“Ah, that is one of the few things that irritate me in this town. Some people never change!”

“Hmmm.”

“Do you know in this town a few kids are not allowed inside the temple? I wonder who sets these kinds of stupid rules. I mean, aren’t kids the purest form of god?”

“Yeah, absolutely.” He started to file, making the nails blunt.

“People are senseless, but that does not mean I will let them follow these stupid rules... when I was waiting outside the temple, a kid came to me asking for the Pongal prasadam... probably he was hungry. I took him and his friends inside without paying heed to anyone.” She clicked her tongue. “I know this will become a big issue but, I don’t care.”

“I know...” He looked at her. “I have already seen the brave Aarushi.” Passing Betty over to her, he said, “Now, he can roam freely wherever he wants.”

“Thanks, Navin. You made him happy.” After a moment, she said, “Even me...”

They both glanced at each other and smiled.

“Congratulations, Shrithu!” Valliammai exclaimed, looking at them from the backyard window. “Believe me; this alliance will surely work out.”

மார்கரெட் நைட்

பெண் தாமஸ் ஆல்வா எடிசன் என்று அழைக்கப்படும் மார்கரெட் நைட் பிறந்த தினம் 1838.

இயந்திரங்களை உலகுக்குத் தந்த சாதனைப் பெண்

19-ம் நூற்றாண்டின் மிகவும் பிரபலமான அமெரிக்கப் பெண் கண்டுபிடிப்பாளர் மார்கரெட் ஈ. நைட் (Margaret E. Knight) பிறந்த தினம் இன்று (பிப்ரவரி 14).

- அமெரிக்காவில் யார்க் என்ற சிறுநகரில் பிறந்தவர் (1838). 12-வது வயதில் படிப்பை நிறுத்திவிட்டு பருத்தி ஆலையில் பணியாற்றத் தொடங்கினார். அவ்வப்போது நெசவுத்தறியில் குறுக்கு இழைகளை எடுத்துச்செல்லும் கருவி நழுவி அங்கு வேலை பார்க்கும் சிறுவர்களைப் பதம் பார்ப்பது வாடிக்கையான நிகழ்வு.

- இந்தச் சிறுமி இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று எண்ணி அந்த ஷட்டிலுக்கு மாற்றாக ஒரு சாதனத்தைக் கண்டுபிடித்தார். இதை அந்த நிர்வாகம் பயன்படுத்தத் தொடங்கியது. மெல்ல மெல்ல நாடு முழுவதும் இது பயன்பாட்டுக்கு வந்தது.

- இந்தச் சிறுமி, இதனால் எந்த வகையிலும் பலனடையவில்லை. ஆனால், இந்த அனுபவம் அவளுக்கு பின்னாளில் பல்வேறு சாதனங்களைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையையும், கற்பனைத் திறனையும், விடாமுயற்சியையும் வழங்கியது. சில ஆண்டுகளில் நியு ஹாம்ஷயரில் கொலம்பியா பேப்பர் பேக் நிறுவனத்தில் வேலை கிடைத்ததால் அங்கு குடியேறினார்.

- அந்த நாட்களில் பொருள்களை வாங்க காகிதத்தை மடித்து 'v' வடிவில் அடியில் ஒட்டி பயன்படுத்தினார்கள். அடித்தட்டையான (flat bottomed) பைகளைக் கைகளால் செய்வது மிகவும் கஷ்டமாகவும் நேரம் பிடிக்கும் வேலையாகவும்

இருந்தது. காகிதப் பை செய்யும் நிறுவனத்தில் வேலைபார்த்து வந்த இவருக்கு இதற்கான ஒரு இயந்திரம் கண்டறியும் யோசனை பிறந்தது.

- ஒரே மாதத்துக்குள் இந்த இயந்திரத்தை வடிவமைத்தார். ஆறே மாதங்களில் மரத்தாலான மாதிரி ஒன்றை உருவாக்கினார். இந்த இயந்திரம் காகிதத்தை வெட்டி, மடித்து, ஒட்டிவிடும். இந்த மாதிரி இயந்திரம் 1000-க்கும் மேற்பட்டப் பைகளைத் தயாரித்தது. இதற்கான உரிமம் கோர, இதைவிட சிறப்பாக செயல்படக்கூடிய இரும்பாலான இயந்திரத்தை தயாரிக்க விரும்பினார்.

- இந்த மாடலை உள்ளூர் கடைக்கு எடுத்துச்சென்று, அங்குள்ள இயந்திரங்கள் உருவாக்கும் வல்லுநரோடு ஒன்றிணைந்து இதை இரும்பில் தயாரித்தார். திருப்தியான வடிவில் வந்த பிறகு உரிமத்துக்காக விண்ணப்பித்தார். ஆனால், இவரது இயந்திர வடிவமைப்பு முறைகளை வேறு ஒருவர் திருடி, வடிவமைத்து ஏற்கெனவே காப்புரிமை பெற்றுவிட்டார்.

- பின்னர் அவர் மேல் வழக்குத் தொடுத்து வெற்றிப்பெற்றார் மார்கரெட். 1879-ம் ஆண்டில் இவருக்கு இதற்கான காப்புரிமை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவரது புகழ் பரவியது. உலகம் முழுவதும் காகிதப் பைகள் பயன்படுத்தப்பட்டன. ஈஸ்டர் பேப்பர் பேக் கம்பெனியைத் தொடங்கினார்.

- ஷூக்களின் அடிப்பாகத்தை வெட்டும் இயந்திரம், தையல் இயந்திரத்தின் உருளை, பேப்பர் ஃபீடிங் மிஷின், எண்ணிடும் கருவி, உருளைப் பரப்புகளைத் துளைக்கும் அல்லது இழைக்கும் தானியங்கி கருவி உள்ளிட்ட ஏராளமான இயந்திர சாதனங்களைத் தொடர்ந்து கண்டுபிடித்துக்கொண்டே இருந்தார்.

- இவரது 70-வது வயதில்கூட தினமும் இருபது மணிநேரம் வேலை செய்தார். ஏறக்குறைய 100 கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார்.

- பள்ளிப் படிப்பைக்கூட முடிக்க முடியாத சூழல், வறுமைத் துயர், அங்கீகாரம் மறுக்கப்பட்ட அவலம் உள்ளிட்ட தடைகளைத் தகர்த்து, படைப்பாற்றல் துணையுடன் எளிய ஆனால், முக்கியத்துவம் வாய்ந்த பல இயந்திர சாதனங்களை உலகுக்குத் தந்த சாதனைப் பெண்மணி மார்கரெட் நைட் 1914 அக்டோபர் 12இல் 76-ம் வயதில் மறைந்தார்.

ராஜ்குமாரி அம்ரித் கவுர்

லயன் MJ F வெங்கடேசன்
நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம், கோவை

இந்திய சுதந்திரப் போராட்டத்திலும், சுதந்திர இந்தியாவின் மருத்துவத் துறையை கட்டமைப்பதிலும் மிக முக்கிய பங்காற்றிய ராஜ்குமாரி அம்ரித் கவுர் *(Rajkumari Amrit Kaur)* அவர்களின் வரலாற்றை இங்கே விரிவாகக் காண்போம்.

அவர் ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், காந்திய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தனது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் ஏழை எளிய மக்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.

ராஜ்குமாரி அம்ரித் கவுர் *(1889–1964)*: ஓர் அறிமுகம்

இந்தியாவின் முதல் சுகாதாரத் துறை அமைச்சராக *(First Health Minister)* பதவி வகித்தவர் இவர். மகாத்மா காந்தியின் மிக நெருங்கிய உதவியாளராகவும், அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராகவும் இருந்தார்.

1. பிறப்பு மற்றும் பின்னணி (கிறிஸ்தவ வேர்கள்)

* பிறப்பு: பிப்ரவரி 2, 1889 அன்று லக்னோவில் (உத்தரப் பிரதேசம்) பிறந்தார்.

* குடும்பம்: பஞ்சாபின் கபுர்தலா *(Kapurthala)* அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்.

* மதம் மற்றும் தியாகம்: இவரது தந்தை ராஜா ஹர்னம் சிங் (Raja Harnam Singh). இவர் சீக்கிய மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர். கிறிஸ்தவத்தை தழுவிய காரணத்தினால், ஹர்னம் சிங் தனக்கு கிடைக்கவேண்டிய கபுர்தலா அரியணையை (அரசர் பதவியை) இழந்தார். இந்த தியாக வரலாறு அம்ரித் கவுரின் வளர்ப்பில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

* கல்வி: இங்கிலாந்தில் உள்ள டார்செட் (Dorset) பள்ளியிலும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார்.

2. சுதந்திரப் போராட்டத்தில் பங்கு

இங்கிலாந்தில் படிப்பை முடித்துவிட்டு இந்தியா திரும்பிய பிறகு, கோபால கிருஷ்ண கோகலே மற்றும் மகாத்மா காந்தி ஆகியோரின் தாக்கத்தால் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்.

*காந்தியின் செயலர்: 1930 முதல் 16 ஆண்டுகள் மகாத்மா காந்தியின் தனிச்செயலராகப் பணியாற்றினார். காந்தியின் சபர்மதி ஆசிரமத்தில் எளிய வாழ்வை மேற்கொண்டார்.

* உப்பு சத்தியாகிரகம் (1930): தண்டி யாத்திரையில் தீவிரமாகப் பங்கேற்றார். இதற்காக ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

* வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942): இந்த போராட்டத்தின் போது முன்னின்று செயல்பட்டதனால், மீண்டும் கைது செய்யப்பட்டு அம்பாலா சிறையில் கொடூரமான தனிமைச் சிறைவாசத்தை அனுபவித்தார்.

* பெண்கள் உரிமை: பால் விவாகம் மற்றும் தேவதாசி முறைக்கு எதிராகக் கடுமையாகப் போராடினார். 1927ல் 'அகில இந்திய பெண்கள் மாநாட்டை' (AIWC) நிறுவ உதவினார்.

3. தேசக் கட்டுமானத்தில் பங்கு (சுதந்திரத்திற்குப் பின்)

சுதந்திர இந்தியாவின் வளர்ச்சியில் இவரது பங்கு அளப்பரியது.

* அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய குழுவில் ஒருவராக இருந்தார். சிறுபான்மையினருக்கான தனி இட ஒதுக்கீட்டை எதிர்த்து, அனைவரும் சமம் என்ற அடிப்படையில் போட்டியிட வேண்டும் என்று வாதிட்டார்.

* முதல் சுகாதார அமைச்சர் (1947-1957): ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் இந்தியாவின் முதல் சுகாதாரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். ஆசியாவிலேயே அமைச்சரான முதல் பெண்மணி இவர்தான்.

* எய்ம்ஸ் (AIIMS) மருத்துவமனை: டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (AIIMS) உருவாகக் காரணமானவர் இவரே. இதற்காக நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற நாடுகளிடமிருந்து நிதியுதவி பெற்றார். எய்ம்ஸ் மருத்துவமனையின் முதல் தலைவராகவும் செயல்பட்டார்.

4. கிறிஸ்தவ விழுமியங்களும் சேவையும்

ராஜ்குமாரி அம்ரித் கவுர் ஒரு தீவிரமான கிறிஸ்தவர். பைபிள் வாசிப்பும், இயேசு கிறிஸ்துவின் சேவைக் கோட்பாடுகளுமே அவரை சமூக சேவைக்குத் தூண்டின.

ஆதாரங்கள் (References)

ராஜ்குமாரி அம்ரித் கவுரின் வரலாற்றை உறுதிப்படுத்தும் சில முக்கிய ஆதாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*AIIMS Official History: எய்ம்ஸ் மருத்துவமனையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் "The Founder" என்ற பகுதியில் அம்ரித் கவுரின் பங்கு பற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

* Constituent Assembly Debates (CAD): இந்திய நாடாளுமன்ற ஆவணக்காப்பகத்தில் உள்ள அரசியல் நிர்ணய சபை விவாதக் குறிப்புகள்.

* புத்தகம்: Rajkumari Amrit Kaur by Aruna Asaf Ali & G.N.S. Raghavan (National Book Trust, India).

* காந்தியின் கடிதங்கள்: "Letters to Amrit Kaur" என்ற தலைப்பில் மகாத்மா காந்தி அவருக்கு எழுதிய கடிதங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

* Rajya Sabha Archives: மாநிலங்களவை ஆவணங்களில் அவர் அமைச்சராகப் பணியாற்றிய காலத்திய குறிப்புகள்.

முடிவுரை

1964ஆம் ஆண்டு பிப்ரவரி 6 அன்று ராஜ்குமாரி அம்ரித் கவுர் காலமானார். ஒரு இளவரசியாகப் பிறந்தாலும், சுகபோகங்களைத் துறந்து, ஒரு எளிய கதர் ஆடை அணிந்த கிறிஸ்தவத் துறவியைப் போல தேசத்திற்காக வாழ்ந்தவர் அவர்.

புதிய வெளியீடுகள்







விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639